
# மண்ணும் மக்களும்

## பண்பாட்டு ஆய்வு மாத இதழ்

www.aatrupadai.com

OCTOBER –2024 இதழ்–10 புரட்டாசி – ஐப்பசி



ஆற்றுப்படை வெளியீடு

# மண்ணும் மக்களும்

பண்பாட்டு ஆய்வு மாத இதழ்

[இதழ்-10] [அக்டோபர்] [2024]

பதிப்புரிமை
**கட்டுரை ஆசிரியர்களுக்கு**

ஆக்கம்
**வே. பார்த்திபன்**

தொகுப்பு
**பா. பிரபாகரன்**
**அ.சி. நடராஜன்**

ஆற்றுப்படை குழு
*979 007 6772 / 902 551 6415*

இந்த ஆய்வு மாத இதழ், வணிக நோக்கம் ஏதுமின்றி தகவல்களை அனைவரிடமும் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதிலுள்ள தகவல்கள் அனைத்தும் கட்டுரையாசிரியர்களுக்கே சொந்தம். இந்த கருத்துகளை பயன்படுத்த எண்ணினால் கட்டுரையாளர்களிடம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

1. சங்ககாலத் தமிழர் கடல் வணிகம் - 01
- **மா.மாரிராஜன்**

2. எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்ட (பானை உறி/பானை ஒரி) தமிழி எழுத்தில் எழுதப்பட்ட பானை ஓடு - 10
- **நெடுங்கேணி சானுஜன்**

3. புதுக்கோட்டை மாவட்டத்தில் சில நினைவு தூண்கள் (பகுதி - 2) - 14
- **நா.நாராயண மூர்த்தி**

4. கல்லும் சொல்லும் - 21
- **சபா**

5. உடையாநத்தம் தாய் தெய்வ சின்னம் - 28
- **பாலாஜி கிருஷ்ணமூர்த்தி**

6. கோயிற் கட்டிடக்கலை அறிமுகம் (பாகம் #10) - 31
- **விஜய் பட்**

7. பள்ளிச்சந்த கல்வெட்டு - 39
- **ஸ்ரீநிவாஸ்.ஜி**

8. கருந்தலை அரிவாள் மூக்கன் - 42
- **ப.அ.சரவண மணியன்**

# மண்ணும் மக்களும்


09. கண் காட்டினார் - 46

- **அன்பு வந்தியத்தேவன்**

10. வானியல் அறிவோம் - 49

- **பாலா பாரதி**

11. தமிழக சிற்றரசர்கள்-ஆய் மன்னர்கள் - 53

- **வே.பார்த்திபன்**

12. திருப்புறம்பியம் – II - 67

- **ப.காளீஸ்வரன்**

13. மகாபாரதம் ஒரு பார்வை (பாகம்-1) - 77

- **வெ.பாலமுரளி**

14. சங்க இலக்கியங்களில் பறை - 83

- **சிவகெளரி கீரிஷ்குமார்**


15. வளரியும் வல்லயமும் - 85

- **விஜய் பாண்டியன்**

16. மறைந்து வரும் வைக்கோல் போர் தலை கூட்டும் பழந்தமிழர் தொழில்நுட்பம் - 89

- **இராமமூர்த்தி நாகராஜன்**

# சங்ககாலத் தமிழர் கடல் வணிகம்




பழங்காலம் தொட்டே **வணிகத்தில் தமிழர்கள்** சிறப்புற்று இருந்தனர் என்பதை **சங்க இலக்கியம்** வரையறை செய்கிறது.

குறிப்பாய் கடல் வணிகத்தில் தன்னிறைவு பெற்று இருந்தனர் **தமிழ் வணிகர்கள்**.

**பட்டினப்பாலை** என்னும் சங்க இலக்கியம் தமிழர்களின் கடல் வணிகம், துறைமுகக் காட்சி, ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்கள், சுங்க அதிகாரிகளின் பணிகள், வணிகர்களின் இயல்பு போன்ற நிகழ்வுகளை பாடல்கள் வழி படம்பிடித்து காட்டுகிறது.

பட்டினப்பாலை கூறும் நிகழ்வுகளை **செயற்கை நுண்ணறிவு** மூலம் காட்சியாகக் காண்போம்.



**மா.மாரிராஜன்**
சோழர் வரலாற்று ஆய்வுசங்கம்,
காரைக்கால்.

சங்காலத் துறைமுகமான புகார் துறைமுகத்தில் பல நாட்டு வணிகக் கப்பல்கள் நின்ற காட்சியை கூறும் பாடல்.( 172 -175)

**"வெளில் இளக்கும் களிறு போலத்**

**தீம் புகார்த் திரை முன் துறைத்**

**தூங்கு நாவாய் துவன்று இருக்கை**

**மிசைக் கூம்பின் நசைக் கொடியும் "**

//நின்றுகொண்டே தன் தும்பிக்கையை அசைத்து ஆடும் யானைகளைப் போன்று இனிய பூம்புகாரின் துறைமுகத்தில் நிறுத்தப்பட்ட பல்வேறு நாடுகளின் கொடிகளையுடைய கலங்கள் காற்றில் அசைந்து ஆடின. //

(பாடல் 176 – 180)

**“மீன் தடிந்து விடக்கு அறுத்து**

**ஊன் பொரிக்கும் ஒலி முன்றில்**

**மணல் குவைஇ மலர் சிதறிப்**


**பலர் புகு மனைப் பலிப் புதவின்**

**நறவு நொடைக் கொடியோடு"**

//மீனை வெட்டி அறுத்து மீன் இறைச்சியைப் பொரிக்கும் ஒலியையுடைய. பலர் புகும் கள் கடையின் முற்றத்தில், மணலைக் குவித்து மலர்களைச் சிதறி பலியைக் கொடுக்கும் கதவுகள் அருகே உள்ள கொடிகளுடன்.//

(பாடல் 181-183)



***"பிற பிறவும் நனி விரைஇ***

***பல் வேறு உருவின் பதாகை நிழல்***

***செல் கதிர் நுழையாச் செழு நகர் "***

*//துறைமுக அங்காடிகளில் விற்பனை செய்யப்படும் பொருட்களின் அடையாளத்தை உருவகப்படுத்தும் பல்வேறு கொடிகள் மிகவும் நெருங்கி பல்வேறு உருவங்களில் இருந்தன. அந்தக் கொடிகளின் நெருக்கத்தால் சூரியனின் கதிர் நுழைய முடியாதபடி இருந்த செழிப்பான புகார் நகரம் //*

*(பாடல் 184 – 193)*

சோழர்களின் துறைமுகமான **காவிரிபூம்பட்டினத்** துறைமுகத்தில் பல்வேறு நாடுகளில் இருந்து வந்து குவிந்து கிடந்த பொருட்களின் பட்டியலைக் கூறும் பாடல்

***"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்..***

***காலின் வந்த கருங்கறி மூடையும்..***

***வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்.***

***குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்.***

***தென்கடல் முத்தும்.. குணகடல் துகிரும்.***


***கங்கை வாரியும் காவிரிப் பயனும்..***

***ஈழத் துணவும் காழகத் தாக்கமும்.***


***அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி..***

***வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு"***


**நிழல் செல் கதிர் நுழையா செழு நகர்.**



**நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்.**




காலின் வந்த கருங்கறி மூடையும்.



வடமலை பிறந்த மணியும் பொன்னும்.




குடமலை பிறந்த அகிலும்.



குடமலை பிறந்த ஆரமும்..



## தென்கடல் முத்தும்.





## குணகடல் துகிரும்.





## கங்கை வாரியும் காவிரிப் பயனும்.










ஈழத்து ணவும் காழகத் தாக்கமும்









*//கப்பல்களில் வந்த குதிரைகள் மற்றும் வண்டிகளில் வந்த மிளகு (கறி). வடமலைப் குடமலையில் இருந்து ஆரமும் அகிலும், தென்கடல் பாண்டி நாட்டு முத்துக்களும், கிழக்குக் கடல் சாவாக நாட்டு பவழம், கங்கை மற்றும் காவிரிக்கரைப் பொருட்களும், ஈழத்திலிருந்து வந்த உணவுப்பொருட்களும், கடாரத்திலிருந்து வந்தப் பொருட்களும் இன்னும் அரியன பெரியன பொருட்கள் பலவும் நிலத்தை நெளிக்கும்படி திரண்டு ஒன்றோடு ஒன்று கலந்து காவிரிபூம்பட்டினம் துறைமுகத்தில் குவிந்து கிடந்தன.//*


**துறைமுகத்தில் இருக்கும் சோழநாட்டு சுங்க அதிகாரிகளின் பணிகளை பதிவு செய்யும் பாடல்.**


***பாடல் (135):***

*"அளந்து அறியா பல பண்டம்*
*வரம்பு அறியாமை வந்து ஈண்டி*
*அருங்கடி பெருங்காப்பின்*
*வலியுடை வல் அணங்கினோன்*
*புலி பொறித்து புறம் போக்கி "*






*//அளந்து அறிய முடியாத பல பண்டங்கள் எல்லை இல்லாது வந்து குவிந்து கிடக்க, பெறுவதற்கு அரிய பெருங்காவலையுடைய வலிமையுடன் மிகுந்த அதிகாரமுடைய சுங்க அதிகாரிகள் சோழ மன்னனுக்குரிய புலிச் சின்னத்தைப் பொறித்து அனுப்பினார்கள்.*

*அதாவது..*

*துறைமுகத்தில் வந்திறங்கிய ஏற்றுமதி, இறக்குமதி பொருட்கள் அனைத்திற்கும் சோழநாட்டின் அரசு முத்திரையான* ***புலிச்சின்னம்*** *பொறிக்கப்பட்டது.*

**வணிகர்களின் இயல்புகளை பதிவு செய்யும் பாடல் *(206 -212):***

**"நெடு நுகத்துப் பகல் போல**

**நடுவு நின்ற நன்னெஞ்சினோர்**

**வடு அஞ்சி வாய் மொழிந்து**


**தமவும் பிறவும் ஒப்ப நாடி**

**கொள்வதூஉம் மிகைகொளாது**

**கொடுப்பதூஉம் குறை கொடாது**

**பல் பண்டம் பகர்ந்து வீசும்**


**தொல் கொண்டி துவன்று இருக்கை"**









*//வணிகர்கள், வளைந்த கலப்பையைக் கொண்டு உழவுத் தொழிலை விரும்பிச் செய்யும் உழவர்களின் நீண்ட கலப்பையின் நடுவில் இருக்கும் பகலாணி போல நடுவு நிலை என்ற குணம்*




நிலைபெற்று விளங்கும் நல்ல உள்ளம் உடையவர்கள்.




பொய் உரைப்பின் தம் குடும்பத்துக்கு பழிச் சொல் வந்து சேரும் என அஞ்சி உண்மையே கூறுவர். வணிகர்கள் தம்முடைய பல பண்டங்களையும் பிறருடைய பல பண்டங்களையும் வேறுபடுத்தி நோக்காமல் ஒப்ப ஆராய்ந்து காண்பர்.

தாம் கொள்ளும் பொருள்களை மிகுதியாகக் கொள்வதில்லை. தாம் கொடுக்கும் பொருள்களையும் குறைவாகக் கொடுப்பதில்லை.

தங்களுக்கு வரக்கூடிய இலாபத்தை வெளிப்படையாகக் கூறி வணிகம் செய்வர். இந்நெறியில் அவர்கள் நின்றமையால் அவர்கள் வணிகத்தில் சிறந்த செல்வத்தால் மிகுந்து விளங்கினர்.//

மேற்கண்ட சங்க இலக்கியப் பாடல் படம் பிடித்துக் காட்டும் நிகழ்வுகளை *AI* தொழில் நுட்பம் மூலம் காட்சியாக உருவாக்கிப் பார்த்தால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சங்க காலத் தமிழர் துறைமுகத்தில் ஓர் உலா வந்தது போன்ற உணர்வு.

**அன்புடன்..**

***மா.மாரிராஜன்.***

# எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்ட (பானை உறி/ பானை ஓறி) தமிழி எழுத்தில் எழுதப்பட்ட பானை ஓடு



நெடுங்கேணி சானுஜன்
*BA(Hons) in History(spl), MA*
இலங்கை

**தமிழ் பிராமி** எழுத்துக்கள் உள்ள பானையோடு **எகிப்தில் "கசீர் அல் கடீம்"** எனும் இடத்தில் அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. கதிரியக்கக்கரிமக் காலக்கணிப்பின் மூலம் இவ்வெழுத்துகள் கி.மு **முதலாம் நூற்றாண்டைச்** சேர்ந்தது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பானையோடு பிரிட்டனில் உள்ள **சவுத்தாம்தன் பல்கலைக்கழகத்தைச்** சார்ந்த தொல்பொருளாராய்ச்சிக் குழுவில் அடங்கிய **பேராசிரியர் டீ.பீகோக்கு** மற்றும் **முனைவர் எல்.புளூ** ஆகியோர் எகிப்திலுள்ள **கசீர் அல் கடீம்** எனும் பழமைவாய்ந்த இடத்தில் அகழ்வாராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டிருக்கும்பொழுது கண்டெடுத்தனர்.

லண்டனில் அமைந்துள்ள பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் பழங்கால மட்கலங்கள் குறித்த ஆராய்ச்சியில் நிபுணத்துவம் வாய்ந்த முனைவர் **ரோபேர்த்தா தோம்பேரு**, கண்டெடுக்கப்பட்ட இந்த பானை இந்தியாவில் தயாரிக்கப்பட்டதென்றும், இப்பானை கொல்கலன் வகையைச் சார்ந்தது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய தொல்லியல் நிபுணரான **ஐராவதம் மகாதேவன்** கண்டெடுக்கப்பட்ட இந்த பானையோட்டில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துகள் கி.மு முதலாம் நூற்றாண்டுக்குரிய தமிழ் பிராமி எழுத்து வகையை சார்ந்தவை என அறுதியிட்டுக்

1799 ஆம் ஆண்டு வாக்கில் நெப்போலியனின் படைகள் எகிப்தை கைப்பற்றும் போது இன்று நைல் நதி மத்தியத்தரைக்கடலில் கலக்கும் இடமான ரொசெட்டா எனும் ஊரில் இருக்கும் ஜூலியன் கோட்டைக் கட்டுமானத்தில்,ஒரு பிரெஞ்சு வீரர் ஒரு எழுத்து பொறிக்கப்பட்ட கற்துண்டை காண்கிறார். பிரெஞ்சு படைகள் ஏனோ அதை பத்திரமாக வைக்க முடிவு செய்கிறார்கள். பின்னர் 1801ஆம் ஆண்டு வழக்கம்போல ஆங்கிலேயர்கள் பிரெஞ்சு படைகளை விரட்டிவிட்டு அலெக்சாந்திரியா நகரை கைப்பற்றுகின்றனர். 1802ல் அந்த கல்வெட்டு பிரித்தானிய அருங்காட்சியகத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது.

கூறினார் இக்கூற்றிற்கான ஆதாரங்களை திரட்டுவதில் அவர், பாண்டிச்சேரியில் அமைந்துள்ள பிரென்சு கல்வி கழகத்தில் பணியாற்றிய மொழியியல் நிபுணரான பேராசிரியர் **சுப்பராயுலு**, புதுச்சேரியில் அமைந்துள்ள மத்திய பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பேராசிரியர் **கே.இராசன்**, மற்றும் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் **வீ.செல்வகுமார்** போன்றோரின் நிபுணத்துவங்களை உதவியாகப் பெற்றுக்கொண்டு இக்கருத்தை வெளியிட்டார்.

அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்டுள்ள பானை ஒட்டில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துகள் ***'பானை ஓரி'*** என ஒலிப்பதாகவும், ***'ஓரி'*** எனும் சொல் தமிழில் ***'உறி'*** (கயிற்றில் நெய்யப்பட்ட வலை) என அழைக்கப்படுவதாகவும், அது மருவி ***'ஓரி'*** என பர்சி எனும் மத்திய திராவிட மொழியில் இன்று வழக்கில் இருப்பதாகவும் ஐராவதம் மகாதேவன் தெரிவித்தார். தற்காலத்தில் கன்னட மொழியில் ***'ஒட்டி'*** என புழக்கத்தில் இருக்கும் சொல் ***'ஓர்ரி'*** எனும் சொல்லின் மருவலாக இருக்கக் கூடும் என அவர் தெரிவித்தார்.

கசீர் அல் கடீமில் கண்டெடுக்கப்பட்ட இக்கலவோட்டில் பொறிக்கப்பட்டுள்ள தமிழ் பிராமி எழுத்துக்களை 'ஒர்றி' எனவும் வாசிக்கலாம், ஆனால் பெரும்பாலும் தமிழ் பிராமியை பொறுத்தமட்டில் ஒரே விதமான ஒலிகளை இரட்டிப்புப் செய்யாது என்பது குறிப்பிடத்தக்கது.

இதே போன்ற அகழ்வாராய்ச்சியொன்று கசீர் அல் கடீமில் 35 ஆண்டுகளுக்கு முன்பு நடாத்தப்பட்டது இதில், தமிழ் பிராமி பொறிக்கப்பட்ட கி.பி முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த இரண்டு பானையோடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதே போன்ற தமிழ் பிராமி பொறிக்கப்பட்ட பானையோடுகள் 1995 ஆம் ஆண்டில் எகிப்தின் பெரேனிக்கே எனும் பழங்கால உரோமானியர்களின் குடியிருப்புப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக ஐராவதம் மகாதேவன் தெரிவித்திருந்தார்.

மேற்கத்திய இலக்கியங்களிலும், தமிழ் சங்க கால இலக்கியங்களிலும் குறிப்பிட்டுள்ளது போல உரோமானியர்களுக்கும் தமிழர்களுக்கும் செங்கடல் வழி வணிகத் தொடர்பானது நூற்றாண்டின் ஆரம்பக் காலக்கட்டத்திலேயே கொடிக்கட்டி பறந்ததை இத்தகய கண்டுபிடிப்புகள் ஆதாரப்பூர்வமாக நிரூபித்துள்ளன.

***எகிப்தில் கிடைத்த இப்பானை ஓடுடின் வாசிப்புக்கள்*** 👇

***பானை உறி (ஐராவதம் மகாதேவன்)***

***பனை ஓரி (நடன காசிநாதன்)***

எகிப்தில் ***க்வாசீர்-அல்-க்வாதிம்*** என்ற இடத்தில் கிடைத்த பானை ஓட்டில், ***தமிழ் பிராமி*** எழுத்து கிடைத்திருப்பது ஆய்வாளர்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தது அந்தச் சொல்லைப் ***"பானை உறி"*** என்று ஆய்வாளர்கள் படித்துள்ளனர். அப்பானையில் எழுதியிருக்கும் எழுத்துகள் மட்பானையின் வெளிப்புறத்தில் இரு பக்கமும்

எழுதப்பட்டிருக்கும் "பானை உறி" என்ற இந்தத் தமிழ்ப் பிராமி எழுத்துக்கு விளக்கமானது, "உறியில் தொங்கவிடப் பட்டிருக்கும் வகைப் பானை என்று ஐராவதம் மகாதேவன் கூறியுள்ளார்.

நடன காசிநாதன் இக்கருத்தை மறுத்து, "பேச்சு வழக்கில் உறிப் பானை என்றுதான் சொல்வார்களே தவிர, "பானை உறி" என்று சொல்லமாட்டார்கள் என்று மேற் கூறிய கருத்துக்கு மறுப்புக் கூறி, அவ்வெழுத்துகளைப் **"பனை ஓரி"** என்று படித்து, அதற்குப் **"பனந்தாரை அணிந்திருந்த ஓரி எனும் அரசன் பெயரைக் குறிக்கிறது"** என்றார்.

ஆனால், இவை எல்லாவற்றையும்விட முனைவர் அமுதன் என்பவர் குறிப்பிடும் கருத்துப் பொருத்தமுடையதாய் உள்ளது.

அங்கே பலராலும் அதிகமாக பார்வையிடப்பட்ட பொருளாக அது இருக்கிறது. அதனை ஆய்வு செய்த மொழியியல் வல்லுனர்கள் உற்சாகமடைந்தனர். ஏனெனில், ஒரே பொருளடக்கம் சிறு சிறு வேறுபாடுகளோடு மூன்று வெவ்வேறு மொழிகளில் எழுதபட்டிருந்தன. அம்மொழிகள், பழங்கால எகிப்திய குறிப்பெழுத்து, பிற்கால எகிப்திய கலப்பு மொழி ஒன்று பின்னர் கிரேக்கம். 1803 ல் தொடங்கிய ஆய்வு 1822ல் நிறைவடைந்தது. பாரீஸ் நகரில் ஜீன் பிரங்கோய்ஸ் சம்போலியன் என்பவரால் பண்டைய எகிப்தின் குறிப்பெழுத்துக்கள் உலகிற்கு மீட்டுத் தரப்பட்டன.

அந்த கல்வெட்டு இன்றளவும் இங்கிலாந்து அருங்காட்சியகத்தில் இருக்கிறது.

அவர் கூறியுள்ளதாவது:- எகிப்தில் கிடைத்த இந்த தமிழ் - பிராமி எழுத்துகளையுடைய இப்பானை ஓட்டில், உணரப்பட வேண்டியது பானையின் எதிரெதிர் இரு புறங்களிலும் "பானை உறி" என்று பொறிக்கப்பட்டிருப்பதுதான்.

உறி (அது பானையைக் குறிப்பது) என்ற சொல், தமிழில் தொல்காப்பியத்தில் "முகத்தல் அளவை"ப் பொருளில் வருகிறது. "உரி வரு காலை, நாழிக் கிளவிஇறுதி இகரம் மெய்யொடும் கெடுமேடகாரம் ஒற்றும் ஆவயினான. (தொல். உயிர் மயங்கியல்:- நூற் - 38)

நாழி என்பது ஒருபடியையும், உரி என்பது அரைப்படியையும் குறிக்கும். அரைப்படி பானை என்பது இப்பானை எழுத்தின் பொருளாகும். எனவே, இது அரைப்படியை அளக்கும் பானையாகும் என்ற இவருடைய இக்கருத்தே ஏற்புடையதாகத் தெரிகிறது.

***-நெடுங்கேணி சானுஜன்.***

***Reference:***

▪*Mohamed Kenawi, 2019, Kom al-Ahmer - Kom Wasit 1 Excavations in the Metelite Nome, Egypt ca. 700 BC-AD 1000, ARCHAEOPRESS PUBLISHING LTD*

▪*Ambrish Gupta , 2015, Ancient Tamil Brahmi Script Found in Egypt and Oman*


2000 year old Tamili Script found
on the Red Coast Sea of Egypt
Pottery Inscription in Tamil giving the name
"Panai Ori" or "Panai Uri"



# புதுக்கோட்டை மாவட்டத்தில் சில நினைவு தூண்கள்

(பகுதி - 2)



**நா. நாராயண மூர்த்தி**,
உதவிப் பொறியாளர்,
வேளாண்மைப் பொறியியல் துறை,
கீரனூர், புதுக்கோட்டை மாவட்டம்.





### தலைநீராழி கால்கள்:

**புதுக்கோட்டை** மாவட்டம் **இலுப்பூர்** தாலுகாவின் வடகிழக்கில் அமைந்துள்ளது **தென்னலூர்** என்னும் **திருநல்லூர் கிராமம்**.

காவிரி ஆற்றின் துணையாறுகளில் ஒன்றான **கோரையாறு** என்னும் காட்டாறின் கரையில் அமைந்துள்ள இந்த கிராமத்தில் மாரியம்மன் கோவிலும், ஜல்லிக்கட்டும் சுற்று வட்டாரத்தில் மிக பிரபலம். தென்னலூர் மாரியம்மன் இன்றுவரை கூரை வேய்ந்த கருவறையிலே குடியிருக்கிறார். இப்பகுதியில் ஜல்லிகட்டு காளைகளை வளர்க்க புதிதாக வாங்கி வருபவர்கள் மாரியம்மன் கோவில்முன் உள்ள தூணில் காளையை கட்டி வணங்கிய பின்னரே வீட்டிற்கு அழைத்து செல்லும் வழக்கம் நடைமுறையில் பின்பற்றபடுகிறது. அதேபோல் தொன்னலூர் மாட்டு வேடிக்கையில் பரிசுகள் எதுவும் அறிவிக்கபடுவதில்லை. இருப்பினும் திருவிழா ஜல்லிகட்டின்போது நூற்றுக்கணக்கான காளைகள் வாடியில் இருந்து அவிழ்க்கப்படுகின்றன. தென்னலூர்



மாட்டுவேடிக்கையில் மாடு அவிழ்க்கபடுவது தொடர் பண்பாடாக இப்பகுதி மக்களால் கருதப்படுகிறது.





இத்தகைய நாட்டார் மரபுகளை கொண்ட தென்னலூர் கிராமம் பல வரலாற்று சின்னங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. ஊரின் வடக்கே சமண தீர்த்தங்கரர் சிற்பம். தெற்கே நல்லூர் குளத்துகரையில் பெரிய லிங்க திருமேனி, தவ்வை அன்னை, நந்தி சிற்பங்களுடன் சிதலமடைந்த கோவில் எச்சங்களையும், கி.பி பத்தாம் நூற்றாண்டு கல்வெட்டுகளையும் நாம் காணலாம். வரலாறு சிறப்புமிக்க இவ்வூரின் மாரியம்மன் கோவில் திருவிழாவின்போது இரவு கோவிலின் வடபுறம் ஊன்றபட்டிருக்கும் மூன்று கல்தூண்களுக்கு இடையே அருள்வாக்கு கூறும் நிகழ்வு நடைபெறுகிறது.

எழுத்து பொறிப்புகளுடன் காணப்படும் காணப்படும் இந்த தூண்கள் கடந்த பகுதியில் குறிப்பிட்ட நினைவுதூண்களின் வடிவமைப்பினை ஒத்துள்ளன. இத்தூண்கள் எழுத்தமைதியை கொண்டு கி.பி 10 மற்றும் 12 ம் நூற்றாண்டை சேர்ந்ததாக கருதப்படுகின்றன. இந்த தூண்களில் ஒன்றில்

**கிழவன் உத்தமன் எனும் திருச்சிற்றம்பல வேளார் கிழத்தியார் தலைந்தகல்**

***(*பு.வ.க - 26)***

என்ற செய்தியும்,

மற்றொரு தூணில்

**திருநல்லூர் வேளார் ஆளுநாயக்கனான செம்பியதரையர் கிழத்தியார் தலை நீரனிவு**

***(*ஆவ - 28, ப- 80)***



என்ற செய்தியும் பொறிக்கப்பட்டுள்ளது. இதே இலுப்பூர் வட்டத்தில் மற்றொரு கிராமமான இருந்திராபட்டி ஊராட்சி, குறும்பட்டியில் குறுங்குளம் என்னும் பாசன கண்மாய் அமைந்துள்ளது. இந்த குளத்தின் வடக்கு மடையில் பழமையான குமிழிகால்கள் தற்போது பயன்பாடு இன்றி அமைந்துள்ளன. இந்த தூண்கள் இரண்டும் ஒன்று போல் இல்லை. வெவ்வேறு இடங்களிலிருந்து இவை கொண்டுவரப்பட்டு மடைக்காக பயன்படுத்த பட்டிருக்கவேண்டும். கடந்த பகுதியில் குறிப்பிட்ட நினைவு தூண்களின் வடிவமைப்பினை ஒத்துள்ள இவ்விரு தூண்களிலும் கி.பி 10 ம் நூற்றாண்டை சேர்ந்த இரு கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

மேற்கு தூணில்

**கிழவன் பவளகுன்றன் எனும் கண்டாங்குச வேளானுக்கு தலை நீராழிகால்**

***(*தினத்தந்தி - 2020)***

என்ற செய்தியும்,

கிழக்கு தூணில்

**வைய்கை சூறி எனும் உத்தமசோழ உறத்தூர் நாட்டு கிழானுக்கு தலை நீராழிகால்**

***(*தினத்தந்தி - 2020)***

எனற செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் **பொன்னமராவதி வட்டம், நெரிஞ்சிக்குடி** கிராமத்தில் **பெருமாள் கோவிலுக்கு** முன்பு இவ்வகை நினைவு தூண் ஒன்று சற்று அழகிய வேலைப்பாடுகளுடன் ஊன்றப்பட்டுள்ளது. இத்தூணில் காணப்படும் கி.பி பத்தாம் நூற்றாண்டை சேர்ந்த கல்வெட்டு



**சேந்தம் பராந்தகனாருக்கு தலை நீராழி நிலை நாட்டின கற்கால்**

***(*பு.வ.க - 190)***

என்ற செய்தியை தருகிறது. அதேபோல் **விராலிமலை வட்டம் சாரணக்குடி கிராம நத்தங்காட்டில்** ஊன்றபட்டுள்ள இவ்வகை தூணில் காணப்படும் கி.பி *10* ம் நூற்றாண்டை சேர்ந்த கல்வெட்டு

**ஏரியூர் நாட்டு தஞ்சாவூர் கூற்றத்து குருக்காடி கிழான் ஆக்களாண்ட பெரிய நம்பிக்கு தலை நீராழி நாட்டிய கால்**

***(*பு.வ.க - 20)***

என்ற தகவலை தருகிறது. மேற்கண்ட தூண்கள் அனைத்தும் உருவமைப்பில் சிறிது மாறுபட்டாலும், கடந்த பகுதியில் குறிப்பிட்ட அடிப்பகுதி சதுரம் அல்லது செவ்வகம், நடுவில் எண்பட்டை வடிவம், கழுத்துப்பகுதியில் வரந்தை கோடுகள் மற்றும் தலைப்பகுதி வட்டம் அல்லது அரைவட்ட வடிவில் பொது உருவ ஒற்றுமைகளுடன் அமைந்துள்ளன. இந்த தூண்கள் பெரும்பலும் ஊர் கிழார்களுக்காக எடுக்கபட்டுள்ளன. இந்த நினைவு தூண்களில் குறிப்பிடப்படும் தலை நீராழி, தலை நீரனிவு என்ற சொற்கள் குறித்து விரிவான ஆய்வுகள் தேவை.

பெயர்கள் மட்டும் பொறிக்கப்பட்டுள்ள இவ்வகை நினைவு தூண்கள் குறித்து அடுத்த பகுதியில் காண்போம்.



இறந்தவர் நினைவாய் ஒரு பெரும் கல்லெழுப்பி வணங்கியதும், பின்னர் கி.மு 4 ம் நூற்றாண்டு அளவில் அக்கற்களில் இறந்தவரின் பெயரையும், ஊரினையும் இறந்த காரணத்தினையும் கல்லில் பொறித்துள்ளனர். புலிமான் கோம்பை, தாதபுரம், பொற்பனைக்கோட்டை நடுகற்கள் இந்நிகழ்வை எடுத்துக்காட்டுகிது. அதற்கடுத்ததாய் இறந்தவரின் உருவத்தினை ஒரு கோட்டுருவமாய் வரைந்துள்ளனர். இவ்வகை உருவங்கள் கிருஷ்ணகிரி, தர்மபுரி பகுதிகளில் கிடைக்கிறது!

***அன்புடன்,***

***நா. நாராயண மூர்த்தி***

***தரவுகள்:***

*பு.வ.க - புதுக்கோட்டை வட்டார கல்வெட்டுகள், திரு. கரு. இராசேந்திரன் – 2017

*ஆவ - ஆவணம் இதழ் - 28, 2017

*தினத்தந்தி செய்தி - மரு. திரு. கலைக்கோவன் குழுவினரின் குரும்பட்டி மடை கல்வெட்டு கண்டெடுப்பு – 2020.



# கல்லும் சொல்லும்



ச.பாலமுருகன்
அலுவலக மேலாளர் (பொது)
மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்
திருவண்ணாமலை

# வெள்ளம்தாங்கீஸ்வரரர் கோயில் :

# சம்புவராயர் கட்டிய கோயிலா?











ஊரெல்லாம் பண்டைய கோயில் கொண்டுள்ள பகுதியாக **திருவண்ணாமலை** மாவட்டம் **கலசபாக்கம்** வட்டத்தினைக் கூறலாம். இந்த பகுதியில்தான் அதிக அளவிலான பண்டைய புராதனக் கோயில்கள் உள்ளன. இந்த வட்டம் **மேல்சோழங்குப்பம் முதல் ஆணைவாடி** காலூர் வரை சுமார் 40 கி.மீ. நீண்டுள்ளது- ஒவ்வொரு ஊரிலும் ஒரு புராதனக் கோயில் அமைந்துள்ளது.


இப்பகுதியில் பல கோயில்கள் காலாத்தால் மண்மூடியும் சில கோயில் சிதைந்தும் ஒரு சில கோயில்களே முழுமையாக அமைப்பில் காணக்கிடைக்கிறது. இந்த வட்டத்தில் உள்ள **கரைகண்டதலங்கள், கைலாயத்தலங்கள், பர்வதமலை, கடலாடி, காப்பலூர்** ஆகிய இடங்களில் புகழ்பெற்ற கோயில்கள் உள்ளன. ஆனால் பாழடைந்த, புதையுண்ட கோயில்களும் பல உள்ளன. அவற்றில் வரலாற்று சிறப்பு மிக்கதும் காணத்தகுந்ததுமாகிய கோயிலே **வெள்ளந்தாங்கீஸ்வரர்** கோயில் ஆகும். மேலும், 100 மேறப்பட்ட நடுகறகள் உள்ளன. வழிபோக்கு மண்டபங்கள், மலைகள், ஆறுகள் என ஜவ்வாதுமலை அடிவாரத்தில், இயற்கை அன்னையின் மடியில் தவழும் பகுதியே இந்த கலசபாக்கம் பகுதி.

வெள்ளந்தாங்கீஸ்வரர் கோயில் **பர்வதமலையின்** மலைவலப்பாதையில் **சீனந்தல்** கிராமத்தில் பர்வதலையின் அடிவாரத்தில் மரங்கள் சூழ ரம்மியமாக காட்சி தரும் கோயில் ஆகும். இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம் முகமண்டபம், அம்மன் சந்நிதி உட்பட பல சந்நிதிகள் உள்ளன. இக்கோயிலி 1941/42 வாக்கில் இந்தியத் தொல்லியல் துறை ஒரு கல்வெட்டினை பதிவு செய்து அதன் குறிப்புகளை வெளியிட்டுள்ளது. முற்று பெறாத கல்வெட்டின் குறிப்பில் 1330 குழி நிலம் வரி நீக்கி வெள்ளந்தாங்கீஸ்வரர் கோயில் வழிபாடு மற்றும் இதர தேவைகளுக்கு வழங்கப்பட்டது என்றும் வெள்ளிக்கிழமை தோறும் திருவண்ணாமலை கோயில் பண்டாரத்தார் நினைவாக அருந்தாமுலை நாச்சியார் கோயில் வழிபாட்டிற்கும் தானமாக நிலம் விடப்பட்ட செய்தி குறிக்கப்பட்டுள்ளது. இங்கு உண்ணாமுலை என்பது அருந்தாமுலை என்று குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். மேலும் இவ்வூரில் உள்ள மற்றொரு சிவன் கோயிலிலும் தானம் விடப்பட்ட கல்வெட்டுகள் உள்ளன.

திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம் 2020 இல் மேற்கொண்ட கள ஆய்வின் போது மேலும் 3 துண்டு கல்வெட்டுகளை கண்டறிந்து படியெடுத்தது. துண்டு கல்வெட்டுகள் என்பதால், இந்த கல்வெட்டுகளை படிக்கமலே பல ஆண்டுகள் சென்றது. அண்மையில் மீண்டும் அக்கல்வெட்டுகளை ஆய்வு செய்யும் போது முக்கியத் தகவல்கள் சில கிடைத்தன.

1.வெள்ளந்தாங்கிஸ்வரர் கோயில் பெயர் கல்வெட்டிலும் வெள்ளந்தாங்கீஸ்வரர் என்றே வருகிறது. பெயர் காரணமாக ஊர் மக்கள் அருகில் உள்ள மிருகண்டா ஆற்றில் வெள்ளம் ஏற்பட்ட போது ஊர் அழிய நேர்ந்ததாகவும் ஊர் மக்கள் வேண்டுதலின் படி சிவன் காத்தருளியதால் அக்கோயிலுக்கு வெள்ளந்தாங்கீஸ்வரர் என்று பெயர் பெற்றதாகவும் குறிப்பிடுகின்றனர். இந்த பெயர்க்காரணம் பொருத்தமான ஒன்றேயாகும். காரணம் பல ஆறுகளில் வெள்ளம் ஏற்பட்டு ஊர் அழிந்ததை கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

2.வெள்ளம்தாங்கீஸ்வரர் கோயில் துண்டு கல்வெட்டு ஒன்று தலைகீழாக இருந்தது. அதில் உள்ள எழுத்தக்களை படித்த போது அது ஸ்வஸ்திஶ்ரீ சம்பூவராயன் ஓலை கூத்தாடும் தேவ நல்லூர் ... என்று குறிப்பிடுகிறது. அதாவது கூத்தாம் தேவ நல்லூர் என்பதும் அப்பகுதியின் பெயராகும். அதில்





குறிப்பிடும் சம்புவராயன் ஓலை என்பது சம்புவராயன் ஆணை என்றும் பொருள்.

3. அம்மன் சந்நிதியில் உள்ள கல்வெட்டில்

**“தாங்கீசுரமுடைய நாயனார்க்கு ..**

**... சந்திராத்தித்த வரையும் செல்ல..**

**இவை சம்புவராயன் எழுத்து.”** ?



என்று உள்ளது இதிலும் சம்புவராயன் என்ற பட்டப்பெயர் கொண்ட ஒருவரின் கையெழுத்தும் குறிப்பிடுகிறது. மற்ற துண்டு கல்வெட்டுகளும் சம்புவராயர் காலத்தியதாகும்.

இந்த கோயிலில் பதிவான கல்வெட்டு விஜயநகர காலத்தியது என்பதால் இதை இதுநாள் வரை விஜயநகர கால கோயில் என்று கருதியிருந்தோம். ஆனால் தற்போது சம்புவராயர் கல்வெட்டுகள் துண்டுகளாக கிடைத்தாலும் அவை சம்புவராயர் காலத்தில் அவர்களால் ஏற்படுத்திய கோயிலாக கொள்வதில் தவறேதுமில்லை. சோழர் கால கல்வெட்டுகள் ஏதும் இந்த கோயிலில் இல்லை.

மேலும் இக்கோயில் சம்புவராயர்கள் காலத்தில் கட்டப்பெற்றிருந்தாலும் விஜயநகர காலத்திற்குப் பின்னர் அது முழுவதுமாக ஏதோ காரணத்தால் அழிந்துபோயிருக்கலாம். அதை சுமார் 200 – 300 ஆண்டுகளுக்கு முன்பு உள்ளூர் மக்களாலம் மறு சீரமைப்பு செய்துள்ளார்கள். அப்போது கல்வெட்டுகளையும் கற்களையும் மாற்றிக் கட்டியுள்ளனார். இதனால் கோயில் அமைப்பும் மாறியுள்ளது. கல்வெட்டுகளும் தடம் மாறின. எந்த கல்வெட்டுகளுக்கும் தொடர்ச்சி இல்லை. அருகில் உள்ள கற்குவியல்களில் இந்த கல்வெட்டுகள் இருக்கலாம்

இந்த கல்வெட்டுகள் அப்பகுதியின் நிலதானம், கடவுள் பெயர், ஊர்பெயர், பர்வதமலையைப் பற்றிய குறிப்பு, என பல அரிய தகவல்களை ஓரளவு மட்டுமே அறியமுடிகிறது. முழுமையாக கிடைத்தால் வரலாற்றில் இக்கோயிலும் இப்பகுதியில் ஏற்றம் பெறும் என்பதில் ஐயமில்லை.

பாழடைந்த இந்த கோயிலை புனரமைப்பு செய்ய நிதி ஒதுக்கியும் இதுவரை அரசால் புனரமைப்பு பணிகள் இதுவரை ஆரம்பிக்கவில்லை.

கோயிலை புனரமைத்தால் வரலாறும் தன்னை புனரமைத்துக்கொள்ளும்.

அந்த நாள் எந்நாளோ?



***-சபா.***

சம்பவங்கள் தொடரும்...

**நன்றி-** சிவலிங்கம்.ப, சக்திவேல், மஞ்சுநாதன், சிவா, கே.வி.பாளையம், குப்புசாமி, மற்றும் பலர்.

**நன்றி-** முனைவர் ப. வெங்கடேசன், வாலாஜா

#vellanthangiswarar

**சம்புவராயர்கள் ஆரணியை அடுத்த படைவீட்டை தலைநகராகக் கொண்டு தொண்ட மண்டலத்தை ஆண்டனர். அவர்களின் ஆட்சி எல்லை பரப்பு வடபெண்ணை முதல் காவிரி வரை பரந்து விரிந்திருந்தது. அவர்கள் வீரசம்புவர் குளிகை என்ற நாணயத்தைப் வெளியிட்டு பயன்படுத்தினர். அவர்கள் கொடியில் காளை இடம்பெற்றிருந்தது. படைவீடு, விரிஞ்சிபுரம் என இரண்டு இடங்களில் அவர்களின் தலை நகரங்கள் செயல்பட்டன. படைவீடு நான்கு பக்கமும் மலைகளால் சூழப்பட்ட இயற்கை அரண்களால் ஆனது. விரிஞ்சிபுரம் கோட்டை பாலாற்றங்கரையில் அமைந்திருந்தது.**

#kalasapakkam

#parvathamalai


#inscriptions

#tchr

#kallumsollum

#திருவண்ணாமலைமாவட்டவரலாற்றுஆய்வுநடுவம்

# உடையாநத்தம் தாய் தெய்வ சின்னம்





**பாலாஜி கிருஷ்ணமூர்த்தி**
**இயந்திரவியல் பொறியாளர்**
**கும்பகோணம்**

அது,

***"ஓம் அக்னிமிலே புரோகிதம் யங்ஞச்ய தேவோ மிருத்விசயம்"***

என்றோ,

***"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார், பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது"***

என்றோ,

***"அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய…"***

என்றோ,

இன்றைக்கு இருக்கும் எந்த மதங்களின் புனித நூல்களிலும் முதல்வரிக்கூட எழுதப்பட்டிருக்காத காலம். ஆதி மனிதன் அப்பொழுதைய சமீபத்தில்தான் குழுக்களாக வாழத்துவங்கியிருக்க வேண்டும். அக்குழுக்களுக்குள் இனங்கள் கூட தோன்றியிருக்க வாய்ப்பில்லை! மெல்ல தன் அறிவால் தன்னால் வெல்லக்கூடிய இயற்கை பதங்களை வெல்லத்துவங்கியிருந்த நேரம். தன் அறிவிற்கு அப்பாற்பட்ட, தன் பலத்தால் வெல்ல இயலாத காரணிகளை இறைந்தும் பயந்தும் காணத்துவங்கிய காலகட்டத்தில், அவைகளை கடந்து சென்றாலும், அவை எங்கும் நிரம்பி இருந்த போக்கினால் மெல்ல அவன் தான் கண்ட புதிர்களுக்கும் பயங்களுக்கும் உருகொடுக்கத் துவங்கினான்.

மனித உருவை ஒத்த சிலைகள் தமிழகத்தில் செஞ்சிக்கருகில் உடையார்நத்தம் என்ற ஊரிலும், ஆதிச்சநல்லூர் அகழாய்வில் கிடைத்த செம்பிலான மனித உருவத்தை ஒத்த சிலையையும் குறிப்பிடலாம். ஆந்திரமாநிலம் கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள லிங்காளா, வாரங்கல் மாவட்டம் தோட்டகுட்டா, சித்தூர் அருகில் மிடிமல்லா , கர்நாடக மாநிலம் பெல்லாரி மாவட்டம் குமாதி, கங்கையாற்றின் கரையோரப்பகுதிகளில் மனித உருவத்தை ஒத்த சிலைகள் காணப்படுகின்றன. இவை தவிர ஜெர்மன், பிரான்ஸ் நாட்டிலும் இதுபோன்ற அமைப்பில் சிலைகள் காணப்படுகின்றன. ஜெர்மன் நாட்டில் கிடைக்கப்பெற்ற ஐவரி சிலை சுமார் 32 ஆயிரம் ஆண்டுகள் பழமையானது என்றும் உலகில் கிடைக்கப்பெற்ற சிலைகளில் தொன்மையானது என்றும் குறிப்பிட்டுள்ளனர்


எதனால் பெண்ணாக உருகொடுத்து வணங்கத்துவங்கினான் என அறியக்கூடவில்லை. எனினும் கீழே முதல் படத்தில் இருக்கும் உருவமே அவன் முதன்முதலில் சிற்பமாக செய்து வணங்கிய **தாய் தெய்வம். ஆதியந்தம் இல்லாக்காலம்** என வழங்கப்படும் காலத்திய தெய்வ வழிபாட்டுச்சிறப்பம் இவள்.

ஒரு பொதுக்கருத்து பரவும் நேரத்தில், அது மற்றக்கருத்துகளையும் உள்வாங்கி பரவுமேயானால் அந்த கருத்து பலங்கொண்டும் வேகமாகவும் பரவும் என்பதற்கேற்ப, இத்தாய் தெய்வ வழிபாடு காலங்காலமாக தொடர்ந்து வந்துக்கொண்டே இருக்கிறது. என் புரிதலின் படி, பொயு ஒன்பதாம் நூற்றாண்டில் இத்தாய் தெய்வ வழிபாடு இரண்டாம் படத்தில் இருப்பது போன்று வைதீக மரபில் இணைந்து பரிணமித்துள்ளது. அதன் பின்பு அடுத்தக்கட்ட பரிணாமம், இன்றைக்கு தமிழகத்தில் பரவலாக வழிபடப்படும் வேழத்திருமகள் உருவமாகவும், காமாட்சி தீப விளக்குகளில் காணப்படும் உருவமாகவும் பரிணாமம் அடைந்துள்ளது. படம் 3.



தமிழகத்தில் இத்தாய் தெய்வ உருவம் இரு இடங்களிலும் கர்நாடகாவில் ஒரே இடத்தில் இரு சிற்பங்களாகவும் காணப்படுகிறது. தமிழகத்தில் இரண்டு சிற்பங்களில் ஒன்று **உடையாநத்தம்** எனும் ஊரில் இருக்கிறது. காட்டின் நடுவே அமைதியாக ஆர்பாட்டமின்றி காலத்தின் ஓட்டத்தில் மனிதனின் எண்ணங்களை மேற்பார்வையிட்டவாறே அமர்ந்திருக்கிறாள் இத்தாய். நீண்ட வரிசைகள் தேவையில்லை. ஆண்-பெண் பாகுபாடுகள் இல்லை. காணிக்கைகள் தேவையில்லை. அவளுக்கும் பக்தர்களுக்கும் இடையில் தரகர்கள் இல்லை. **இவளைக்காண தேவை மரபின் மீதான ஆர்வம் மட்டுமே**.





# கோயிற் கட்டிடக்கலை 10



**விஜய்பட்**
மென்பொறியாளர்
கோவில் கட்டிடக்கலை ஆய்வாளர்
சென்னை.

**_பாகம் பத்து:_**

*சென்ற வாரத்தில் **பதவின்யாச அடிப்படையில் பிரகார லக்ஷணம்** பற்றிப்பார்த்தோம்.*

*இனி..*

## கோயிலின் உறுப்புகள்:

- *அதிஷ்டானம்*
- *பித்தி*
- *ஹாரம் & ஹர்மியம்:*

## ஒரு கோயிலின் உறுப்புகள் என்னென்ன?

*இதை ஆறு அங்கங்களாக பிரித்துக்கொள்வோம்.*

*அவை கீழ்ப்பகுதியான **அதிஷ்டானம்**, மையப்பகுதியான **சுவர்** மற்றும் மேல்பகுதியான **பிரஸ்தரம்**,*

***க்ரீவம் சிகரம், ஸ்தூபி** ஆகியவை.*

## அதிஷ்டானம்:

*இப்போது நாம் அதிஷ்டானம் பற்றிக் காண்போம். அதிஷ்டானத்தில் பல வகைகள் உள்ளன. அவற்றில் ஒரு சில வகைகளை மட்டும் இங்கு காண்போம்.*

*பல்லவர் மற்றும் சோழர் காலக் கோயில்களில் கீழ்க்கண்ட மூன்று தாங்குதளங்களே பரவலாகக் காணப்படுகின்றன.*

*1.பாதபந்த அதிஷ்டானம்*

*2. பிரதிபந்த அதிஷ்டானம்*

*ஒரு அதிஷ்டானத்தில் இடம்பெற்றிருக்கும் உறுப்புகளை வைத்துத்தான் அது எந்த வகையைச் சேர்ந்தது என இனங்காண முடியும்.*

## பாதபந்த அதிஷ்டானம்:

*பாதபந்த அதிஷ்டானம் என்பது குறைந்தபட்சம் நான்கு உறுப்புக்களைக் கொண்டிருக்க வேண்டும். **ஜகதி, குமுதம், கண்டம்** மற்றும் **பட்டிகை** ஆகியவையே அந்த நான்கு. அவை இந்த வரிசையிலேயே அமைந்திருக்கும். கீழே உள்ள படத்தைப் பாருங்கள்.*

பாதபந்த அதிட்டான உறுப்புகள்






*Figure 1 - பாதபந்த அதிஷ்டானம்*



### பிரதிபந்த அதிஷ்டானம்:

பிரதிபந்த அதிஷ்டானம் என்பது என்பது கண்ட பகுதியில் வரிசையாக **யாளிகளைக்** கொண்ட ஒரு வரி அமைந்திருந்தால் அவ்வரியைப் **பிரதிவரி** என்றும் அத்தகைய அதிஷ்டானத்தை பிரதிபந்தத் அதிஷ்டானம் என்று அழைப்போம். பிரதிவரியில் நான்கு உறுப்புகள் இடம் பெற்றிருக்கும். அவை, **ஆலிங்கம், அந்தரி, பிரதிமுகம்** மற்றும் **வாஜனம்** ஆகியவை.




*Figure 2 பிரதிபந்த அதிஷ்டானம்*






*Figure 3 – பிரதிவரி*





*Figure 4 - பிரதிபந்த அதிஷ்டானம்*

### பித்தி சுவர் பகுதி:

ஓர் ஆறங்க விமானத்தின் 2 வது அங்கமான "சுவர்" அல்லது பித்தி பற்றி அறியலாம். ஓர் விமானத்தின் உச்ச அளவிடாக அமைவது இதுவே விமானத்தின் தளங்களை கணக்கிட உதவுவது அதன் சுவர்களின் எண்ணிக்கையே. சுவர்ளை வெறுமனே, அலங்காரமன்றி அமைத்தால் ஓர் ஆலயத்திற்கு அழகு ஏற்படாது என்பதால் பல்வேறு அலங்கார உறுப்புகளையும் வலுவூட்டும் உறுப்புகளையும்





*Figure 5 பித்தி*

சிற்பாசிரியர்கள் மரபு வழி சார்ந்தும் தங்கள் கற்பனை தோய்த்தும் எழுப்புகின்றனர்

இந்த அங்கமான சுவரின் உறுப்புகளாக பொதுவாக நாம் காண்பது கிடைக்கையாக *Horizontal Rows-*, வேதிகை, சுவர், உத்தரம் இவையும்,

நெடுக்கையாக - *Vertical columns* - அணைவுத் தூண்கள், கர்ண பத்தி, அகாரை, சாலைப் பத்தி, பஞ்சரம் கோட்டம் இவையும் அமையும்.




Figure 6 Darasuram


**பிரஸ்தரம்:**

பிரஸ்தரம் என்ற சொல் மறைத்தல் எனப் பொருள்தரும் பிரஸ்தரம் எனும் அங்கமான வர்க்கத்தில் உத்தரம்,வாஜனம்,வலபி.சுபோதம், பிரதிவரி எனும் பெரு உறுப்புகள் கிடைக்கையாக அமைகின்றன இதற்கு மேல் அமையும் வெற்று சம பரப்பு பூமி தேசம் எனப்படும்.

கபோதம் எனும் பகுதியே பிரஸ்தரத்தின் முக்கிய பார்வையாக அமையும். இதில் நாசிகளும், கொடிக்கருக்குகளும் நாவடையும், சந்திர மண்டலம் பூப்பதக்கம் இவை அலங்காரமாக அமைக்கலாம் சுபோதம் கொடுங்கை எனவும் அழைக்கப்படும்.

Figure 7 பிரஸ்தரம்






இந்த கொடுங்கையில் உட்புறத்தில் சட்டங்கள் போன்ற செதுக்கல்கள் மதலைகள் எனப்படும். இதில் பற்பல வகைகளை காணமுடிகிறது. கபோதகத்தின் மேல் குரங்கு. உடும்பு சிம்மம் யாளி போன்றவற்றின் உருவங்களையும் பார்க்கலாம்.






**ஹாரம் & ஹர்மியம்:**

விமானங்களில் கருவறையின் மேலே அதன் வடிவிலேயே எழும் சுவர் ஹர்ம்யம்எனப்பெறும் அதனை ஒட்டி கூடம். பஞ்ஜரம் ஆகிய உறுப்புக்களைக்கொண்டு அணியாக அமையும் **பகுதி ஹாரம்** எனப்பெறும்.

இந்த ஹாரம் ஹர்ம்யத்தின் மீதே பிரிவின்றி அமைந்திருந்தால் அது **அர்ப்பித ஹாரம்** சாற்றப்படாமல் விலகியிருந்தால் அது **அனர்ப்பித ஹாரம்** எனப்பெறும். இரண்டிற்குமான இடைவெளி **அலிந்தம்** எனப்பெறும்

முதல் தளத்தில் துவங்கி மேல் தளங்களிலும்கூட இத்தகைய அனர்ப்பித ஹாரத்தை அமைக்கலாம். இத்தகைய அனர்ப்பிதஹாரம் அமைந்த கிடைத்தவற்றுள் தொன்மையான கற்றளி மல்லையின் தர்மராஜரதமாகும் காஞ்சி வைகுண்டபெருமாள் கோயில் உத்தரமேரூர் வைகுண்டபெருமாள் கோயில் உத்தரமேரூர் கைலாஸநாதர் கோயில், நார்த்தாமலை ஆகியவை இத்தகைய அனர்ப்பித ஹாரங்களைக் கொண்டுள்ளன.


ஹர்மியம்
ஹாரம்



# பள்ளிச்சந்த கல்வெட்டு




**ஸ்ரீநிவாஸ்**
மென்பொறியாளர்
வேலூர்

சமணபள்ளி, சமண ஆசிரியர்களுக்கு நிவந்தமாக வழங்கப்பட்டநிலங்களுக்கு பெயர் பள்ளிசந்தம், பௌத்த விஹாரத்திற்கும் பள்ளிசந்த நிலங்கள் தானமாக வழங்கப்பட்டன, திருவிடையாட்டம் என்பது விஷ்ணு கோவில்களுக்கு வழங்கப்படும் நிலம் மற்றும் திருநாமத்துக்காணி சிவன் கோவில்களுக்கு வழங்கிய நிலத்தின் பெயராக கல்வெட்டில் காணப்படும்.

திருப்பத்தூர் மாவட்டம் குண்டுரெட்டியூர் மலையின் மேல் கங்க மன்னன் ஸ்ரீ புருஷவர்மன் காலத்தை சேர்ந்த பள்ளிசந்த கல்வெட்டு ஒன்று காணகிடைக்கிறது.

8ஆம் நூற்றாண்டை சேர்ந்த இக்கல்வெட்டு தமிழ் வட்டெழுத்தில் எழுதப்பபட்டுள்ளது, மிறைஅடக்கியார் மகன் “கடுகட்டி” என்ற சிற்றரசர் இப்பகுதியில் இயங்கிருந்த ஓர் சமணப்பள்ளிக்கு



நிவந்தமாக வழங்கிய பள்ளிச்சந்த நிலத்தின் எல்லைகளை கல்வெட்டில் குறிபிட்டுள்ளார்.

இக்கல்வெட்டில் குறிப்பிடும் கோவூர்நாடு எயில்நாடு இன்றைய திருப்பத்தூர் ஏலகிரி மலை பகுதிகள் ஆகும், கங்கர்கள் பெங்களூர் மைசூர் கோலார் பகுதிகளை தழைக்காடு பகுதியை தலைநகரமாக கொண்டு ஆட்சிபுரிந்துள்ளனர்.

ஸ்ரீ புருஷவர்மன் காலம் 726-788 25 ஆட்சியாண்டில் இக்கல்வெட்டு பதிவாகியுள்ளது இக்கல்வெட்டின் காலம் 751ஆகும், ஸ்ரீ புருஷவர்மன் பல்லவமன்னன் இரண்டாம் நந்திவர்மன் மற்றும் பாண்டியர்கள் உடன் போர் புரிந்துள்ளார்.

இக்கல்வெட்டில் உள்ள வட்டெழுத்துகள் தூய தமிழ் நடையினைக் கையாண்டு எழுதப்பட்டுள்ளன. 'ஸ்வஸ்திஸ்ரீ' என்ற சொல்லை 'சுவத்திரிசிரி' என்றும் புருஷவர்மன் என்பதை 'புருசவிக்கிரமபருமர்' என்றும் தமிழ்ப்படுத்திக் குறிப்பிட்டுள்ளனர். கங்க மன்னர்கள் சிறந்த சமணப் பற்றாளர்கள் என்பதற்கு இக்கல்வெட்டு சிறந்த சான்றாகும்.

**கல்வெட்டு விவரம்:**

**சுவத்திசிரி புரிச விக்கிரம பருமறக்கு யாண்டிருபத்தைந்தாவது**

**கோவூர் நாடும் மெயின்னாடுமாளும் மிறை அடக்கியார் மகன் கடுகட்டி**

**பெய்த பள்ளிச் சந்தமிதனுக் கெல்லைக் கிடாக்காபனை மீட்டலின் தெற்குறைக்கிட்ட ஆற்றின் மேற்கும் வடக்குங் குமார மங்கலம்**

**நிறை சேர் மீட்டலின் கிழக்குமி ச்சொன்ன**

**எல்லை ஆகாவிட்டா... போக மிது காத்தூட்டுவார்க்கு**

**திரு அம்மொளி நா(ளுஞ் சிறக்க.**

பாலாறு நதிகரையோரம் இருந்த வேலூர் சுற்றுவட்டாரபகுதிகளை அன்று கங்கர்கள் நுளம்பர் ஆட்சிபுரிந்தனர் என்பதற்கு சான்றாக இக்கல்வெட்டுகள் உள்ளன.

# கருந்தலை
## அரிவாள் மூக்கன்







*RED NAPED IBIS - INDIAN BLACK IBIS - PSEUDIBIS PAPILLOSA*

*CONSERVATION STATUS: LEAST CONCERN (POPULATION STABLE)*

*TAMIL NAME* - உடல் முழுவதும் பளபளப்பான கரும்பழுப்பு மற்றும் பச்சை நிறத்திலும், உச்சந்தலையின் பின்புறமும் பிடரியும் சிவப்பு நிறத்திலும், கீழ்நோக்கி வளைந்த அரிவாள் வடிவிலான நீண்ட அலகும், கால்கள் செம்மண் சிவப்பு நிறத்திலும், தோள்பட்டை திட்டு வெண்மை நிறத்திலும் காணப்படும் இவர்தான்ங்க **கருந்தலை அரிவாள் மூக்கன்.**




**சரவணமணியன்.ப.அ**
பொறியாளர்
சூழலியலாளர், வரலாற்று ஆர்வலர்,
காளையார்கோவில்




## உணவு முறையும் வாழிட சூழலும் :

இவரை பெரும்பாலும் சதுப்பு நிலங்களிலும், சமவெளி விளைநிலங்களிலும், ஏரிகளை சுற்றியுள்ள இடங்களிலும், ஆழமற்ற நீர்நிலைகளிலும் தவளை, பல்லி, மீன், தேள் மற்றும் சிறு பாம்புகள் போன்றவற்றை விரும்பி வேட்டையாடி சாப்பிடுறதை பார்க்க முடியுதுங்க.

ஆலமரம், அத்திமரம் மற்றும் பனைமரங்களில் தனது கூடுகளை அமைப்பவர், அவ்வபோது ஆங..ஆங்.. என குரல் கொடுப்பதையும் கேட்க முடியுதுங்க.

## சங்க இலக்கியங்களில் செந்தலை அன்றில் :

சங்க இலக்கியங்களில் இவர் பனைமரங்களில் தனது கூட்டினை அமைப்பதாக எடுத்துரைக்கின்றன. இன்றும் அதே போன்று பனைமரங்களில் தான் பெரும்பாலும் தனது கூட்டினை இவை அமைக்கப்படுகின்றன.

**'ஏங்குவயி ரிசைய கொடுவா யன்றில்',**

**'இறவினன்ன கொடுவாய் பெடையொடு'**

என்ற வரிகளில் அன்றிலின் வாய் பற்றி விளக்கப்பட்டிருக்கின்றது. அன்றிலின் அலகு தடித்துக் கூர்மையானதாகவும், சிறிது வளைந்தும் இருக்கும். சிறுகரும்பேடை என்று அழைக்கப்பட்டிருப்பதால் சாம்பல் நிறமானது என்பது தெளிவாகின்றது. சிறிது கருமையென்ற சொல் சாம்பல் நிறத்தைச் குறிக்கின்றது. அன்றில் பறவையின் உடல் பொதுவாகச் சாம்பல் நிறமானதேயாகும்.

**“எரிய கைந் தன்ன செந்தலை யன்றில்”**

**- தொல்**

**“நெருப்பி னன்ன செந்தலை யன்றில்**

**இறவி னன்ன கொடுவாய்ப் பேடையொடு**

**தடவின் ஓங்குசினைக் கட்சியிற் பிரிந்தோர்**

**கையற நரலு நள்ளென் யாமத்துப்**

**பெருந்தண் வாடையும் வாரார்**

**இதோ தோழிநங் காதலர் வரவே”**

**- குறுந்தொகை *160***



***விளக்கம்:***

*நெருப்பைப் போன்ற சிவந்த தலையையுடைய ஆண் அன்றில் இறாமீனை ஒத்த வளைந்த அலகையுடைய பெண் அன்றிலோடு தடா மரத்தினது உயர்ந்த கிளையின் கண்ணுள்ள கூட்டினிடத்தேயிருந்து ஒலிக்கின்ற செறிந்த இடையிரவையுடைய பெரிய தண்மையையுடைய வாடைக் காற்று வீசும் கூதிர்க் காலத்திலும் தலைவர் வந்தாரிலர்.*

***வட்டார வழக்கு பெயர்கள் :***

*இவருக்கு கருப்பு அரிவாள் மூக்கன் - கருந்தலை அரிவாள் மூக்கன் - கருப்புச்சொண்டன் - செந்தலை அன்றில் - பூந்தலை அன்றில் என தமிழில் பல வட்டார வழக்கு பெயர்கள் உண்டுங்க.*

***காப்பு நிலை -*** *தீவாய்ப்புக் கவலை குறைந்த இனம்.*

*சிறகுகள் விரியும்* 🥰

***அன்பன்,***

***ப.அ.சரவண மணியன்.***

# கண் காட்டினார்



**திரு.அன்புவந்தியத்தேவன்**
**வரலாற்று ஆர்வலர்**
**காக்கைக்கூடு பதிப்பகம்**

*பிற்கால பாண்டியர் காலத்தில் தான் திருப்பதிகங்களை தேவாரம் என்றழைக்கும் முறை தோன்றி, அதன்பின் அந்த சொல்வழக்கு நிலைபெற்றதை அறிய முடிகிறது. இதற்கு சான்றாவணமாக, திருக்குவளை சடையவர்மன் கல்வெட்டினையும், பிரான்மலை வீரபாண்டியன் கல்வெட்டின் வாயிலாகவும் அறிய முடிகிறது.*

*தேவார பாடல்களைக் கோவில்களில் பாடுவோர்க்கு ஊதியம் கொடுக்கும் வழங்கும் பிற்கால பல்லவர்கள் காலத்தில் இருந்து தான் தொடங்கிறது.*

*வேலூர் மாவட்டம் திருவலம் திருவாலீசுவரர் கோவில் மகாமண்டப வடக்குச் சுவரில் மூன்றாம் நந்திவர்ம பல்லவரின் 17 வது ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. அதில் இக்கட்டுரைக்கு முக்கியமானவை மட்டும் காண்போம்.*

**"திருப்பதியம் பாடுவாருள்ளிட்ட**

**பலபணி செய்வார்க்கு நெல்லு**

**நாநூற்றுக்காடியும்"...**

*திருப்பதியம் அதாவது தேவார பாடல் பாடுபவர்களுக்கு 400 காடி நெல்லு ஊதியமாக கொடுக்கப்பட்டது.*

*அதன் பிறகு வந்த சோழர்கள் அவ்வழக்கத்தைப் பின்பற்றினார்கள். அதிலும் திருப்பதியம் பாடுவோர்கள் கண் பார்வையற்றவர்களாக இருந்தால் அவர்களுக்கும் அவர்களை வழிநடத்தி அழைத்துச் செல்வோர்களுக்கும் ஊதியம் கொடுக்கும் வழக்கம் சோழர் காலத்தில் இருந்து தான் தொடங்கிறது என்றால் அது மிகையாகாது. தஞ்சாவூர் மாவட்டம் திருப்பழனம் ஆப்தசகாயேஸ்வரர் கோவில் கருவறை மேற்குச் சுவரில் முதலாம் ஆதித்த சோழரின் 21 ஆவது ஆட்சியாண்டு ஒன்று உள்ளது. (S.I.I. vol -13, No : 295) அது,*

### கல்வெட்டு வாசகம் :

**"கோவிராஜகேசரி பன்மற்கு யாண்டு**

**இருபத்தொந்றாவது …. லகபெருமாள்**

**விண்ணப்பத்தால் க(ண்ண) …….**

**வடிகள்….. பன்னிருவ(ர்)க்குங்**

**கண்காட்டிகளிருவர்க்கு**

**நந்தவானக்குடிகளிருவர்க்குக்**

**காணியாக"………**

### கல்வெட்டு விளக்கம் :

**"கண்ணிழந்தவடிகள் மார் பன்னிருவக்குங்**
**கண்காட்டி இருவருக்கும்"**

கண் பார்வையற்ற *12* பேர்களைத் திருப்பதியம் பாடுவதற்கு நியமித்து அவர்களுக்கு ஊதியமும் கொடுத்து அவர்களுக்கு கண்காட்டும் அதாவது வழி நடத்தி அழைத்து சொல்வோர் இருவருக்கும் ஊதியம் கொடுத்த செய்தியைக் கூறுகிறது என்றும் 'அடிகள்மார்' என்பவர் திருப்பதியம் பாடுவோர்கள் என்றும் முனைவர் திரு. குடவாயில் சுப்பிரமணியம் அவர்கள் தனது "ஓதுவார் மரபும்-தேவார மாண்பும்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

முதலாம் ஆதித்த சோழரைத் தொடர்ந்து பிற்கால சோழர் இரண்டாம் குலோத்துங்க சோழர் ஆட்சியில் கண்காட்னார்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது.


திருவாமாத்தூர் அபிராமேசுவரர் கோவிலில் முதல் திருச்சுற்று மேற்குச் சுவரில் இரண்டாம் குலோத்துங்க சோழரின் *2* ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. அதில் வரும் மெய்க்கீர்த்தியைத் தவிர்த்து இக்கட்டுரைக்குத் தேவையான செய்தியைக் காண்போம். (விழுப்புரம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி - *3*, ப. எண் - *1657.)*



**படம் : "திருப்பதியம் பாடிவரும்" என்று வரும் இரண்டாம் குலோத்துங்க சோழரின் கல்வெட்டு. இடம் : அபிராமேசுவரர் கோவில்.**



**படம் : "குருடர்கள்" என்று வரும் இரண்டாம் குலோத்துங்க சோழரின் கல்வெட்டு. இடம் : அபிராமேசுவரர் கோவில்.**



**படம் : “கண்காட்டுவார்” என்று வரும் இரண்டாம் குலோத்துங்க சோழரின் கல்வெட்டு. இடம் : அபிராமேசுவரர் கோவில்.**

**“பாடிவருங் குருடர்கள் பேர் பதிநறுவரும்**

**இவர்களுக்கு கண்காட்டுவார் இருவரும்**

**ஆகப்பேர் பதிநெண்மர்க்கு “.......**

திருவாமாத்தூர் ஆளுடைய அழகிய தேவர் கோவிலில் திருப்பதியம் பாடி வரும் பொய்யாத சேவடி தேவகணாதன் என்கிற இராஜராஜ பிச்சனுக்கும் அவனது வம்சத்தாருக்கும் திருப்பதியம் பாடும் குழுவில் உள்ள 16 கண் பார்வையற்றவர்கள் மற்றும் இவர்களுக்கு வழிகாட்டும் இருவர் (கண்காட்டுவார்) உட்பட 18 பேருக்கும் சேர்த்து திருப்பதியக் காணியாக 12 வேலி நிலம் மன்னரால் வழங்கப்பட்டுள்ளது.

கண் பார்வையற்றவர்களுக்கும் வழிகாட்டுவர்க்கும் சேர்த்து வாழ்கை வாழ வழிவகை செய்துள்ளார்கள்.

மேலும் சிறப்புத் தகவல் திருவாமாத்தூர் திருக்கோவிலில் எழுந்தருளியுள்ள இறைவனை அப்பர் பெருமான்

**‘ஆமாத்தூர் சண்ணிப்பானைத் தமர்க்கு**

**அணித்தாயதோர் கண்ணிற் பாவையன்னான் அவன் கான்மினே’**

இறைவன் பார்வை அளிக்கும் ஒளியாக விளங்குகிறார் எனப் போற்றுகின்றார். பார்வை அற்றவர்களின் வாழ்க்கையில் ஒளி விளங்க அவர்களுக்குத் தேவார திருமுறை பாடல்கள் பாட வாய்ப்பு அளிக்கப் பட்டது என்பது எவ்வளவு மகிழ்ச்சியான செய்தி. (வழிகாட்டும் கல்வெட்டுகள் - முனைவர் திரு. கி. ஸ்ரீதரன்.)

## தகவல் :


- மாவட்டக் கல்வெட்டுத் தொகுதி - 2, ப: எண் - 121.
- தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுப்பு - 13, க. எண் - 295.
- ஓதுவார் மரபும் - தேவார மான்பும் - முனைவர் திரு. குடவாயில் சுப்பிரமணியம்
- விழுப்புரம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி - 3, ப. எண் - 1657.
- வழிகாட்டும் கல்வெட்டுகள் - முனைவர் திரு. கி. ஸ்ரீதரன்.


நண்பர் திருச்சி பார்த்தி அவர்களுக்கு நன்றி.




## வானியல் அறிவோம்

# மேகலா நகரங்கள்



**திரு.கா.பாலகிருஷ்ணன்**
*முதல்வர் மற்றும் தாளாளர்*
*பாரதி பதின்ம மேனிலைப் பள்ளி*
*திருச்சி-21*



### மேகலா நகரங்கள்:

உலகமெங்குமுள்ள நிலப்பரப்புகளின் நேரங்களைக் கணிக்கவென்றே ஒரு நடுவரையை முதன்முதலில் அமைத்த தமிழர்கள் இதற்கென நான்கு நகரங்களை நிலநடுக்கோட்டின் மீது அமைத்தனர். அந்நகரங்களே **மேகலா நகரங்கள்** என அழைக்கப்படுகின்றன.

அவை **லங்காபுரி, ரோமகபுரி, சித்தபுரி, பத்திராசுவம்** ஆகிய நான்குமாகும். மேகலா நகரங்கள் குறித்து **திரு.வெள்உவன்** அவர்கள் தென்னிலங்கை, மறைந்துபோன மாட்டுத் தாவணிகள் என்னும் நூலில் விரிவாகப் பேசுகிறார்.

லங்காபுரி (நிரட்சலங்கை), ரோமகபுரி, சித்தபுரி, பத்திராசுவம் ஒன்றுக்கொன்று 90° பாகையில் மேகலா ரேகையில் (நிலநடுக்கோட்டில்) அமைந்த இடங்களாகும். மயனுடைய **சூரிய சித்தாந்தம்** என்ற நூலில் இந்நான்கு நகரங்களைப் பற்றிய மிக விரிவான குறிப்புகள் காணப்படுகின்றன என **டாக்டர்.ஆர்.ஆர். கார்னிக்** தன்னுடைய ***"Mayan and Surya Siddhandha, Mayans on the high seas"*** என்ற கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

**"புவிக்கோளத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஒரே நேரத்தில் ஒரே விதத்தில் கதிரவன் ஒளிர்வதில்லை. எனவேதான் இடத்திற்கு இடம் காலவேறுபாடுகள் ஏற்படுகின்றன. இதை விளக்க, மயன் 90° பாகை இடைவெளிகளில் நான்கு இடங்களைத் தேர்ந்தெடுத்தான். இந்நான்கு இடங்களும் துறைமுகங்களாக இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. அவை கிழக்கிலிருந்து தொடங்கி பத்திராசுவ கண்டத்தில் ஏமகூடம், பரத கண்டத்தில் லங்காபுரி, கேதுமால் கண்டத்தில் ரோமகபுரி, குருகண்டத்தில் சித்தபுரி என நான்காகும்".**


*(To demonstrate further the sun does not shine on all the earth at the same time and that there is a delay in the local time all the world. Mayasura selects four places are separated by 90 degrees. It is to be noted that all these four places are seaports. The places starting from the east the Yamakodi in land called Bhadrasva, then Lanka land called Bharata then Romaka in land called ketumala, and then Siddhapuri in land called Kuru) (சூரிய சித்தாந்தம் xxii-38-39-40)*

'பத்ராசுவக் கண்டத்தில் கதிரவன் உச்சியில் இருக்கும் போது, பரத கண்டத்தில் எழுகிறது. கேதுமாலக் கண்டத்தில் நள்ளிரவும் குருகண்டத்தில் கதிரவன் மறைவும் நிகழ்கிறது. நண்பகல், கதிரவன் எழுச்சி, நள்ளிரவு, கதிரவன் மறைவு என்ற இந்தச் சுழற்சி பரதகண்டத்தை நடுவாகக் கொண்டு உலகம் முழுவதும் கணக்கிடப்படுகிறது என்று சூரியசித்தாந்தம் விளக்குகிறது'.

*(inxxiiiin xxii-70-71 it states when sun is over head in Bhadrasva, it is just rising in Bharata, it is midnight in Ketumala and set in kuru. The cycle of Miday, sun rise, mid night, and sun set rotates from Bharata and rotates (round the world)*

புரி என்ற சொல் பட்டினம் (கடற்கரை நகரம்) என்று பொருள் கொள்ளும். மேகலா நகரங்கள் எனக் குறிப்பிட்டப்படுகின்ற நான்கு நகரங்களும் துறைமுகங்களாக இருந்தன என்பதைச் சூரிய சித்தாந்தக் குறிப்புகளிலிருந்து விளங்கிக் கொள்ள முடிகிறது. இன்றைய கிரீன்விச் மைவரைக் கணக்குப்படி கிழக்கு 75-76 பாகைகளுக்கு இடையில் இந்து மாக்கடலில் இலங்காபுரியும், மேற்கு 14-15 பாகைக்கு இடையில் தென் அட்லாண்டிக் கடலில் உரோமகப்புரியும் மேற்கு 104-105 பாகைக்கு இடையில் தென்பசிபிக் கடலில் சித்தபுரியும், கிழக்கு 165-166 பாகைக்கு இடையில் கிரிபதி தீவுக் கூட்டங்களுக்கு அருகில் பத்திராசுவமும் இருந்திருக்க வேண்டும் என்பதைச் 'சூரிய சித்தாந்தம்' உணர்த்துகிறது. இந்நான்கு மேகலா நகரங்களும் கடலுள் மூழ்கி விட்டன.

லங்கோச்சயினி மத்திய ரேகை என்று சொல்லிலிருக்கிற உச்சயினி நகரம் கடகத் திருப்பத்தில் இருக்கிறது. மேலும் இந்த உச்சயினி நகரம் இந்திய வான இயலில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது என்பது தெரிந்தது. அந்தச் சொல்லில் வரும் இன்னொரு நகரமான இலங்கா மகரத் திருப்பத்தில் இருந்திருக்கிறது என்பதை அந்தச் சொல்லமைப்பின் அடிப்படையிலேயே நாம் உய்த்துணர முடியும். மகரத்திருப்பத்தின் இலங்கையையும் கடகத்திருப்பத்தின் உச்சயினியையும் இணக்கிற மைவரையையே 'லங்கோச்சயினி மத்திய ரேகை' என்று குமரிக்கண்டத் தமிழர்கள் குறிப்பிட்டுள்ளனர். 'ஞாலத்தின் நடுவரையுடன் ஒரு குறிப்பிட்ட மைவரை சேர்கின்ற இடத்தை வைத்தே ஞாயிறு எழும் வேளையைத் தமிழர்கள் கணக்கிட்டு வந்தனர்' என்று "இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்பு" என்ற



தன் நூலில் கில்பர்ட் சிலேட்டர் குறிப்பிட்டுள்ளது கவனத்திற்குரியது. லங்கோச்சயினி மைவரை நிலநடுக்கோட்டை வெட்டுமிடத்தில் அமைந்திருந்த நகரமே ஐந்திரக் குறிப்புகளில் 'நிரட்சலங்கை' என்று குறிப்பிடப்படுவதும் மேகலா நகரங்களில் ஒன்றுமாகிய இலங்காபுரியே.

உலகமெங்குமுள்ள நிலப்பரப்புகளின் நேரங்களைக் கணிக்கவென்றே ஒரு மைவரையை முதன்முதலில் அமைத்தவர்கள் குமரிக் கண்டத் தமிழர்களே. அவர்கள் அமைத்த அந்த மைவரையின் அடிப்படையில் தான் ஆங்கிலேயர்கள் தங்கள் தலைநகர் இலண்டன் அருகில் உள்ள கிரீன்விச் வழியாகச் செல்லும் நிரைவரையை, மைவரையாக்கி அதனடிப்படையில் உலகநாடுகளின் நேரங்களை வரையறுத்துள்ளனர். உலகத்திணைப் படத்தில் குமரிமுனைக்குத் தெற்கே 75டிகிரி கிரீன்விச் கிழக்கு நிரைவரையை ஒட்டித் தென்முனை வரை நீண்டு பரந்த கடல் பகுதியின் ஆழம் 600 அடிக்குட்பட்டதாகவே குறிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து இப்பகுதிகள் குமரிக்கண்டம் சிறுகச் சிறுகக் கடலில் மூழ்கியபோது இறுதியில் மூழ்கியவை என்பது புலனாகிறது.

மகரத்திருப்ப இலங்காவையும் அதைச் சார்ந்த பெரும் நிலப்பரப்பையும் தான் உரோம, கிரேக்கர்கள் பழங்குறிப்புகளில் தாமிரபரணி என்று குறிப்பிட்டு வந்துள்ளனர் என்பதை நாம் தெளிவாய்ப் புரிந்து கொள்ளலாம். மேலும் இதைத்தான் தமிழிலக்கியங்களும் தென்னிலங்கை எனச் சொல்லிச் சிறப்பிக்கின்றன. எனவே இந்தப் பகுதியே இராவணன் ஆண்ட 'தென்னிலங்கை'யாக இருந்தல் வேண்டும் என்பது தெளிவு. தமிழ் மொழி அகராதியில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கையைத் தென்னிலங்கையாகவும் இலங்காபுரியை நிரட்சலங்கையுமாகவும் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

தென்னிலங்கை பற்றிய தேடலுக்கு அடிப்படையாய் அமைந்தவை ஐந்திரத்தில் வரும் 'லங்கோச்சயினி' மற்றும் 'நிரட்சலங்கை' என்கிற சொற்கள் தாம். இவை குமரிக்கண்டத் தமிழர்களின் வான இயல் குறித்த மிகச்சிறப்பான பதிவுகள் என்பதில் ஐயமில்லை. இவை மட்டுமல்ல ஐந்திரங்களின் முதன்மைப் பகுதியில் இருப்பவை முற்றிலும் வான இயல் செய்திகளே. அச்செய்திகளுக்கும் கணியத்திற்கும் நேரடித் தொடர்பு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே பண்டைத்தமிழர்களின் வான இயல் நுட்பங்களைத் தெரிந்து கொள்வதற்கு ஐந்திரங்களிருந்து வான இயலுக்குப் பொருந்தாத குப்பைக் கூளங்களை அகற்றிவிட்டு அவற்றை ஆய்வு செய்தல் இன்றியமையாதது. தமிழர் வரலாறு, பண்பாடு பற்றிய ஆய்வுகளில் நாட்டமுள்ளோர் இதில் முழு மூச்சாக ஈடுபட வேண்டும்.

(தென்னிலங்கை, மறைந்துபோன மாட்டுத் தாவணிகள் - வெள் உவன்)

**- பாலா பாரதி**

# தமிழக சிற்றரசர்கள் "ஆய் மன்னர்கள்"





**வே.பார்த்திபன்**
ஆற்றுப்படை
திருச்சிராப்பள்ளி



### தமிழக சிற்றசர்கள்:

மூவேந்தர்கள் தவிர்த்து **பதிணெண் வேளிர்களும்** சிறிது சிறிதாய் அந்தந்த பகுதிகளில் ஆளுமை செலுத்தியுள்ளனர். மூவேந்தர்களுக்கு முந்தைய குடித்தலைவர்கள் அவர்களே. சங்க இலக்கியத்தில் இவர்களை குறித்து பாடல்கள் அதிகம் பாடப்பட்டுள்ளது. மூவேந்தர்களின் ஆளுமைக்குபிறகு, அவர்களின் தலைமையையேற்று தங்களின் இருப்பை நீட்டித்துள்ளனர். அவர்களின் வரலாற்றினை முழுமையாய் காண்போம். என்னுடைய பார்வையில் தமிழக சிற்றரசுகள் வரலாறு...

### ஆய் மன்னர்கள்:

**குமரிப்** பகுதியை **ஆய்** என்றழைக்கப்பட்ட மரபைச் சார்ந்த குறுநில மன்னர்கள் சங்ககாலம் முதலே ஆண்டு இருக்கின்றனர். **பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி** ஆய் மன்னரும், வேளிரும் ஒருவரே என கருதுகிறார். அவர்கள் வடநாட்டு **யதுகுல சத்திரியர்** (யாதவ) என்கிறார். அதனை **பேராசிரியர் ஸ்ரீதரமேனன்** மறுத்து இவர்களும் சேர, சோழ பாண்டியர் போன்று இந்நிலத்து மக்களே என்கிறார்.

. **"செங்கடலின் வழிக்காட்டி" (கிபி81-96)** என்ற கடற்பயணக்குறிப்பு நூல் ஒரு கிரேக்க மாலுமியால் எழுதப்பட்டது. அது நெல்சிண்டாவிலிருந்து கன்னியாகுமரி வரையிலான இடங்களை பாண்டியர் ஆட்சி செய்ததாக தெரிவிக்கிறது. இவ்விடத்திற்குப் பெரிய கப்பல்களை அனுப்புகிறார்கள் எனெனில் இங்கு **மிளகு, மாலபத்திரம்** போன்றவை கிடைக்கும் அதற்கு பிறகு கொமாரி(குமரி) என்ற இடம் வருகிறது எனத் தெரிவிக்கிறது. கிரேக்கப் பயணி தாலமி ஆய்நாடு பெரிஸ்(பம்பாஆறு) முதல் கன்னியாகுமரிவரை பரவியிருந்தது பொட்டிகோ (பொதிகை மலை) இருந்ததாகவும் குறிப்பிடுகிறார். எனவே கிபி இரண்டாம் நூற்றாண்டில் ஆய் நாடு பாண்டிய நாட்டுக்கும், சேர நாட்டிற்கும் இடையே இருந்ததாக கருதப்படுகிறது. இறையனார் அகப்பொருள் உரை 7ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கன்னியாகுமரிவரை ஆய் மன்னர்களின் எல்லை இருந்ததை தெரிவிக்கிறது.

ஆய்க்குடி இவர்களின் தலைநகர். நாகர்கோயில் அருகில் உள்ள இடலாக்குடி (இடராய்க்குடி) தலைநகராக இருந்திருக்கலாம் எனவும் கருதுகின்றனர். தாலமி மற்றும் பிளினி தங்கள் குறிப்புகளில் கொட்டியாரா என்ற வணிக இடத்தைக் குறிப்பிடுகின்றனர். அது இன்றைய கோட்டார் என்கிறார் இலங்கை தமிழறிஞர் கனகசபை. பிற்கால ஆய் மன்னர் ஆட்சியில் திருவட்டாறும், விழிஞமும் மாறிமாறி அரசியல் தலைநகராக இருந்திருக்கின்றன. கோட்டாறு இரண்டாம் தலைநகராக இருந்திருக்கின்றது.

சங்க கால ஆய் மன்னர்களாக நால்வர் பெயர் கிடைக்கின்றது. இதில் முதலாவதாய் வருபவர் ஆய் அண்டிரன், கடையேழு வள்ளல்களில் ஒருவர்.இவனது வள்ளல்தன்மை உறையூர்

ஏணிச்சேரி முடமோசியார் எனும் சங்கப் புலவரால் புறநானூற்றில் சிறப்பித்து பாடப்பெற்றுள்ளது.

**"மழைக் கணஞ் சேக்கும் மாமலைக் கிழவன்**

**வழைப் பூங்கண்ணி வாய்வாள் அண்டிரன்**

**குன்றம் பாடின கொல்லோ**

**களிறுமிக உடைய இக் கவின்பெறு காடே."**

இவன் அந்துவன் சேரல் காலத்தவன்.

முகிலினங்கள் சென்று தங்கும் உயர்மலைக்குத் தலைவன், சுரப்புன்னை மலர்க் கண்ணியையும் தப்பாத வாளினையும் உடையவன். அத்தகைய ஆயின் மலையை எம்மையன்றிக் களிறு செறிந்த கவின் காடும் பாடினவோ! யானை மிகுதியாயிருந்த காட்டின் யானைகளையெல்லாம் பரிசிலர் பெற்றுப் போயினர். அதனால்தானோ என்னவோ யானைகள் வேண்டுமென இவ்வழகிய காடு நின்னைப் பாடியதோ? என்று ஆய் அண்டிரனின் கொடைச்சிறப்பினைப் பாடுகிறார் முடமோசியார் சங்கப்புலவர்களுக்கு குதிரை, தேர், யானை என பல பரிசுகள் வாரி வழங்கியவன், இவன் இறந்தபோது அவன் உரிமை மகளிர் அனைவரும் உடன்கட்டை ஏறினர், யானையை அரசச் சின்னமாகக் கொண்டவன் இவன்.

## <u>முதலாம் திதியன்</u>:

புறநானூற்றில் பொதிகைச்செல்வன் என அழைக்கப்படுகிறார் இவர், சங்க கால அரசனும், புலவனுமான ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் காலத்தவன், பூதப்பாண்டியன் இவன் காலத்தில் பூதப்பாண்டியை அவனது நாட்டின் மேற்கு எல்லையாக அமைத்துக்கொண்டன், இவருக்கு அதியன் என்ற ஒரோ பெயரும் உண்டு. அதியன் நாட்டில் எப்போதும் மழைப்பெய்யும் என அகநானுறு குறிப்பிடுகிறது. குமரி மாவட்டம் தோவளை வட்டத்தில் உள்ள அழகியபாண்டிபுரம் ஊர் இவன் பெயரால் அதியனூரான அழகியபாண்டிபுரம் என 12ஆம் நூற்றாண்டு கல்வெட்டொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவன் காலத்தைச் சார்ந்த பசும்பொன் பாண்டியன் என்ற அழகியபாண்டியனின் பெயரும் இவன் பெயரும் இணைந்து அழைக்கப்படுகிறது இவ்வூர்.

## <u>இரண்டாம் திதியன்</u>:

சேரன், சோழன் என்ற முடியுடைய வேந்தர் இருவரும் திதியன், எழினி முதலிய ஐம்பெரும் வேளிரும் படையெடுத்து இளைஞனான நெடுஞ்செழியனை வெல்ல பெரும்படையுடன் வந்தனர். அவர்களை பெருவீரத்துடன் வென்றான் பாண்டியன். தமிழ்நாட்டையே தன் வசப்படுத்தினான். அப்போரில் கலந்துகொண்டு தோற்றவனே இரண்டாம் திதியன். இவன் காலத்தில் ஆய்நாட்டின் எல்லை குன்றியது.

## <u>எழினியாதன்</u>:

சங்ககாலத்தில் எழினியாதன் என்பவன் ஆண்டிருக்கிறான் இவனும் ஆய் பரம்பரை என்கின்றனர் ஆய்வாளர்கள்.இவன் காலம் யானைக்கட்சேய் மாந்தரம்சேரல் இரும்பொறை, குட்டுவன் சேரன், தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் ஆகியோரின் காலம் என்பர். **இவனைப் புறநாநூறு (366)** கூறும். இவன் சேரனுக்கு உதவியாக சோழனை எதிர்த்தவன் என்பர். இது போன்று நாஞ்சில் பொருநன் என்ற நாஞ்சில் வள்ளுவன் குறித்தும் சங்கப் பாக்களில் காணப்படுகிறது. இவர்கள் இருவரும் ஆய் மன்னனின் கீழ் குறுநில மன்னனாக இருந்திருக்கலாம்.

சங்க காலத்திற்கு பின் எட்டாம் நூற்றாண்டு வரை ஆய் மன்னர்கள் எங்கும் பெயர்கள் காணப்படவில்லை. அதன்பின் கல்வெட்டுகளில் மீண்டும் வருகின்றனர்.

## கல்வெட்டில் ஆய்மன்னர்கள்:

### சடையனும் கருநந்தனும்:

கழுகுமலை கல்வெட்டில் எட்டாம் நூற்றாண்டை சார்ந்த விழிஞத்தை தலைநகராகக் கொண்ட சடையன்(கிபி788 வரை), அவன் மகன் கருநந்தன்(கிபி 788-857) குறிக்கப்பட்டுள்ளனர். ஜடிலவர்மப் பராந்தகப் பாண்டியன்(கிபி 765-805) இவர்களோடு போரிட்டுள்ளான். விழிஞம் அழிக்கப்பட்டு கொள்ளை இடப்பட்டது. அருவிக்கரை அன்று அருவியூர் என்ற பெயரில் சிறந்த படைத்தலமாக இருந்திருக்கிறது. அவ்வூரும் தீக்கிரையாக்கப்பட்டிருக்கிறது. ஆய் மன்னர்கள் பாண்டியர்கள் இடையேயான போர்ப்பற்றி வேள்விக்குடிச் செப்பேடு, சென்னை அருங்காட்சியக சீவரமங்கலச் செப்பேடு மற்றும் சின்னமன்னூர் செப்பேடும்(பெரிய சாசனம்) தெரிவிக்கின்றன. 8ஆம் நூற்றாண்டில் சடையன் மற்றும் அவன் மகன் கருநந்தன் ஆகிய ஆய் மன்னர்கள் பாண்டியர்களின் மேலதிகாரத்தை ஒப்பவில்லை அதனால் பாராந்தபாண்டியனுடன் அவன் முதல் வருகையின்போதிருந்து 10 வருடங்களாக ஆய் மன்னன் போரிட்டதாக திருவனந்தபுரம் கல்வெட்டு தெரிவிப்பதாகவும், அம்மன்னன் கருநந்தன் என அடையாளப்படுத்தலாம் என்றும், பின் ஸ்ரீமாற ஸ்ரீவல்லப பாண்டியன் விழிஞத்தைக் கைப்பற்றினான் எனவும், கருநந்தனை அடுத்து கருநந்தருமன் வந்ததாகவும் கருநந்தருமன் குறித்து எதும் கிடைக்கப்பெறவில்லை என்றும் குறிப்பிடுகிறார் பேராசிரியர் ஸ்ரீதரமேனன்.

### கோகருநந்தடக்கன் (கி.பி 857-885):

கருநந்தன் மகன் அடக்கன் அதாவது கோகருநந்தடக்கன் (கோ+கருநந்தன்+அடக்கன்) (கிபி857-885) இவன் தன்னை ஸ்ரீ வல்லப பார்த்திபசேகரன் என அழைத்துக் கொண்டு பாண்டிய மேலாண்மையை ஏற்றுக்கொண்டான்.

கருநந்தடக்கன் பாண்டியனுக்கு கட்டுப்பட்ட ஆய் மன்னாக ஆட்சிபுரிந்து, போரில் வென்ற அரசர்களின் பெயரை அவர்களுக்கடங்கிய சிற்றரசர்கள் சூடிக்கொள்வதைப் போன்று மாறஞ்சடையானின் சிறப்பு பெயரான ஸ்ரீவல்லபன் என்ற பெயரை தனக்கு இட்டுக்கொண்டான். தன் மகனுக்கும் வரகுணன் என பாண்டியன் மாறன் மகன் இரண்டாம் வரகுணனின் பெயரைச்சூட்டியுள்ளான். இது ஆய் மன்னர்கள் ஒன்பதாம் நூற்றாண்டில் பாண்டியருக்கு கீழ் அடங்கியிருந்ததைக் காட்டுகிறது.

### நான்கு செப்பேடுகள்:

திருவாங்கூரின் திருவனந்தபுரம் தலைமை அலுவலகத்தில் நீண்ட காலமாக கிடப்பில் கிடந்த ஆறு உதிரிச் செப்பேடுகளை பிரித்து பார்த்திவசேகரபுரம் செப்பேடு மற்றும் திருநந்திக்கரைச் செப்பேடு எனவும் அத்துடன் திற்பரப்பு செப்பேடு மற்றும் பாலியம் செப்பேடுகளையும் சேர்த்து நான்கு செப்பேடுகளாக வெளியிடுகிறார் திரு டி.ஏ. கோபிநாதராவ், திருவிதாங்கூர் தொல்லியல் வரிசை எண் ஒன்றில்(1910-1913). இச்சாசனங்கள் தற்போது திருவாங்கூர் தொல்லியல் துறையின் பராமரிப்பிலுள்ளன. அது பிற்கால ஆய்மன்னர்களின் வரலாற்றுப் பக்கங்களை காட்டுகின்றன. இவை கருநந்தடக்கன் மற்றும் அவன் மகன் வரகுணன் வழங்கிய தலா இருசெப்பேடுகளாகும்.

### அ) பார்த்திவசேகரபுரச் செப்பேடு:

மார்த்தாண்டம் தேங்காய்பட்டிணம் இடையே தாமிரபரணி ஆற்றங்கரையின் கிழக்கில் முன்சிறை, பார்த்திவசேகரபுரம் என்ற ஊர்கள் உள்ளன. அந்த பார்த்திவசேகரபுரம் தொடர்பான பிற்கால ஆய் மன்னன் கோக்கருநந்தடக்கன் வழங்கிய செப்பேடே இங்கு குறிப்பிட போகும் சாசனம். இது ஐந்து ஏடுகளைக் கொண்டுள்ளது. இருபுறமும் எழுதப்பெற்றது, முதல் ஏட்டின்

தொடர்ச்சி அடுத்த ஏட்டில் இல்லை. முழுமையான சாசனமாக கிடைக்கவில்லை. கிடைக்கப்பெற்ற இடம் தெரியவில்லை. கோகருந்தடக்கன் மன்னனால் வெளியிடப்பட்டது. திருவிடைக்கோடு மகாதேவர் கோயிலில் நந்தா விளக்கமைத்து நாள்தோறும் நெய் வழங்க ஏற்பாடு செய்ததை வட்டெழுத்தில் இந்த பெயரிலே கல்வெட்டாக அமைத்துள்ளான். ஆனால் அன்று வழங்கப்பட்ட வட்டெழுத்தைப் பயன்படுத்தாமல் பல்லவர் கால சாசனங்களில் பயன்படுத்தப்படும் தமிழால் இச்சாசனம் எழுதப்பட்டுள்ளது. ஏட்டின் எழுத்துக்கள் இருவர் எழுதியதாக காணப்படுகிறது. மொத்தம் 73 வரிகளைக் கொண்டுள்ளது.

ஆய் மன்னான கோகருந்தடக்கன் தன் சிறப்புப் பெயரில் அமைத்த பார்த்திவசேகரபுரச்சாலைப் பற்றியது இச்சாசனம். காந்தளூர்சாலையை மாதிரியாகக் கொண்ட தொண்ணூற்றைவர் சட்டர்களுக்கு அமைத்தச் சாலை மற்றும் கோயில் ஆகியவை நன்கு செயல்பட வகுத்த விரிவான திட்டங்களே இது.

சாசனம்

**“கலியுகக் கோட்டு நாள் பதினான்கு நூறாயிரத்து நாற்பத்தொன்பதினாயிரத்து எண்பத்து ஏழுசென்ற நாள் ஸ்வதிக் கோக் கருந்தடக்கனுக்கு யாண்டு ஒன்பது நாள் பதினைஞ்சு இந்நாளில்”**

செய்யப்பட்டது.

இதனை கலி அப்தம் 3967 கற்கடகமாதம் 15ஆம் நாள் அதாவது கிபி 866 ஜூலை 8ஆம் தேதி என சுவெல் மற்றும் ப்ளிட் ஆகிய தொல்லியல்துறை ஆராய்சியாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இந்துமத நம்பிக்கையாளர்கள் மகாபாரதப்போர் முடிந்ததிலிருந்து கலியாண்டு துவங்குவதாக கருதுவர். அதுபோன்று மகாபாரதப்போர் முடிந்த கலியுக துவக்கமான கிமு 3100 என்பதிலிருந்து நாள் கணக்கிடப்பட்டுள்ளது.

முதல் ஏடு, எழுதப்பெற்ற நாள், மன்னன் உழக்குவிளை என்னும் நிலத்தை பிற நிலங்களை அதற்குப் பதலியாக பலதடவையாக கொடுத்து முன்சிறை ஊர்ச் சபையிடமிருந்து பெற்று தன் சிறப்புப்பெயரில் தொண்ணூற்றைவர்(95) சட்டர்க்கு உணவு மற்றும் ஊதியத்துடன் இணைந்த கல்விக்காக, காந்தளூர்ச்சாலைப் போன்று பார்த்திவசேகரபுரம்சாலையும் அதில் விஷ்ணுக்கோயிலையும் அமைத்து, அச்சாலை மற்றும் கோயில் பாராமரிப்புக்காக நிலங்கள் தானம் செய்ததை தெரிவிக்கிறது.

இரண்டாம் ஏடு, கோயில் பணியாளர்கள் மற்றும் பூ வழங்குவோர் கடமைகள், நுந்தா விளக்கெரிக்க அளிக்கப்பட்ட தனநிலங்கள், பங்குனி விசாக நாளில் ஆறாட்டாக முடியும் ஏழுநாள் திருவிழா, அத்திருவிழா காலத்தில் கோயில் பணியாளர்களுக்கும், சட்டர்களுக்கும் இரட்டிப்பு ஊதியம், அதற்காக வழங்கப்பட்ட நிலங்கள் என்பன குறித்தது.

மூன்றாம் ஏடு, சாந்திக்காரர், அகநாழிகை பணிச்செய்வோர், பஞ்சகவ்யம் தெளிப்போர், பூ வழங்குவோர், கோயில் வாத்தியக்காரர் ஆகியோர்களுக்கு வழங்கிய நிலங்கள் குறித்து எழுதப்பட்டுள்ளது.

நான்கு மற்றும் ஐந்தாம் ஏடுகள், மாய, செங்கழு, முடால, படைப்பா மற்றும் வள்ளுவ நாட்டு மக்கள் இச்சாலையை பாதுக்காக்க வேண்டிய பொறுப்புகள் பற்றி வலியுறுத்தப்படுவது. மேலும் இந்த சாலையில் வேத மற்றும் த்ரைராஜ்யவ்யவஹா கல்வி மற்றும் உணவு பெறும் சட்டர்கள் எண்ணம் முறையே பவிழிய(பவிஷிய) பிரிவினர் (ரிக் வேதி) 45 பேர், தயிதிரிய(தைத்திரிய) பிரிவினர் (யஜூர் வேதி) 36 பேர், தலவகார(சாம வேதி) பிரிவினர் 14 பேர் என மொத்தம் 95 பேர், அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கம், கட்டுப்பாடு, மற்றும் கற்க வேண்டிய முறை, இக்கோயில் மற்றும் சாலைக்காக வழங்கப்பட்ட நிலங்களில் அதன் வரிவசூல் முறை, கோயில் பணியாளர்கள் சட்டர்களிடம் நடந்துக்கொள்ள வேண்டிய முறை மேற்படி சட்டர்களோ பணியார்களோ தவறிழைத்தால் வழங்கப்படும் தண்டம் மற்றும் தண்டனைகள் ஆகியவைக் குறித்தும், ஏட்டின் ஆணத்தி மற்றும் சாட்சி எழுத்தன் குறித்தும் உள்ளது. ஐந்தாம் ஏட்டின்

பின்புறம் சமஸ்கிருத ஸ்லோகம் ஸ்ரீவல்லபனை(கருந்தடக்கன்) விஷ்ணுவையும் சிலேடையாக வர்ணித்து புகழ்ந்தும் உள்ளது.

இச்சாசனத்தின் சிறப்பாக கருதப்படுவது. கோயிலும் சாலையும் அமைக்க அதிகாரத்தை பயன்படுத்தி இடம் பறிமுதல் செய்யாமல் முன்சிறை ஊருக்கு பதலி இடம் கொடுத்துப் பெற்றது. சட்டர்களுக்கு த்ரைராஜிய விவாகாரக் (தமிழக வழக்குப்படி சேர, சோழ பாண்டிய ராஜ்ய நிர்வாகக்) கல்வி அதாவது இன்றைய இந்திய சிவில் நிர்வாகப்பணிப் போன்று நிர்வாகயியல் கல்விச்சாலை மற்றும் ஆயுதப்பயிற்சியும் நடத்தியது என்பன.

இச்சாசனம் பல ஊர்களின் பெயர்களை குறிப்பிடுகிறது. அவற்றில் சில அப்பெயரால் ஆயிரத்து நூற்றைம்பது வருடங்களுக்கு மேலாக இன்று வரை வழங்கப்பட்டு வருகிறது. முடாலம் (மிடாலம்), பசுங்குளம் (பைங்குளம்), முன்சிறை, குராத்தூர் (கிராத்தூர்), நெடுமங்குளம், மேற்பாற்கீழூர், தெங்கநாடு(தேங்காய்பட்டிணம்), விளப்பில், இளவேணாட்டுநல்லூர், பனையூர், காஞ்சிரக்குளம், குன்றத்தூர், கீழ்குளம், சிறுமண்ணூர், மீனச்சி (மீனச்சல்), குண்டூர், அருமுனை, ஆதனூர், படைப்பா, மாத்தூர், வெண்ணீர், பாகோடு, பாப்பிகைகோடு என்பன. மேலும் நாடு பெயர்கள் குறிப்பிடப்படுகிறது, அவை முடால நாடு, பொழிசூழ் நாடு, செங்கழு நாடு, வள்ளுவ நாடு, தெங்க நாடு, மாய நாடு, படைப்பா நாடு. ஆய் மன்னனின் நிலப்பரப்பு நாடுகளாக பிரிக்கப்பட்டுள்ளது இதன் நிர்வாகி கிழவன் என அழைக்கப்பட்டுள்ளான். நாடு தேசமாக பிரிக்கப்பட்டு ஆளப்பட்டுள்ளது. சாலையை மேலே குறிப்பிட்ட நாட்டுக்காரர்கள் "அறமரு சாதி காக்கும் பரிசினாற் காப்பது"(சாசனவரி 46) போன்றுக் காக்க இச்சாசனம் வலியுறுத்துகிறது.

தென்னாட்டு கோனாயின சடையன் (கருநந்தடக்கனின் பாட்டன்)(வரி17,22), செங்கழு நாட்டு பாறையில் சயவஞ்சரனாயின சாத்தன் சடையன்(வரி31), செங்கழு நாட்டுக் குன்றத்தூர் குமாரசுவாமி பட்டன்(வரி32), ஓமாயனாட்டுச் சிறு மண்ணூர் இளையான் கண்டன்(வரி35), ஈயானஞ்சுவானுக்குங் குமரங் கண்டன்(வரி41), தெங்க நாட்டு வெண்ணீர் வெள்ளாளன் தெங்க நாட்டு கிழவனாயின சாத்த முருகன்(வரி67&72), ஓமாயனாட்டுப் பாகோட்டு பாப்பிகைகோட்டு திரையன், ஓமாயனாடு கிழவனாயின சிங்கங்குன்றப்போழன்(வரி73) என்றப் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. இச்சாசனத்தின் ஆணத்தியாக சாத்த முருகனும், சாட்சி எழுத்தாக திரையனும் சிங்கங்குன்றப்போழனும் குறிக்கப்பட்டுள்ளனர். பெயர்கள் அடைமொழியோடு வழங்கப்பட்டுள்ளன.

காணம், கழஞ்சி, காசு என்ற நாணயங்கள் சில இடங்களில் இச்சாசனத்தில் தண்டம் பற்றிய குறிப்பிடும்போது சொல்லப்பட்டுள்ளது எனவே கருநந்தடக்கன் காலத்தில் காணம், கழஞ்சி, காசு மக்கள் புழக்கத்தில் இருந்துள்ளன. 9ஆம் நூற்றாண்டில் காணம் 1, 21/2, 5 ,10, ஆகிய மதிப்புகளில் வெளியிடப்பட்டிருந்தன. அன்று ஒரு கழஞ்சி என்பது 10 காணம், ஒரு பழங்காசு என்பது 6 கழஞ்சி ஆகும். இவை பொன் நாணயமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டர்கள் தங்களுக்குள் வழக்கிட்டுக் கொண்டால், ஆயுதம் பயன்படுத்தி புண் ஏற்படுத்தினால் ஐந்து காணம் பொன் தண்டம். உணவு நிறுத்துதல் போன்ற தண்டனைகள். வெளிக்கூட்டத்திற்கு ஆயுதம் எடுத்துச் செல்லக்கூடாது. மடத்தில் வெள்ளாட்டிகளை(கோயில் பெண்டிர்) வைத்துக் கொள்ளக் கூடாது. மீறினால் அரசர் ஆணையின்றி சாலையிலிருந்து விலக்கம். ஐந்து கழஞ்சி பொன் தண்டமும் அதுவரை பெறப்பட்டவைகளுக்கு பத்துமடங்கும் வழங்க வேண்டும், கிராமசபையினர் செலுத்த வேண்டியவரியை வழங்கவில்லை எனில் மூன்று பிரிவிலிருந்து மூன்று சட்டர்கள் சென்று 54 காணம் பொன் தண்டம் பெற வேண்டும். சாலைக்கான கடமையை மறுப்பவர் நியதி கழஞ்சி பொன் தண்டம் செலுத்தவேண்டும், சாலையில் உணவு பெறும் பணிமக்கள் சட்டரை

பிழைச்சொன்னால் ஒரு காசு தண்டம் என தண்டனைக் குறிப்புகள் கடுமையாகயுள்ளன.

வேதங்கள், அவற்றின் பிரிவான வியாகரணம், மற்றும் ப்ரோஹிதம், மூவரசர் ஆட்சிநிர்வாகத்திற்க்கான கல்வி அவற்றோடு ஆயுதப்பயிற்சி ஆகியவை ரிக், யஜூர், சாம வேதப்பிரிவு பிராமணர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யும் கல்விச்சாலையாக இது செயல்பட்டுள்ளது. காந்தளூர்சாலை மாதிரியாகக் கொண்டு இது அமைக்கப்பட்டது. கோகருநந்தடக்கன் தன் ஆட்சிக் காலத்தில் நான்குச் சாலைகள் அமைத்துள்ளான். அவை காந்தளூர்ச்சாலை, பார்த்திவசேகரபுரம்சாலை, திருவல்லாச்சாலை மற்றும் மூழிகுளம்சாலை என்பர். பிற்காலத்தில் காந்தளூர்ச்சாலை ராஜராஜ சோழனால் அழிக்கப்பட்டது. இது தற்போது திருவனந்தபுரத்தில் வலியசாலை என அழைக்கப்படுவது என்கின்றனர். இது இந்தியாவில் மிக நீளமான அக்ரஹாரம் ஆகும்.

இச்சாசனம் தெரிவிப்பது, பிராமணர்களுக்கு சமுகத்திலும், ஆட்சியாதிகாராத்திலும் பங்கு வகிக்க வழங்கும் கல்விக்கான சாலை அமைக்க, பிராமண ஊர்களுக்கு(முன்சிறை) பதலி இடமாக நிலங்கள் பலமுறை அவர்களுக்கு திருப்தி ஏற்படும் வரை அளித்து பின் இடம் பெற்று சாலை அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் பிற நாட்டுக்குடிகளின் நிலங்கள் மற்றும் அவர்கள் வருமானங்கள், சாலை பராமரிப்பு மற்றும் ஊதியத்திற்காக, அக்குடிகளிலிடமிருந்து ஒரு ஆணை மூலம் பறித்தளிக்கப்பட்டிருக்கிறது. இச்சாசனத்தில் அந்த ஊர்களும் நாடுகளும் குறிப்பிடப்பட்டிருக்கிறன.

காந்தளூர்ச்சாலையின் அனுபவம் இச்சாசன தண்டனை குறிப்பு வழி தெரியவருகிறது. பிராமணர்கள் பொது இடங்களில் ஆயுத துஷ்ப்ரையோகம் செய்பவர்களாக இருந்திருப்பதால் இதில் பொது இடங்களிலும், சாலையின் உள்ளும் ஆயுதம் பயன்படுத்த கட்டுப்பாடு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பிராமணர்கள் அவர்களின் வேதப்பிரிவு சார்ந்து சண்டையிடுபவர்களாக இருந்திருக்கிறார்கள் அப்பிரிவின் அரசியல் அதிகாரத்திற்கானதாக அது இருக்கலாம், எனவே கல்விச்சாலையினுள் சட்டர்களினிடை தகறாறு நடைப்பெற்றால் தண்டம் வழங்க சரத்து உள்ளது. கோயில் பணிப்பெண்டிரை பிராமணர்கள் தவறாக பயன்படுத்தியுள்ளனர் என்பதால் இச்சாசனம் சாலைக்குள் கோயில்பெண்டிரை(வெள்ளாட்டி) சட்டர்கள் பயன்படுத்தக்கூடாது எனவும் தெரிவிக்கிறது.

## ஆ) திற்பரப்பு சாசனம்:

திற்பரப்பு குமரிமாவட்டத்தின் குற்றாலம் என அழைக்கப்படுவது. இவ்வூரில் கோதையாறு பதினைந்து மீட்டர் உயரத்திலிருந்து அருவியாக விழுகிறது. இங்கு சிவன் கோயில் உள்ளது. மூலவர் பெயர் வீரபத்திரர். இக்கோயிலில் கிடைத்த இரு ஏடுகளைக் கொண்ட சாசனம் இது. அவை சாசனத்தின் முதல் மற்றும் கடைசி ஏடுகளாகும். இரு ஏட்டிலும் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட்டுள்ளது. முதல் ஏடு வடமொழி கிரந்த எழுத்து, கடைசி ஏடு பல்லவர் காலத் தமிழ் எழுத்து கொண்டுள்ளது. இடையில் எத்தனை ஏடுகள் என்பது தெரியாது. இதுவும் முழுமையான சாசனமாக கிடைக்கவில்லை. இதனை ஆய் அரசன் கருநந்தட்டக்கன் வழங்கியிருக்கிறான்.

முதல் ஏடு நமோ நாராயணாய என ஆரம்பித்து, முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் சுலோகங்கள் முறையே பிரம்மா, விஷ்ணு, சிவன் வணக்கமாக உள்ளன. பின்னர் தானமளித்த அரசனின் வம்சமான யாதவகுல பெருமை வர்ணிக்க தொடங்கும் போது ஏடு முடிந்து சாசனம் குறையாக முடிவுப் பெற்றுவிடுகிறது.

கடைசி ஏடு சில ஊர்ப்பெயர் அடைமொழியோடு சில பட்டர்களின்) பெயரைக் கொண்டும், அதில் ரேகைப் பதித்து சாசனமாக்கியவன் பெயர்க் கொண்டும் முடிகிறது. தேவதான பிரம தேயமாக ஓர் ஊர் சாசனம் வழி வழங்கப் பட்டிருப்பதாக கருதுகின்றனர். ஊரின் பெயர் விவரம் ஏடு முழுமையற்றதாக இருப்பதால் தெரியவில்லை.

கடைசி வரி ”ஸ்ரீ கோகருநந்தடக்கற்கு ஆயுதங்கள் செய்வான் விழிஞத்து பெரும் பணை கனாயின அவியலன்றடக்கன் இலேகை” எனவே சாசனம் கருநந்தடக்கன் அல்லது அவன் மகன் வரகுணன் காலம் சார்ந்ததாக இருக்கலாம். மேலும் இது விழிஞத்தில் ஆயுத தயாரிக்குமிடம் இருந்ததாகத் தெரிவிக்கிறது.

## இ) பாலியத்து சாசனம்:

திருவாங்கூர் தொல்லியல் அறிஞர் திரு டி.ஏ. கோபிநாதராவ் கேரள பாலியத்து அச்சன் வீட்டில் இச்சாசனத்தை கண்டெடுத்தார். பாலியயம் என்பது புத்தகல்விச்சாலை என்கிறார் ஸ்ரீதரமேனன். கேராளாவில் பல ஊர்களிம் பெயர்கள் பள்ளி எனக்கொண்டுள்ளது. புத்த, கிருத்துவ, இஸ்லமிய ஆலயங்கள் பள்ளி என்று கேரளாவில் அழைப்பப்படுகிறன. பள்ளி என்பது பாலி என மருவி பாலி+அயம் பாலியம் என ஆகியுள்ளது. இங்கு இரு ஏடுகள் கிடைக்கப்பெற்றன. அதில் சாசனம் இரு புறமும் வழங்கப்பட்டுள்ளது. முதல் ஏட்டின் முன்புறம் தமிழால் எழுதப்பட்டுள்ளது. இதன் வரி வடிவம் பல்லவர் கடைசிகால மற்றும் சோழர் ஆரம்பகால எழுத்து வடிவத்தை ஒட்டியது. ஏட்டின் பிற பகுதிகள் வட மொழி நாகரி எழுத்தால் உள்ளது.

முதல் ஏட்டில் தானமளிக்கப்பட்ட நிலத்தின் எல்லை குறிப்பிடப்பட்டுள்ளது. **“திருமூலபாதத்து பாடாரர்க் கட்டிகுடுத்”** என்ற வாசகத்தோடு முன்பக்க ஏட்டின் தமிழ்பகுதி முடிய, சாசன பிறதமிழ்பகுதி ஏடுகள் கிடைக்கவில்லை. ஏட்டின் பின்புற வடமொழி கடைசிப் பகுதிக்கும் இரண்டாம் ஏட்டின் துவக்கதிற்கும் தொடர்பில்லை. புத்தபகவானுக்கு வணக்கம் கூறும் சுலோகத்துடன் ஆரம்பிக்கிறது. புத்த மும்மணியைச் சார்ந்த தர்மம், சங்கத்திற்கு அது வணக்கம் செய்கிறது. யாதவ (ஆய்) குலத்தின் புகழைச் சொல்கிறது. மன்னன் வரகுணன் தன் இனத்திடம் ஆய் வம்சத்தையும், நாட்டையும் காக்க வேண்டும் என்ற விண்ணப்பத்தை வைப்பதாக அமைந்து மங்கலம் உண்டாகும் படிக்கூறி **”ந கோத் துவாதசி”** என முடிகிறது.

திருவிதாங்கூர் தொல்லியியல் வரிசை எண் 1ல்(1910-13) இதை வெளியிடும் போது திரு டி.ஏ. கோபிநாதராவ் அவர்களுக்கு இதில் குறிப்பிடப்படும் திருமூலபாதத்து பாடாரர் என்பது புத்தனா? சிவனா? மாலா? என தெரியவில்லை என்கிறார். பின்னர் திருவிதாங்கூர் தொல்லியியல் வரிசை எண்2ல்(1920) திருமூலத்து பாடாரர், புத்தனைக் குறிக்கிறது என்ற முடிவுக்கு மூஷிக வம்ச வடமொழி புராணத்தின் செய்தியை அறிந்தபின் வருகிறேன் என்கிறார். இது கருநந்தடக்கன் மகன் வரகுணன் காலத்தியது. மேற்கு கடற்கரைப் பட்டிணத்தில் திருமூல படாரர் (ஸ்ரீமூலவாசக்) கோயில் அழிந்துப் போவதற்குமுன் நல்ல நிலையில் இருந்தபோது நிலம் அளித்த தகவல் கிடைக்கிறது. ஸ்ரீமூலவாசகம் ஹீனயானம் சொல்லிக்கொடுக்க ஆரம்பித்து, அது மாகயானச்சாலையாக மாறிப்பின்னர் தந்திரிக் கல்விச்சாலையாக மாறிப்போனது என்கிறார் எஸ் என் சதாசிவன் அவர்கள். இது திருக்குன்னம்புழா அருகில் இருக்கவேண்டும் என்று கருதுகின்றனர். இங்கிருந்த புத்தா, யசோத மற்றும் ராகுல் என இருக்கும் இவ்வொற்றை விக்கிரம் கிபி1675ல் திருகுன்னம்புழாக்கோயிலில் வைத்திருந்ததாகக் குறிப்பிடுவர். இந்த இடம் அப்போது சேர ஆளுககைக்குள் உள்ளது என்பர். நிலத்தோடு புலையர்களையும் தானம் செய்யப்பட்டதாகக் கூறுவர். இந்த ஸ்ரீமூலவாசகம் சோழர்களால் அழிக்கப்ப்ட்டிருக்கலாம் அல்லது 15ஆம் நுற்றாண்டில் இடப்பள்ளியை ஆட்சிச் செய்த பிராமணர்களால் அழிக்கப்பட்டிருகலாம் அல்லது கடல் கொண்டுப்போயிருக்கலாம் என்கின்றனர்.

ஏட்டின் வடமொழி சுலோகங்கள் **“யாதவகுலமானது மற்ற அரசர்களுக்கு தலையாக சந்திரன் நட்சத்திரம் உள்ளவரை நீடித்திருக்கும், பக்தினால் வணங்கியவனும், தன் சேனைத் தொகுதியால் எழுப்பட்ட தூசிகளாகிய புகையினால் தன் எதிரிகளின் மனைவிகளை அழச்செய்தவனுமான விலிஞ்ஜம்(விழிஞம்) என்ற நாட்டின் அரசனால்…”** என்ற இச்சுலோகத்தின் தொடர்ச்சியேடு கிடைக்கவில்லை. மேலும் இச்சாசன சுலோகம், சூரியன் மகரராசியில் (தை

மாதம்) இருக்கும் போது பௌஷ மாத மிருகஷிரிட நட்சத்திரம் கூடிய வியாழக்கிழமை அரசன் தன் முப்பத்து ஐந்தாவது வயதில் புத்தக்கோயிலுக்கு நிலம் தானம் செய்ததைக் கூறுகிறது. இந்நிலத்தின் திசை, எல்லை முதலான அனைத்தும் தமிழ் வசனத்தில் காண்க என்கிறது. மேலும் வீரகொத்தன் என்பவனை தானபூமியைக் காக்கும் பொறுப்பில் அரசன் அமர்த்தியதை சொல்கிறது. பின்பு "எவன், பிறர் தன்னிடம் இரத்தலை அன்பினால் மட்டும் விரும்புகிறானோ எவன் மற்றவர்களிடம் எப்போதும், கனவிலும் கூட இரப்பதில்லையோ அப்படிப்பட்ட புண்ணியாத்மாவான வரகுணன் என்ற அரசன் தன் வம்சத்தவர்களை **“நீங்கள் இந்த வம்சத்தை அழிக்ககூடாது“ என்று இரந்து வேண்டுகிறான். மறுபடியும் இந்த மேன்மையுள்ள அரசன் தலைவணங்கிப் பக்தர்களின் அன்பர்களான எல்லோரையும் கேட்டுக்கொள்கிறான் ”**

**“இந்தப் பூமியை உள்ளத்தில் வைத்துக்கொண்டு, மனைவியை மற்றொருவர் அனுபவிக்கும் ஆபத்து ஏற்ப்படுமோ என்று காப்பதுபோல், இதையும் அந்த அந்த காலத்தில் காப்பற்ற வேண்டும்” ஓ மனிதர்களே மனத்தைப் புண்ணியம் செய்வதற்கு விரைவுபடுத்துங்கள். கொடியவனான யமன் உங்களுடைய காலத்தை எதிர்ப்பார்த்து வாய் திறந்துக் கொண்டு உங்கள் அருகிலே சுற்றி வருகிறான். அந்த யமனுக்கு நன்மை செய்ய விரும்பிச் சூரியன் தன்னுடைய பயணத்தால் !உங்களுடையா ஆயுளின் மீதிப் பாகத்தை விரைவாக உறிஞ்சிவிடுகிறான். மங்களம் உண்டாகட்டும். ந கோத் துவாதசி”** என சுலோகங்கள் முடிகின்றன.

இதிலிருந்து புத்தக்கோயிலுக்கு நிலமளித்த விவரமிருந்தாலும் வரகுணன் என்ற மன்னன் தன்நாட்டில் தன்மக்களால் தனிமையாக விடப்பட்ட நிலை தெரியவருகிறது. இதில் தெரிவிக்கப்படும் வீரகொத்தன் என்பவன் சேரன் கோதை ரவிவர்மா காலத்தில் கோயிலதிகாரியாக இருந்த இந்துகோதைவர்மா ஆகும் . இவர் கோதை ரவிவர்மனுக்கு பின் ஆட்சிக்கு வருகிறார்.

**பார்த்திவசேகரபுரம் கோவில்:**

**பார்த்திவபுரம் :**



குமரிமாவட்டம், புதுக்கடையிலிருந்து சுமார் ஒரோ கிலோமீட்டர் தொலைவில் இவ்வூரினை சென்றடையலாம். ஆய்வம்ச மன்னன் கருநந்ததடக்கனால் கட்டப்பட்ட கோவில் இது. கல்வெட்டுப்படி இவ்வூரின் பெயர்



பார்த்திவசேகரபுரம். ஆயிரத்து இருநூறு ஆண்டுகள் பழம்பெருமை வாய்ந்த கோவில். சங்ககால சிறப்புமிக்க குலமான ஆய்வம்சதோன்றல் மன்னரால் கட்டப்பட்ட இக்கோவில் இன்று வெளித்தோற்றத்தில் அவ்வாறு தெரியாவிடினும், கூர்ந்து நோக்குங்கால், அதன் கருவறை சுற்றுச்சுவர் விமானம், கோபுரம் அதிட்டானம் என அதன் தொன்மை புலப்படும்.

**பார்திவசேகரபுர கோவில் கல்வெட்டுகள்:**

இங்கு மொத்தம் 5 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளது, காமன் தடக்கன் என்பவர் இறைவனுக்கு நிலக்கொடை தானமளிக்கிறார், இதுவே தொன்மையான கல்வெட்டு, கி.பி923 ல் மன்ர் பெயரிலில்லாத கிரந்தம் கலந்த தமிழ் கல்வெட்டுள்ளது. பஞ்சவன் பிரம்மாதிராஜனாயின குமரன் நாராயணன் என்பவர் இரண்டு விளக்குகள் கொடையளிக்கிறார். இரு சோழர் கல்வெட்டும், சுந்தரசோழ பாண்டியர் கல்வெட்டும் உள்ளது. இவையும் நிலக்கொடை, நந்தாவிளக்கு கொடை குறித்த கல்வெட்டுகளே.

ஆய்குல முன்னோன் புகழ்வாய்ந்த கருந்தடத்தக்கன் கட்டிய இக்கற்றளி இன்றும் தொன்மைமாறாமல் நன்முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது! ஆய்மன்னர்களின் கலைசிறப்பினை இங்கு காணலாம்.

**<u>விக்ரமாதித்ய வரகுணன்</u>:**

இவரது கல்வெட்டுகள் சிதறால், திருநந்திக்கரை, கழுகுமலை, போன்ற இடங்களில் காணப்படுகிறது. இம்மன்னன் சைவ, வைணவ, சமண சமயங்களை ஆதரித்துள்ளான். சிதறாலில் நிறைய சமண இயக்கியர் உருவங்கள் செய்துள்ளமை தெரியவருகிறது.இவன் காலத்தில் பராந்தக சோழன்(907-955) பாண்டியன் மாறவர்மா ராஜசிம்கா (இரண்டு) (905-920)வைத் தோற்கடிக்கிறான். சோழனை எதிற்கும் போரில் வரகுணன் பாண்டியனுக்கு ஆதரவாக நிற்கிறான். பாண்டியநாடு சோழநாட்டுன் இணைக்கப்படுகிறது.

அத்துடன் நாஞ்சில் நாடும் சோழ ஆளுகைக்குள் போகிறது. இதன்பின் இம்மன்னர்கள் குறித்த தகவல்கள் இல்லை.

**<u>ஆய்மன்னர்கள் கலைப்பாணி:</u>**

**திருநந்திக்கரை குடைவரை கோவில்:**



**முதல் கல்வெட்டு:**

இங்கே பழமையான இரண்டு கல்வெட்டுகள் உள்ளது. இதில் அரசர் பெயரும்





ஆட்சியாண்டும் இல்லை. ஆனால் இதனை ஆய்மன்னர் விக்ரமாதித்ய வரகுணனின் கல்வெட்டாக கருதுகின்றனர்.குடவரையின் அமைப்பும் பழையதாகவேயுள்ளது.

இக்கல்வெட்டில் உள்ள செய்தியாவது இவ்வூர் பெருமக்களும், தளியாள்வானும் குருந்தம்பாக்கத்தில் கூடி இவ்வூரின் பெயரை ஸ்ரீநந்திமங்கம் என மாற்றுகின்றனர். இவ்வூரின் எல்லையாய் பெயரறியாத ஒரு ஆற்றுடன் நந்தியாறும், முதுகோனூரும் பாக்கமங்கலமும் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வூர்கள் இன்னும் அதேபெயரில் வழங்கப்படுவது சிறப்பு.

**இரண்டாம் கல்வெட்டு**:

இக்கல்வெட்டும் முதல் கல்வெட்டின் எழுத்தமைதியிலுள்ளது இவ்வூரைச்சேர்ந்த திருவல்லாழ் மகாதேவர்க்கு மங்கலச்சேரி நாராயணன் சிவாகரன் அளித்த நிலக்கொடைகளை விரிவாய் கூறுகிறது.

**சிதறால்:**



கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தாலுக்காவில் இவ்வூர் அமைந்துள்ளது! இங்குள்ள மலைகளில் இயற்கையாகவே சில குகைகள் காணப்படுகிறது, தற்சமயம் தொல்லியல்துறை கட்டுப்பாட்டில் உள்ளது, தொல்லியல்துறை ஏற்பாட்டில் மலைஏற்றத்திற்கு வாகாக படிகள்






வெட்டப்பட்டுள்ளது. சுமார் ஒரு கி.மீ தொலைவில் மலையேற்றம் ஏறியபின் இச்சமண தலத்தை அடையலாம். கல்வெட்டில் இம்மலை திருச்சாரணத்து மலை என அழைக்கப்படுகிறது. சாரணர்களாகிய சமணர்கள் வாழ்ந்ததினால் இம்மலைக்கு இப்பெயர் வந்திருக்க கூடும்.

9ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆய்மன்னன் விக்ரமவரகுணவர்மனது கல்வெட்டு இங்கு பழமையானது இவர் இக்கோவிலிலுள்ள இறைவிக்கு (பட்டாரிக்கு) அணிகலன்கள் கொடுத்ததை தெரிவிக்கிறது. இதனால் இந்த இறைவி(பகவதி) சமண சமய யக்ஷி யாக இருந்திருக்ககூடும்.


மேலும் இக்கோவில் பின்னர் 13 ம் நூற்றாண்டளவில் இந்துமத கோவிலாய் மாற்றமடைந்ததை பிற்காலத்திய கல்வெட்டுகள் வாயிலாகவும், கட்டுமானம் வாயிலாகவும் உணரலாம்.

**குறத்தியறை குடைவரை:**

அழகியபாண்டியபுரம் ஊராட்சியில் உள்ளது இவ்வூர் இங்கு ஓர் எளிய குடைவரை உள்ளது. குடைவரைப்பெருமாள் அவ்வையாரம்மன் என அழைக்கப்படுகிறார். இங்கே மிகவும் அழகிய நின்றநிலைப்பெருமாள் சிலையும் சிதைந்த



அமர்ந்தநிலை பெருமாள் சிலையும் உள்ளது. இவை ஆய்மன்னர்களின் கலைப்பாணியாக கருதப்படுகிறது. இவை தவிர கன்னியாகுமாரி அருங்காட்சியகத்திலும் ஓர் அழகிய பெருமாள்சிலை உள்ளது.





**விழிஞம்:**

இக்கோவில் கேரள மாநிலத்தில் அமைந்துள்ளது. இதில் கல்வெட்டு இல்லையெனினும், ஆய் மன்னர்களின் பழைய நகராய் விழிஞம் இருந்ததினால், இக்குடைவரை அவர்களாய் குடைவித்ததாய் கருதப்படுகிறது.

***Reference :***


*1.வேளிர் வரலாறு.*

*2.பாண்டியர் செப்பேடுகள் பத்து.*

*3.தென்மாவட்ட குடைவரைகள்.*

*4. ஆய் மன்னர்கள் நான்கு செப்பேடுகள் மற்றும் சில சேதிகள்.*

*5.அனந்த சுப்பிரமணியன் (திணை ஜூன் 2015- ஆகஸ்டு 2015 இதழில் வெளிவந்த கட்டுரை).*




# திருப்புறம்பியம் 2


சிவ சிவ
அருள்தரும் கரும்படு சொல்லியம்மை உடனுறை
அருள்மிகு சாட்சிநாத சுவாமி திருக்கோயில்
சிட்டி யூனியன் பாங்க் லிட்..




**முனைவர் ப. காளீஸ்வரன்**
*இளநிலை அறிவியல் அலுவலர்,*
*வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகம்,*
*மதுரை.*

## முதலாம் இராசராச சோழர்:

சோழப் பேரரசர்களில் கோச்செங்கட் சோழன் காவிரியின் இரு கரைகளிலும் 79 சிவன் கோயில்களை மாடக் கோயில்களாக எடுப்பித்தார். அதில் பல திருக்கோயில்கள் தேவார பாடல் பெற்ற திருத்தலங்களாகவும் இருக்கின்றன. இவரின் காலத்திற்குப் பிறகு பல நூறு ஆண்டுகளுக்குப் பின்பு ஆட்சிக்கு வந்த முதலாம் ஆதித்த சோழர் காவிரிக் கரைகளில் இருந்த செங்கல் தளிகள் 108ஐ கற்றளியாக மாற்றினார். இதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த பல சோழப் பேரரசர்களும் தங்கள் பங்கிற்கு திருக்கோயில்களை எழுப்பினர், திருக்கோயில்களுக்கு பல நிவந்தங்களை அளித்தனர். கோவில் நிர்வாகம் சிறப்புற செயல்பட வழி வகுத்தனர். கோயில் வழிபாட்டிற்கு மட்டுமன்றி, ஊரை நிர்வகிக்கக்கூடிய ஒரு மையமாகவும் திகழ்ந்தது என்பதற்கு பல திருக்கோயில் கல்வெட்டுகள் சான்றாக இருக்கின்றன.

சோழ பேரரசர்களை பற்றி பேசும் பல கல்வெட்டுகளில், ஓர் பெண் புலியாக விளங்கிய, திருப்பணிச் செம்மல் செம்பியன் மாதேவிக்கும் சிறப்பிடம் உண்டு. இவரின் பக்தி வேட்கையினாலே சோழப் பேரரசில் இவருடைய காலத்தில் திருப்பணிகள் புலி பாய்ச்சல் கண்டன. இவ்வம்மையாரின் காலத்தில் சோழப்பேரரசுக்கே ஒரு திருப்புமுனையாக அமைந்த திருப்புறம்பியம்




ஊர் திருத்தலமும் திருப்பணிகளைக் கண்டது. செம்பியன் மாதேவியார் கோனேரிராஜபுரம், ஆடுதுறை, திருக்கோடிக்காவல், குத்தாலம், செம்பியன் மகாதேவி, ஆனாங்கூர், திருஆரூர் அறநெறி, மயிலாடுதுறை மாயூரநாதர் திருக்கோயில், திருவக்கரை, சென்னையில் அமைந்திருக்கும் வட திருமுல்லைவாயில், விருத்தாசலம் என்று பல திருக்கோயில்களை கற்றளியாக எடுப்பித்து அரும்பணியாற்றியுள்ளார்.

செம்பியன் மாதேவியார் தாம் எழுப்பிய திருக்கோயில்களில் புதிய மாற்றங்களைப் புகுத்தினார். அவர் திருப்பணி செய்த திருக்கோவில்களிலும் அதே மாற்றங்களை ஏற்படுத்தினார். இவர் முதலில் கட்டிய கோனேரி ராசபுரம் என்று தற்போது அழைக்கப்படும் திரு நல்லம் எனும் திருத்தலத்தில் இத்தகைய மாற்றங்களைக் காணலாம். இவர் காலத்திற்கு





முன்னர் தேவகோட்டங்களில் தெற்கில் தென்முகக் கடவுளும், மேற்கில் லிங்கோத்பவரும், வடக்கில் பிரம்மாவும் இடம்பெற்று இருந்தனர். செம்பியன் மாதவியர் காலத்திற்குப் பிறகு தேவகோட்ட சிற்பங்கள் விரிவாக்கம் செய்யப்பட்டன. அவற்றில் புதிதாக விநாயகர், நடராசர், அகத்தியர், அர்த்தநாரீஸ்வரர், பிட்சாடனர், சந்திரசேகரர் போன்ற தெய்வங்களுக்கும் கோட்டங்களில் சிலை எடுப்பித்தனர். இவர் கற்றளியாக்கிய அனைத்து திருத்தலங்களிலும் இவற்றை காணலாம். நாம் காண்கின்ற சிவன் கோயில்களில் தேவகோட்டங்களில் நான்கிற்கும் மேற்பட்டு எட்டு அல்லது ஒன்பது தெய்வங்கள் வரை காணப்பட்டால் அவை நிச்சயம் செம்பியன் மாதேவியாரின் காலத்திலோ அல்லது அவர் காலத்திற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த சோழப்பேரரசர்களின் காலத்திலோ திருப்பணி கண்ட கோவிலாகத்தான் இருக்கும் என்று உறுதியாக சொல்ல முடியும்.

செம்பியன் மாதேவியார் ராசராச சோழனின் ஆட்சி காலம் வரை இருந்தார். கண்டராதித்த சோழரின் ஆட்சிக்குப் பிறகு அரிஞ்சயச்சோழர், சுந்தர சோழர், ஆதித்த கரிகாலர், உத்தமசோழர், இராசராச சோழர் என சோழப் பேரரசர்களின் ஆட்சிக் காலங்களில் இவர் வாழ்ந்து இராஜராஜ சோழரின் ஆட்சி காலத்தில் மறைந்துள்ளார். இவரின் பெயர் தாங்கிய கல்வெட்டு கிபி 1001 வரை காணப்படுவதன் மூலம் இராசராசன் காலத்தில் அதாவது கிபி 1001க்குப் பிறகு இவர் இயற்கை எய்திருக்கலாம் என்று கருத முடிகிறது. கிபி 941 முதல் கிபி 1001 வரை 60 ஆண்டு காலம் அரிய திருப்பணியை இந்த மழவர் குல மாணிக்கம் ஆற்றியுள்ளார். கிபி 1001 என்பது இராசராச சோழரின் 16 ஆவது ஆட்சியாண்டு ஆகும்.

பல்வேறு கோவில்களுக்கு திருப்பணி ஆற்றிய செம்பியன் மாதேவியார் சோழப் பேரரசர்களின் எழுச்சிக்குக் காரணமான திருப்புறம்பியம் திருத்தலத்திலும் திருப்பணி ஆற்றி உள்ளார். இவருடைய காலத்திற்கு முன்னதாக இத்திருக்கோயிலில் நான்கு தேவகோட்டங்கள் மட்டுமே இருந்தன. இராஜராஜ சோழரின் பத்தாவது ஆட்சி ஆண்டில் (கிபி 995) திருப்புறம்பியம் உடையார் கோயிலில் 8 பரிவார தேவர்களை இவர் எழுந்தருளச் செய்துள்ளார். இக்கல்வெட்டில் இவருடைய பெயர் நேரடியாக இல்லை என்றாலும் அஷ்ட பரிவாரம் எடுப்பிக்கும் பழக்கம் செம்பியன் மாதேவியரிடம் இருந்ததன் மூலம் அவரின் நேரடி கண்காணிப்பிலோ அல்லது அவரின் தூண்டுதலாலே இப்பரிவார தேவர்கள் எழுந்தருள செய்திருப்பார் என்று ஊகிக்க முடிகிறது. திருக்கோவிலில் எழுந்தருளிவிக்கப்பட்ட எட்டு பரிவார தேவர்களுக்கும் சந்தி விளக்கு எரிப்பதற்கு பத்துமா பொன் அளிக்கப்பட்டுள்ளது. பொன் அளித்தவர் வானவன் மூவேந்த வேளார் ஆவார்.

ஒவ்வொரு மன்னர்களுடைய ஆட்சிக் காலத்திலும் நந்தா விளக்கு எரிப்பதற்கு பல நிவந்தங்களை அளித்திருக்கின்றார்கள். அந்த



வகையிலே ராஜகேசரிவர்மருடைய ஏழாவது ஆட்சி ஆண்டு கல்வெட்டு ஒன்று விளக்கு எரிப்பதற்காக நிலக் கொடை அளித்த செய்தியைக் காட்டுகிறது. சாமந்தி குமரன் மாதேவன் என்பவர் திருவிளக்கு ஒன்று எரிய வைப்பதற்காக நிலக் கொடை அளித்த செய்தியை இயம்புகிறது. அந்த நிலத்தினை பெற்றுக்கொண்டு விளக்கு எரிக்க கூடிய பொறுப்பை தேவகன்மிகளே ஏற்றுக் கொண்ட செய்தியும் கூறப்படுகிறது. இதில் நிலத்தின் எல்லையும் குறிக்கப்பட்டு இருக்கின்றது.

**"வானவன்மாதேவி சதுர்வேதி மங்கலத்து ராஜகேசரிவதிக்கு கிழக்குத் தாமத்து வாய்க்காலுக்கு வடக்கு மேற்கடஞ்ச முதற்கண் ஊற்று தெற்கி நின்று முதற்..."**

என்று அந்த நிலத்தினுடைய எல்லை குறிக்கப்பட்டிருக்கின்றது. அந்த நிலத்திலிருந்து வரக்கூடிய வருமானத்தை வைத்து ஒரு நந்தா விளக்கெரிப்பதற்காக தேவகமின்களே அப்பணியை ஏற்றுக்கொள்கிறார். **"திருபுறம்பியமுடைய பரமசாமிக்கு"** என்று அக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

முதலாம் இராசராச சோழரின் மூன்றாவது ஆட்சியாண்டில் (கி.பி.988) திருக்கோயில் இறைவனை திருமஞ்சனம் நீராட்டு செய்வதற்காக ஸ்ரீ கண்டன் மதுராந்தக தேவனான ஸ்ரீ உத்தம சோழ தேவருக்காக இத்தேவரை திருவயிறு வாய்த்த உடையார் கண்டராதித்தர் தேவியார் செம்பியன் மாதேவியார் என்னும் திருப்பணிச் செம்மல் வெள்ளிக் கலசம் ஒன்று கொடையாக அளித்துள்ளார். இதனை மூன்று விதமான நிறைகளில் இந்த கல்வெட்டு குறிப்பிடுகிறது. பொதுவான நிறையாக நூற்று நாற்பத்து முக்கழஞ்சே முக்காலே இரண்டு மஞ்சாடி எனவும், விரையாக்கலி என்னும் துலா கோலால் நிறை ஆனது சரியாக அறிய முடியாத அளவு சிதைந்தும் காணப்படுகிறது. திருப்புறம்பியத்தில் உள்ள ஊர் கல்லால் நிறை காணும் பொழுது அது நூற்று நாற்பதின் கழஞ்சு முக்காலே மூன்று மஞ்சாடியாக இருப்பதாக குறிப்பிடப்படுகிறது.

செம்பியன் மாதேவியார் அஷ்ட பரிவாரம் எடுப்பதற்கு முன்னதாகவே இத்திருக்கோயிலுக்கு கொடை அளித்துள்ளார் என்பதனை இராசராச சோழரின் காலத்து கல்வெட்டு உறுதி செய்கிறது.

செம்பியன் மாதேவியார் இத்திருக் கோயிலுக்கு வெள்ளிக்கலசம்

செய்தளித்த இராசராசசோழரின் அதே பத்தாவது ஆட்சி ஆண்டில் மழவரையர்கள் இத்திருக்கோயிலுக்கு விளக்கெரிப்பதற்கு கொடை அளித்துள்ளனர்.

முதலாம் இராசராச சோழரின் எட்டாவது ஆட்சி ஆண்டில் (கிபி 993) வடகரையில் இருக்கக்கூடிய திருப்புறம்பியத்து இறைவருக்கு நந்தா விளக்கு எரிப்பதற்காக, தென்கரை பகுதியில் இருக்கக்கூடிய புறக்கிளியூர் நாட்டுப் பிரிவைச் சார்ந்த புங்கண்ணூர் கிழவன் தெற்றி வைய்குடி என்னும் வானவன் மூவேந்த வேளான் என்பவருக்கு திருப்புறம்பியத்தில் நிலம் இறையிலியாக விற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

முதலாம் ராசராச சோழரின் அதே எட்டாம் ஆட்சி ஆண்டில் தென்கரை மூவேந்த வேளான் என்பவர் ஐந்து நந்தா விளக்கு எரிப்பதற்காக 150 கலம் நெல் திருக்கோயிலுக்கு அளித்துள்ளார். ஒவ்வொரு ஆண்டும் 150 கலம் நெல்லானது திருக்கோவில் முற்றத்தில் வந்து அளப்பதாக ஒப்புக்கொண்டு உள்ளார். இந்த ஐந்து நந்தா விளக்கும் வானவன் மூவேந்த வேளான் பெயரில் மட்டும் அல்லாது அவருடைய குடும்பத்தில் இருக்கக்கூடிய மற்றவர்களின் பெயராலும் வழங்கப்பட்டுள்ளது. வானவன் மூவேந்த வேளான் இரண்டு விளக்கும், அவருடைய தம்பியர் மூன்று பேர் சேர்ந்து மூன்று விளக்குமாக மொத்தம் ஐந்து விளக்கு எரிப்பதற்கு 150 கலம் நெல் அளித்துள்ளனர்.

முதலாம் ராசராசசோழரின் ஒன்பதாவது ஆட்சி ஆண்டில் (கிபி 994) இத்திரு கோயில் பண்டாரத்தினை வானவன் மூவேந்த வேளான் ஆய்வு செய்துள்ளார். முதலாம் ராசராச சோழரின் இரண்டாவது ஆட்சியாண்டு முதல் தற்பொழுது நடைபெறும் ஒன்பதாவது ஆட்சியாண்டு வரை கோவில் வரவு செலவு கணக்குகளை சரி பார்த்து சேர்ந்து இருந்த பொன்னில், செலவுக்கு போக மீதி இருந்த பொன்னைக் கொண்டு திருப்புறம்பியமுடைய இறைவருக்கு சில ஆபரணங்களை செய்து அளிக்க உத்தரவிடுகிறார். மூன்று பட்டங்களுக்கு ஒரு கழஞ்சும், ஒரு பொற்பூவிற்கு ஐந்து கழஞ்சு பொன்னும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இறைவனுக்கு தண்ணீர் அமுது செய்ய வெள்ளி வட்டில் ஒன்று 40 முக்கழஞ்சே 3 மஞ்சாடி ஒரு மாவினால் செய்து தரப்பட ஆணையிடப்படுகிறது. கல்வெட்டானது, கோவில் கணக்கு வழக்குகளை அவ்வப்பொழுது அரசு சரி பார்க்கும் என்பதனை சுட்டி நிற்கின்றது.





இவ்வாறு கணக்கு பார்த்து இத்திருக் கோவிலிலே நிறைய களவு போயிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு மூன்றாம் இராசராசர் காலத்திலே அவர்களுக்கு தண்டனை கொடுக்கப்பட்ட செய்தியும் இத்திருக்கோயில் கல்வெட்டில் காணப்படுகிறது.

முதலாம் இராசராச சோழரின் 16வது ஆட்சி ஆண்டிலே திருப்புறம்பியமுடைய மகாதேவருக்கு மன்றாடி ஒருவர் நந்தா விளக்கு எரிப்பதற்கு தானம் அளிக்கின்றார்.

இத்திருக்கோயிலில் பங்குனி உத்திரத்தன்று சந்தி விளக்கு எரிப்பதற்கு கொடையாளர் ஒருவர் கொடை அளித்த செய்தி முதலாம் இராசராச சோழரின் கல்வெட்டில் காணப்படுகிறது.

மேலும் முதலாம் ராசராச சோழரின் 12வது ஆட்சி ஆண்டில் திருப்பள்ளித் தாமம் சாத்துவதற்காக களக்குடி உடையான் வேளாண் என்பவர் அளித்த கொடை பற்றிய செய்தி காணப்படுகிறது.

முதலாம் இராசராச சோழரின் 16 ஆவது ஆட்சி ஆண்டில் (கிபி 1001) இத்திருக்கோவில் எழுந்தருளி இருக்கக்கூடிய நடராச பெருமாளுக்கும், பிராட்டியாருக்கும் திருப்பள்ளிக்கட்டிலுக்கு இவ்வூர் வளஞ்சியர்கள் இரண்டு நந்தா விளக்கு கொடையாக அளித்துள்ளனர். இந்த நந்தா விளக்கு எரிக்கும் செலவிற்காக நிலத்தை தானமாக கொடுத்துள்ளனர்.

முதலாம் இராசராச சோழனின் 25ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்று, திருப்புறம்பியமுடைய மகாதேவர் என குறிப்பிடப்படுகிறார். இதுவும் பிரம்பில் நகரத்தில் வாழும் ஒருவருடைய நிவந்தங்கள் பற்றி குறிப்பிடுகிறது. பிரம்பில் நகரத்தில் வெள்ளாளன் போசனப் பாடி உடையான் அறணதி மண்ணி என்பானின் மனைவி ஒழியாபகை பசுபதி என்பவர் கோவிலுக்கு ஒரு நந்தா விளக்கு எரிப்பதற்கு ஆகும் செலவில பாதியைக் கொடுக்கிறார், அந்த தொகையிலிருந்து மாறன் பட்டன் என்பவர் விளக்கு எரிக்க வேண்டும் எனவும், அந்த விளக்கு எரிப்பதற்கு ஆகும் மறுபாதியை ஒழியாப் பகை பசுபதி அம்மாளுடைய மக்களிடமிருந்து பெற்றுக் கொண்டு இக்கோவிலுடையார் எரிக்க வேண்டும் எனவும் அவர் ஏற்பாடு செய்திருக்கின்றார். தான் மட்டுமன்றி தன்னுடைய பிள்ளைகளும் இறைப்பணியில் ஈடுபட வேண்டும் என்பதை இந்த ஒழியா பகை பசுபதி அம்மாள் தம்பதியினர் அழகாக பத்தாம் நூற்றாண்டிலேயே நமக்கு எடுத்துக்காட்டி விட்டு சென்றிருக்கின்றனர்.

## முதலாம் ராஜேந்திர சோழர்:

காவிரி கரையை ஒட்டி அமைந்த பல திருத்தலங்களில் காணப்படும் கல்வெட்டுகளில் அது காவிரியின் வடகரையா அல்லது தென்கரையா என்பதை அறிந்து கொள்ளும் வகையிலே வடகரை என்ற வார்த்தை நிறைய காவிரி ஆற்றின் வடபகுதியில் இருக்கக்கூடிய கோயில்கள் காணமுடிகிறது.

திருப்புறம்பியம் திருத்தலமும் காவிரி ஆற்றின் வடபகுதியிலே அமைந்திருப்பதால் இத்திருத்தலத்து கல்வெட்டுகளில் வடகரை என்ற வார்த்தையை நாம் காண முடிகிறது.

முதலாம் ராஜேந்திர சோழரின் 16வது ஆட்சி ஆண்டில் (கிபி 1030) திருப்புறம்பியம் திருத்தலத்து ஊர் கீழ்க்கண்டவாறு குறிக்கப்படுகிறது. வடகரை ராஜேந்திரசிங்க வளநாட்டு அண்டாண்டு கூற்றத்திலிருந்து நீங்கிய தேவதானம் திருப்புறம்பியம் என்று குறிப்பிடப்படுகிறது. இத்திருபுறம்பியத்து இறைவர் திருபுறம்பியத்து ஆதித்தீஸ்வரம் உடைய மகாதேவர் என்று இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறார். இத்திருத்தலம் ஆதித்த சோழனால் எழுப்பப்பட்டது என்பதனை மெய்ப்பிக்கும் வகையிலே ஆதித்த ஈஸ்வரம் உடையார் என்று இத்திருக்கோவில் இறைவன் அழைக்கப்பட்டிருப்பதை சில கல்வெட்டுக்கள் சான்றாக நமக்கு காட்டி நிற்கின்றன.

இத்திருத்தலத்தில் காணப்படும் முதலாம் ராஜேந்திர சோழரின் 16வது ஆட்சி ஆண்டு கல்வெட்டு ஆதித்த ஈஸ்வரம் என்ற பெயருக்கு

சான்றாக நிற்கின்றது. இத்திருத்தலத்தில் இறைவனுக்கு சந்தி விளக்கு எரிப்பதற்காக இதே தேவதானத்தில் இருக்கக்கூடிய பிரம்பில் என்னும் ஊரில் விரையாகலி பெருந்தெருவில் வசிக்கக்கூடிய சங்கரபாடியார்கள், கொடையாளரிடம் இருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு விளக்கெரிப்பதற்கு எண்ணெய் கொடுக்க ஒப்புக் கொள்கின்றார்கள். காலை மற்றும் உச்சி கால பூசைக்கு, காலை ஐந்து சந்தி விளக்கும், உச்சி கால பூசையின் போது ஐந்து சந்தி விளக்கும் எரிப்பதற்காக வேளாண் நாட்டு நெற்குப்பை உடையான் வெண்காடன் குடிதாங்கி தேவர் என்பவர் 50 காசுகளை கோவில் பண்டாரத்திடம் ஒப்படைக்கிறார். ஒரு நாளைக்கு பத்து விளக்கிற்கு 50 காசுகள் வீதம் கொடுக்கப்பட்டிருப்பதால் ஒரு சந்தி விளக்கிற்கு 5 காசு என்ற வீதம் முதலாம் ராஜேந்திரச் சோழரின் காலத்தில் திருப்புறம்பியத்திலே கணக்கிடப்பட்ட செய்தியை இக்கல்வெட்டின் மூலம் நாம் அறிய முடிகிறது. இதே கல்வெட்டில் பாச்சநாட்டை சேர்ந்த மற்றொருவர் 15 காசுகள் பிரம்பில் நகரில் வசிக்கும் விரையாக்கலி பெருந்தெரு சங்கரபாடியார்களிடம் கொடுத்து ஆழாக்கு எண்ணெய் தினம் தோறும் கோவிலுக்கு கொடுக்க வேண்டும் என்று கொடை அளித்த செய்தியை அறிய முடிகிறது.

இக்கல்வெட்டில் முதலாம் ராஜேந்திர சோழரின் மிக நீண்ட மெய்க்கீர்த்தி மூலம் அவரின் பல்வேறு வெற்றிச் செய்தியை நாம் அறிய முடிகிறது. இந்த மெய்க்கீர்த்தியானது முதலாம் ராஜேந்திர சோழரின் வரலாற்றை அறிய உதவும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இந்த ஒரு கல்வெட்டிலேயே ஒரு நாளைக்கு மூன்று வேளையும் கோவிலில் விளக்கு எரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட செய்தி பொறிக்கப்பட்டிருக்கிறது. யார் அதற்கு பொறுப்பானவர்கள் என்பதும் பொறிக்கப்பட்டுள்ளது. சந்திர ஆதித்தவரை அட்டக்கடவும் என்று அவர்கள் சொல்லக்கூடிய கல்வெட்டு வாசகத்தில் இருந்து சந்திரனும் சூரியனும் இந்த உலகிலே இருக்கக்கூடிய வரை இந்த பணியை நாங்கள் செய்வோம் என்று அவர்கள் ஒப்புக் கொள்வதாக இந்த கல்வெட்டு நமக்கு செய்தியினை காட்டுகிறது. கோவிலில் விளக்கினை எரிப்பதற்கு அரசன் எவ்வாறு ஏற்பாட்டினை செய்து தந்தார் என்ற செய்தி நமக்கு கிடைக்கிறது. இதன் மூலம் கோவிலில் விளக்கு எரிப்பதற்கு தேவையான பணி செய்யப்பட்டு விட்டது, அந்தப் பணியை செய்வதற்கு ஆட்களும் நியமிக்கப்பட்டு விட்டது, இனி தொடர்ந்து அது நடைபெறும் என்ற ஒரு நிறைவுடன் மன்னர். அந்த மாந்தர்களின் பெயர்களை இன்றளவும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். சோழர்களின் எழுச்சிக்கு காரணமாக இருந்த இந்த ஊரில் வீற்றிருக்கக் கூடிய சாட்சிநாதனுக்கு சோழர்கள் செய்த ஒப்பற்ற காரியத்தில் இதுவும் ஒன்று.

## ஆடல் வல்லான் மற்றும் உமா மகேஸ்வரி உருவங்கள்:

இறைவனின் திருமேனி எடுத்து வழிபடும் நிகழ்வு காலம் காலமாகவே நடைமுறையில் இருக்கின்றது. கலியுகத்தில் இறைவன் அர்ச்சாவதாரமாகவே அருள்வதாக பல சமய இலக்கியங்கள் கூறுகின்றன. அவ்வகையில் அர்ச்சாவதாரம் எனப்படும் சிலை வழிபாடு முக்கிய கொண்டாட்டமாகவே இருந்துள்ளது. இதனை மெய்ப்பிக்கும் விதத்தில் பல்வேறு திருத்தலங்களில் இறைவன் திருமேனியினை பல்வேறு சமுதாய நிலையில் இருந்தவர்களும் செய்து அளித்துள்ளனர் என்ற செய்தி கல்வெட்டுக்கள் மூலம் நமக்கு கிடைக்கின்றது.

முதலாம் ராஜேந்திர சோழரின் 23வது ஆட்சியாண்டு இலங்கேஸ்வர குலகால தெரிஞ்ச வேளம் என்று ஒரு படையில் பணிபுரிந்த பெண் திருபுறம்பியத்து இறைவன் திருக்கோவிலில் வழிபடுவதற்காக ஆடல் வல்லான் மற்றும் உமா பரமேஸ்வரி உருவங்களைச் செய்து அளித்து, நிவந்தங்களும் கொடுத்துள்ளார். மேலும் வழிபாட்டிற்கும் திருப்பணிகளுக்கும் காசு, நிலம் ஆகியவற்றையும் பிரம்பில் நகர்த்தவர்களிடம் கொடுத்துள்ளார். கல்வெட்டு ஆங்காங்கே சிதைந்து



இருப்பதாக புத்தகம் காட்டுகிறது. அவ்வாறு சிதைந்த கல்வெட்டுகளில் ஆங்காங்கே இருக்கக்கூடிய சில வார்த்தைகளைப் பார்க்கும் பொழுது நிலம் அளக்கப்பட்ட கோல் தொடர்பான செய்தியும், விளக்கு அளித்த செய்தியும் அறிய முடிகிறது. இக்கல்வெட்டு மூலம் படைப்பிரிவில் பெண்கள் பணியாற்றியதையும், இலங்கேஸ்வர குல கால என்ற வார்த்தையில் இருந்து, இப்படைப் பிரிவு ஈழத்துடன் தொடர்பு கொண்டு செயல்பட்டு இருக்கக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன அல்லது ஈழத்தை வென்றதால் முதலாம் ராஜேந்திர சோழருக்கு உள்ள பட்டப் பெயர்களில் இலங்கேஸ்வர குல காலன் என்பதும் ஒன்றாக இருந்திருக்க வேண்டும்.

**முதலாம் குலோத்துங்க சோழர்:**

இத்திருக்கோயிலில் முதலாம் குலோத்துங்க சோழரின் 43-வது ஆட்சி ஆண்டு (கிபி 1113) கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. இக்கல்வெட்டு பிற்பகுதியானது கட்டடத்தில் மறைந்து விட்டதாக புத்தகம் குறிப்பிட்டாலும், சில செய்திகளை இக்கல்வெட்டு தாங்கி நிற்கின்றது. இத் திருக்கோயிலில் பங்குனி திருநாள் விழா சிறப்பாக நடைபெற்றதை கல்வெட்டு எடுத்தியம்புகிறது. பொதுவாகவே சிவன் கோவில்களில் பங்குனித் திருவிழாவானது வெகு விமரிசையாக நடைபெறுவதை சமீப காலமாகவே நாம் கண்கூடாகக் காண்கிறோம். அவ்வகையில் திருப்புறம்பியத்திலும் பங்குனித் திருநாள் சிறப்புற நிகழ்வு பெற்றதை இக்கல்வெட்டு கூறுகிறது. குலோத்துங்க சோழரின் 43வது ஆட்சி ஆண்டில் உலகுய்ய வந்த சோழ வளநாட்டு அண்டாண்டு கூற்றத்து திருபுறம்பியமுடைய மகாதேவர் என்று குறிப்பிடப்படுகிறது. இதற்கு முன்னர் காணப்பட்ட கல்வெட்டுகளில் வடகரை என்றும், ராஜேந்திர சிங்கவள நாடு என கூறப்பட்டு வந்த திருப்புறம்பியம் தற்பொழுது உலகுய்ய வந்த சோழ வளநாட்டின் கீழ் கொண்டு வரப்படுகிறது. அக்காலத்தில் ஏற்பட்ட நிர்வாக மாற்றத்திற்கு கல்வெட்டு சாட்சியாக நிற்கிறது. முதலாம் ராஜேந்திர சோழர் காலத்திலே இது ராஜேந்திரசிங்க வளநாட்டின் கீழ் இருந்தது. பங்குனித் திருநாளுக்கும், திருவேட்டைக்கும் தீர்த்த பிரசாதத்திற்கும், அமுது அரிசி, கறியமுது, நெய் அமுது, தயிர் அமுது ஆகியவற்றிற்காக பராந்தக சதுர்வேதி மங்கலத்து தென்பிடாகையில் திருவெள்ளறை நல்லூர் வெள்ளாளர் அரிவாள் தாயனும், சிறு தொண்டரும் நிலக்கொடை அளித்துள்ளனர்.

**மூன்றாம் இராசராசர்:**

முதலாம் ஆதித்த சோழனால் கற்றளியாக எழுப்பிக்கப் பெற்று செம்பியன் மாதேவியார், இராசராச சோழர் காலத்திலும் சிறப்புற்று விளங்கிய இந்த திருக்கோயிலில் பல்வேறு வகையில் பொன்னும், வெள்ளியும் நிவந்தம் அளிக்கப்பட்டு, நிலம் நந்தா விளக்கிற்குக் கொடையாகக் கொடுக்கப்பட்டு சிறப்புற விளங்கிய திருக்கோயிலில் மூன்றாம் இராசராசன் காலத்தில் களவு போயிருப்பது கண்டறியப்படுகிறது. முதலாம் இராசராச சோழர் காலத்தில் மூவேந்த வேளாரினால் இத்திருக்கோயிலில் கணக்கு சரிபார்க்கப்பட்டு மீதமிருந்த பொன்னானது இறைவனுக்கு ஆபரணமாக மாற்றி அளிக்கப்பட்டது. ஆனால் காலங்கள் சில சென்ற பிறகு இத்திருக்கோயிலில் இருக்கக்கூடிய நிதியை சிலர் தவறாகக் கையாண்டது மூன்றாம் இராசராசசோழரின் ஒன்பதாம் ஆண்டு கண்டுபிடிக்கப்படுகிறது. கல்வெட்டினைக் காணும் பொழுது இத்திரு கோயில் பரிவார தேவர்கள் கோயிலுக்கும் தனித்தனியாக கணக்கு காணி உடையவர்கள் இருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது. இப்பரிவார தேவர்கள் கோயில்களில் கணக்கு காணி உடைய பாவை உடையான் ஆதித்தன் தனிமை நாகனும், இவன் தம்பியும் சிவதுரோகம் செய்தனர் என்று கண்டறியப்பட்டது. இவர்கள் இக்கோயில் பண்டாரத்தில் இருந்த சில காசை, கைக் கொண்டனர். எனவே பரிகாரமாய் இவர்கள் நிலத்தை சண்டேஸ்வரப் பெருவிலையாக விற்று அக்காசினை இத்திருக்கோவில் பண்டாரத்தில் அளிக்க வேண்டும் என்று ஒரு ஆணை இடப்படுகிறது. இத்திருக்கோயில் திருக்காம கோட்டம் உடைய பெரிய நாச்சியார் கோயிலிலும், அஷ்ட பரிவார தேவர்கள் கோயில்களிலும் கணக்கு காணி உடையவர்கள் இத்திருக்கோவில் பண்டாரத்தில் இருந்த நெல்லை எடுத்துச் சென்றும், கருவூலத்திலிருந்து காசினை எடுத்து இவர்கள் சொந்த செலவிற்கும், இத்திருக்கோயிலில் இருக்கக்கூடிய செங்கலை விற்று தங்கள் வீட்டிற்கு அப்பணத்தை எடுத்துச் சென்று சிவ துரோகம் செய்தது கண்டறியப்பட்டு சண்டேஸ்வரப் பெருவிலையாக இவர்கள் நிலத்தை விற்று 40 ஆயிரம் காசுகள் இத்திருக்கோவில் பண்டாரத்தில் செலுத்தியதற்கான நில விலை ஆவணமாக இக்கல்வெட்டு உள்ளது.

பிற்காலச் சோழர் எழுச்சிக்கு காரணமாக இருந்த ஊரிலே அரசாட்சி புரிந்து கொண்டிருந்த இவ்விறைவர் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோருக்கு காட்சி கொடுத்து அவர்களால் பாடல்கள் பெற்று, காலத்தால் முற்பட்ட கோயில் என்று சான்று காட்டி, சிலப்பதிகார காலத்தில் இத்திருக்கோவில் இருந்ததற்கு சாட்சியாக நின்று, சோழர்களின் வழித்தோன்றல்கள் காலத்திலும் பல்வேறு திருப்பணிகளையும், நிவந்தங்களையும் பெற்று விரிவாக்கம் கண்டு இன்றும் பழமைக்குச் சான்றாக, சாட்சியாக நிற்கின்றார் கரும்படு சொல்லியம்மை உடனுறை சாட்சிநாதர் என்னும் திருப்புறம்பியமுடைய மகாதேவர்.

**மேற்கோள் நூல்கள்:**


1. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் சரித்திரம்.
2. தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்கள் தொகுதி VI, கும்பகோணம் வட்ட கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, 2015.
3. பொ.இராசேந்திரன், சொ.சாந்தலிங்கம், செம்பியன் மாதேவி (வாழ்வும் பணியும்), பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையம், மதுரை.



# மகாபாரதம் ஒரு பார்வை

பாகம் - 1



வெ.பாலமுரளி
தமிழர் தொன்மவியல் ஆய்வாளர்
மதுரை



விதுரன் நீதியிலிருந்து, கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம், மனு நீதி, என்று இன்றைய அரசியல் சாஸ்திரங்கள் வரை ஆட்சியில் இருப்பவன் இறந்து விட்டால் அவனுடைய மூத்த மகனுக்கே ராஜ்ஜியம் (கட்சி) சொந்தம் என்கின்றன.

மூத்தவனுக்கு கண்ணு தெரியவில்லை, அதனால் அடுத்தவனுக்கு ராஜ்ஜியத்தைக் கொடுத்தார்கள். அது வரை சரி.

அவன் செய்த பாவமோ அவன் தாய் செய்த தவறோ, அவனுக்கு ரத்த சோகை. உடலெல்லாம் வெளுத்து, கை காலெல்லாம் நடுங்கிக் கொண்டிருக்கும். போதாத நேரம், அற்ப ஆயுசில் போயும் சேர்ந்து விட்டான்.

அடுத்து, முறைப்படி எல்லாவற்றிலும் சிறந்து விளங்கிய மூன்றாமவனுக்குத் தான் பட்டம்



சூட்டியிருக்க வேண்டும். ஆனால், அவன் பிறப்பைக் காரணம் காட்டி திரும்பவும் மூத்தவனுக்கே பட்டம் சூட்டினார்கள்.

இந்த இடத்தில் நீங்கள் ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். பீஷ்மர் மற்றும் கிருஷ்ணனைத் தவிர கிட்டத்தட்ட மற்ற எல்லோருடைய பிறப்புமே ஒரு மாதிரி கோக்கு மாக்காகத்தான் இருந்திருக்கிறது. அது கூட ஏதோ பெரிய இடத்து சமாச்சாரம் என்று விடலாம். ஆனால், எல்லோருமே மற்றவர்களை அவர்களின் பிறப்பை வைத்தே கேவலப்படுத்திப் பேசுகிறார்கள். அதுதான் சரியில்லை.

மிஸ்டர் திருதுவும், துரியோதனனும் விதுரனைப் பழிக்கிறார்கள். அர்ஜுனன் கோஷ்டி கர்ணனைப் பழிக்கிறார்கள். இதுபோல் இன்னும்



நிறைய. ஆனால், விதுரனும், கர்ணனும் ரொம்ப அப்பாவி போலிருக்கிறது. யாருமே, "உன்னோட பொறப்பு மட்டும் ரொம்ப ஒழுங்காக்கும்?" என்று கேட்ட மாதிரித் தெரியவில்லை.

சரி ... விஷயத்துக்கு வருவோம்.

அஞ்சா நெஞ்சன் அண்ணனுக்கு, அவனுக்கு வர வேண்டிய ராஜ்ஜியமும் வந்து சேர்ந்தது. அவனுக்குப் பிறகு அவன் பிள்ளை துரியோதனனுக்குத் தானேங்க ராஜ்ஜியப் பொறுப்பு வர வேண்டும். அதுதானங்க முறை ?

இதில் தர்மராசன் குய்யோ முறையோ என்று கத்த, (பின்னாளில்) கடவுளாக சித்தரிக்கப்பட்ட கிருஷ்ணனும் சப்போர்ட். இது எந்த ஊர் நியாமுங்கோ ?



இந்த இடத்தில் "எங்கிருந்தோ வந்தான், இடை ஜாதி நான் என்றான்" என்ற கிருஷ்ணனைப் பற்றிப் பார்ப்போம். "ஒரிஜினல் மகாபாரதத்தில்" கிருஷ்ணனை கடவுள் என்று யாரும் குறிப்பிடவில்லை (இப்போ உள்ள மகாபரதம், நிறைய இடைச் செருகல்கள் நிறைந்த *Modified Version* தான்). எல்லாம் அறிந்த , சித்து வேலைகள் பல தெரிந்த, நிறைய ஞானமுள்ள, (அவன் நாட்டு) மக்களுக்கு நன்மைகள் பல செய்த ஒரு மன்னனாகவே சித்தரிக்கப்பட்டிருக்கிறான்.

மகாபாரதம் நடந்ததாகக் கருதப்பட்ட நாளில் இருந்து கிட்டத்தட்ட 1000 வருடங்களுக்கு இந்த எப்பிசோடுதான் ஓடிக் கொண்டிருந்திருக்கிறது .

கிட்டத்தட்ட கி.பி. மூன்றாம் நூற்றாண்டில், இவ்வளவு விஷயங்கள் தெரிந்த ஒருவன் கடவுளின் அவதாரமாகத்தான் இருக்க வேண்டும் என்று ஒருவன் புரளி கிளப்ப கிருஷ்ணன் கடவுளாக அவதாரம் எடுத்தார். மதன் இது பற்றி மிகவும் விரிவாக எழுதியிருக்கிறார் (கல்வெட்டுக்களில், அன்னையே, பராசக்தியே, எங்கள் இதய தெய்வமே என்றெல்லாம் மிகைப்படுத்தி எழுதுவதில் இது





போன்ற சிக்கல்கள் உண்டு. ஒரு 1000 வருடங்கள் கழித்து இந்த பூமியில் ஏதேனும் ஒரு பெரிய அழிவு நடந்தால் இது போன்ற கல்வெட்டுக்கள் மட்டும் ஜம்மென்று இருக்கும். அதற்குப் பிறகு வரும் சந்ததியினர் மம்மிக்கும் , சின்ன மம்மிக்கும், முத்தமிழ் (??) அறிஞருக்கும் கோயில் கட்டுவார்கள். திராவிடக் கட்சியினர் சரித்திரம் மாற்றி எழுதப் படும். ஜாக்கிரதை. )

கிருஷ்ணனும், அர்ஜூனனும் சேர்ந்து அருகில் உள்ள ஒரு காட்டையே நெருப்பு வைத்து அழிக்கிறார்கள் – ஜஸ்ட் டைம் பாஸுக்காக . அதில் இருந்த விலங்குகள், பறவைகள், வேடுவர்கள் என அனைவரும் நெருப்பில் வெந்து கருகுகிறார்கள். அதை இவர்கள் இருவரும் மனம் விட்டு ரசிக்கிறார்கள் என்கிறார் வியாசர் பெருமான்.

அந்த காட்டிலிருந்து தப்பித்த ஒருவன்தான் மாயன். அவன் கட்டிடக் கலையில் வல்லுநன். என் ஒட்டு மொத்த இனத்தையும் காரணமேயில்லாமல் அழித்த அந்த குரு வம்சத்தை அழிக்கிறேன் என்று சபதம் போட்டு கட்டப்பட்டதுதான் இந்திரப்ரஸ்த மாய மாளிகை. அதில்தான் துரியோதனன் வழுக்கி விழுந்ததைப் பார்த்து திரௌபதி சப்தம் போட்டு சிரித்து பிரைச்சினைக்கு ஓம் என்று பிள்ளையார் சுழி போட்டது.

கிருஷ்ணனின் மகன் பெயர் சாம்பா. தந்தையை விடப் பேரழகன். அதனாலேயே கிருஷ்ணனுக்கு, மகன் பெயரில் ஒரு சின்ன பொறாமையும், பயமும் இருந்திருக்கிறது. ஒரு முறை , கிருஷ்ணன் தன் பெண் தோழியர்களுடன் உடலில் ஆடையேதுமில்லாமல் தண்ணீரில் நீந்தி விளையாடிக் கொண்டிருந்திருக்கிறான்.

தெரிந்தோ தெரியாமலோ அங்கே சாம்பன் வந்து விட, கிருஷ்ணனின் பெண் தோழியரில் ஒருவர், “வாவ்...வாட் எ ஹேண்ட்ஸம் கய்” என்று காமெண்ட் அடிக்க, கிருஷ்ணனுக்கு சுள்ளென்று கோபம் ஏற, அவனை தொழு நோய் பிடிக்க வேண்டும் என்று சாபமிட்டார் என்கிறார் வியாசர்.

பின்னால், கோபம் தணிந்து, சூரியனைப் பிரத்யேகமாக வணங்கி தவம் செய்ய உன் தொழு நோய் நீங்கும் என்று சாப விமோசனமும் வழங்கியிருக்கிறார். அப்படி சாம்பன் போய் வணங்கி தவம் செய்த இடம்தான் ஒடிசாவில் உள்ள கோனார்க் ஆலயம்.

இதுபோன்ற நிறைய சம்பவங்கள், கிருஷ்ணனை ஒரு சாதாரண மனிதனாகவும், மன்னனாகவும் சித்தரித்திருக்கின்றன . கிருஷ்ணனை கடவுளாக ஏற்றுக் கொண்ட நிறைய வரலாற்று ஆசிரியர்கள் இது போன்ற சம்பவங்களை வசதியாக மறைத்து விட்டனர். அது வரலாற்றுக்குச் செய்த, செய்து கொண்டிருக்கும் பச்சைத் துரோகம்.

சரி ...தர்மன் மேட்டருக்கு வருவோம்.

ஆரம்பத்திலிருந்தே நிறைய ஆசைகளையும், பொறாமைகளையும் கொண்ட ஒரு கேரக்டர். தர்மன் என்பது அவனுக்கு வைக்கப்பட்ட பெயர். அவன் தன் தர்ம சிந்தனைகளால் சம்பாதித்த பெயர் அன்று.



மாறுகண் கொண்டவனுக்கு கமலக் கண்ணன் என்று பெயர் வைப்பதில்லையா, அதுபோலதான் தர்மனுக்கும் அந்தப் பெயர்.

சின்ன வயதில் இருந்தே அவனுக்கு கௌரவர்களைப் பிடிப்பதில்லை. ஆட்சியில் அவர்களுக்கே முதல் உரிமை என்பதால் வந்த பொறாமை.



தன் தம்பி அர்ஜுனனைக் கண்டால் கூட அவ்வளவாகப் பிடிப்பதில்லை- அவன் பெரும் அழகனாகவும் மாபெரும் வீரனாகவும் இருக்கிறான் என்பதால்.

திரௌபதியின் சுயம்வரத்தில் தர்மன் தோற்றுப் போகிறான். இருந்தாலும் திரௌபதியின் அழகு அவனைக் கட்டிப் போட்டு விடுகிறது. எனவேதான் அவன் தன் தாயிடம் சென்று திரௌபதியை தனக்கே கட்டி வைக்குமாறு கெஞ்சுகிறான். மற்ற



சகோதரர்களிடமிருந்தும் அதே ரெக்வஸ்ட் வர, ஒரு பெண்ணால் தன் மைந்தர்களிடம் சண்டை வந்து விடக் கூடாதென்று கருதி "ஐவரும் பகிர்ந்து புசியுங்கள்" என்றாள் குந்திதேவி (அர்ஜுனனுக்கு எப்படி இருந்திருக்கும்).

தர்மனுக்கு சின்ன வயதில் இருந்தே சூதாட்டம் மிகவும் பிடித்த விளையாட்டு. அந்த கால கட்டத்திலேயே அது தீய பழக்கம் என்றுதான் கருதப்பட்டிருக்கிறது. அதனால் விளைந்த அபத்தங்கள் எல்லோரும் அறிந்ததே.

அது மட்டுமல்லாமல், தான் நாடாள வேண்டுமென்ற ஆசையினால் கிட்டத்தட்ட எல்லாரையுமே பகடைக்காயாக உபயோகித்தான். அபிமன்யு இறந்தபோதும் கூட தான் பெரிதும் கலங்காமல், அடுத்த வேலைகளைக் கவனிப்போம் என்று சொல்ல, அர்ஜுனன் வெகுண்டெழுந்து தன் அண்ணனையே வெட்டப் போன சம்பவமும் நடந்தது.

ஆனால், அவன் என்னவோ தர்மத்துக்கே தலைவன் என்பது போலவும் உத்தமபுத்திரன் என்பது போலவும் பின்னால் வந்த வரலாற்று ஆசிரியர்கள் திரித்து விட்டார்கள். அதுவும் மிகப் பெரிய வரலாற்றுப் பிழை. அவன் தர்மத்திற்கு மாறாக தடம் புரண்ட கதைகள் நிறையவே உண்டு மகாபாரதத்தில்.

சரி... திரௌபதி விஷயத்திற்கு வருவோம்.

மாளிகை பளபளவென்று இருந்ததால் படிக்கும், சம தளத்திற்கும் வித்தியாசம் தெரியாமல் ஒருவன் தடுமாறி விழுந்து விட்டான். இது ஒண்ணும்

பெரிய கேலிக்கூத்தான விஷயமன்று. ஓடிப் போய் கை கொடுத்து உதவியிருக்கலாம். இல்லையா, கண்டும் காணாமலும் போயிருக்கலாம். அதனை விடுத்து, அவனைப் பார்த்து கெக்கலி போட்டு சிரித்தது தவறு. அதை விட மாபெரும் தவறு, அவனைப் பார்த்து " அப்பனைப் போலவே இவனுக்கும் கண்ணு தெரியவில்லை போலிருக்கு " என்று குத்தலாகவும் நக்கலாகவும் வார்த்தையை விட்டது.

அடுத்து மன்னனாக முடி சூட்டிக் கொள்ளப் போகும் யாருக்குமே சுள்ளென்று ஏறும். அவனுக்கும் ஏறியது. விளைவு ...எத்தனை எத்தனை உயிர்கள்....

தன் கணவன் சூதாடுகிறான் என்பது தெரிந்தும் கண்டு கொள்ளாமல் விட்டது தவறு. அதிலும், அவன் தன்னையே பலிகடாவாக்கி விளையாடுகிறான் என்பதை அறிந்த பின்னரும், ரிசல்ட்டுக்காக காத்திருந்தது இமாலயத் தவறு. அப்படிப் பட்ட கணவனை ஒன்றும் செய்யாமல், பந்தயத்தில் வென்றவனுக்கு உடைமையாகி விட்ட அவள், துரியோதனனைப் பார்த்து தொடை பிளந்து ரத்தம் குடிப்பேன் என்று சூளுரைத்தது சரியா என்று தெரியவில்லை.

அதற்காக துரியோதனனும், துச்சாதனனும் செய்தது சரி என்று சொல்லவில்லை. அவர்கள் செய்தது ஈனச் செயல். அதிலும், மாத விடாய் கொண்ட ஒரு பெண்ணை சபை நடுவில் வைத்து அப்படிச் செய்தது கேவலமான செயல்தான். அதை, அவன் அந்த அளவிற்குக் காயப் பட்டிருக்கிறான் என்றும்கூட எடுத்துக் கொள்ளலாம் ( ஆனால், அது நியாயப் படுத்த முடியாத குற்றம்).

அதற்காக நான் துரியோதனனை ஹீரோவாக ஆக்கவில்லை. ஆனால், தர்மன்தான் நிஜ வில்லன் என்பது என் கருத்து.

பீஷ்மர், விதுரன் போன்ற நிறைய நியாயவான்கள் இருந்த சபை நிறைய நேரங்களில் மௌனம் சாதித்தது ஏன் என்பது புரியாத புதிர்.

தர்மனும், கிருஷ்ணனும் நினைத்திருந்தால் பாரதப் போரைத் தவிர்த்திருந்திருக்கலாம்.

அதெல்லாம் சரி.. மகாபாரதம் நிஜமாகவே நடந்ததா இல்லை அது, மிகப் பிரமாண்டமான அளவில் மிகைப் படுத்தப்பட்ட ஒரு இதிகாசம் மட்டுமேயா ?

நான் அதையும் தேடி ஒரு முறை கன்னா பின்னாவென்று அலைந்தேன் – ஒரு மிகப் பெரிய இனக் கலவரத்துக்கிடையில்.

அது அடுத்த பாகத்தில்...

**வெ.பாலமுரளி**

**கருத்து உதவி :** எஸ் ராவின் உப பாண்டவம். நன்றிகள்.

# சங்க இலக்கியங்களில்



# பறை

தொல் தமிழரின் முழவுக்கருவிகளில் ஒன்றான **பறை** சிறப்பிடம் பெறுகிறது. தொல்காப்பியத்தில் ஒவ்வொரு நிலத்திற்குரிய இசைக்கருவிளை குறிப்பிடத்தக்கது யாழ், பறை ஆகிய கருவிகளின் வகைகள் குறிப்பிடப்பட்டுகின்றன,

**"தெய்வ முணாவே மாமரம் புட்பறை**
செய்தி யாழின் **பகுதியோடு தொகைஇ**
**இவ்வகை பிறவும் கருவென மொழப"**

*(அகத் - 18)*

**குறிஞ்சி நிலத்திற்கு** - தொண்டி பறையும்

**பாலை நிலத்திற்கு** - துடி

**முல்லை நிலத்திற்கு** - ஏறுகோட் பறையும்

**மருத நிலத்திற்கு** - நெல்லரிகிணையும், மணமுழவும்

**நெய்தல் நிலத்திற்கு** - மீன்கோட்பறையும், நாவாய் பம்பையும்

**தாள இசைக்கருவிகளாக** குறிப்பிடப்படடுகிறது.



**முனைவர். சிவகௌரி கீரிஷ்குமார்**
*இசை ஆராய்ச்சியாளர்*

சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களில் பறை பற்றி மிகுந்து காணப்படுகிறது. தோற்கருவிகளின் பொது பெயராக பறை என்கிற பெயரும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. மக்களுக்கு செய்திகளை அறிவிப்பதற்காக மன்னர்களால் இக்கருவி பயன்படுத்தப்பட்டுள்ளது. இன்றும் ஒரு செய்தியை சொல்லிதிரிபவரை **'பறையடித்தல்'** என்று சொல்லும் வழக்கத்தை காணலாம்.

பல்வேறு வகையான பறைகள் வழக்கில் இருந்துள்ளன. கிடைப்பதை, **தடாரிப்பறை, தொண்டகப்பறை, அரிப்பறை, மென்மை, தட்டைப்பறை, மன்றோல்சிறுபறை, இன்னிசைப்பறை, பொருநர்பறை, அடுகளப்பறை** போன்றவையாகும்.

குரவையாடும் போது தொண்டகச்சிறுபறை முழங்கப்படும் செய்தியை திருமுருகாற்றுப்படை சிறப்பாகத் தருகிறது.

**"குன்றகச் சிறுகுடி கிளையுடன் மகிழ்ந்து**

**தொண்டகச் சிறுபறைக் குரவை யயர"**

பறவைகளை விரட்டும் பணியில் பறை பயன்பட்டுள்ளதை புறநானூற்று பாடலில் அறியமுடிகிறது.

**"அரிப்பறையாற் புள்ளோப் புந்து**

**மென்பறையாற் புள்ளரியுந்து"**

அகநானூற்றுப் பாடலில் குறிஞ்சி நில பெண்கள் பறையொலிக்குத் தக்கவாறு ஆடிக்களிக்கின்றனர்.

**"தொண்டகப் பறைச்சீர் பெண்டிரோடு விரைஇ"**

குறுந்தொகைப் பாடலொன்றில் விளைந்தது முற்றியுள்ள தினைப்புனத்தை விலங்குகள் உண்டு அழிப்பதைத் தடுக்க சிறு பறை அடிக்கின்றனர். அந்த ஒலி காவலரை தூணில் கொள்ளாது காவல் கொள்ள செய்கிறது.

**"இரவரி வாரின் தொண்டச் சிறுபறை**

**நான்காம் யாமத்தும் கறங்கும்**

**யாமங்காவலர் ஆவியா மாறே"**.

பறை கடுமையான ஒலியையும் எழுப்பும் தன்மை உடையது. கோடியாய் பறையை இசைப்பர் அவர்களை குறிப்பிடும் தரமாக கடும்பாறைக் கோடியர் என்று மலைபடுகடாம் கூறுகிறது. மேலும் மலையில் வாழும் குறவர் குரவையாடும் போது பறையொலி எழுப்பி மகிழ்வதை மற்றொரு பாடலகல் மலைபடுகடாம் கூறுகிறது. நறவைக் குடித்து மகிழும் குன்றக் குறவர் தங்கள் பெண்களுடன் மலைமீது குரவையாடிக் கழிக்கின்றனர் அப்போது **சிறுபறை** முழங்கப்படுகிறன்றது. அது மான் தோலால் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு பல்வேறு வகையான பறைகள் பல்வேறுபட்ட மக்களின் வாழ்வியலில் இன்றியமையாது விளங்கியுள்ளமையை சங்க பாடல்கள் மூலம் அறியமுடிகிறது.

# வளரியும் வல்லயமும்






**விஜய் பாண்டியன்**
வழக்கறிஞர்,
வரலாற்று ஆய்வாளர்.

இவ்வுலகில் போர்த் தொழில் செய்த குடிகளுக்கெல்லாம் தனித்துவம் வாய்ந்ததொரு ஆயுதம் இருந்திருக்கிறது. அந்த வகையில், **வளரியும் வல்லயமும்** தமிழர்களின் தனித்துவம் வாய்ந்த மிக தொன்மையான ஆயுதமாகும்.

இம்மண்ணையும் மக்களையும் காக்க தமிழர்களில் காவல் போர் தொழில்களை செய்த சமூகத்தினர் பயன்படுத்திய வளரி எனும் ஆயுதம் குறித்து இந்த பதிவில் காண்போம். தமிழர்கள் வளரியை வேட்டைக்கும் போருக்கும் பயன்படுத்தி

வந்தனர். குறிப்பாக, இதன் பயன்பாடு தென்பாண்டி நாட்டில் மிக அதிகமாக இருந்தது. மேலும், இந்த வளரி ஒரு **பிறை நிலவை** போல வளைந்த வடிவிலான ஆயுதமாகும்.

இது தமிழர்களின் தொன்மையான அறிவியலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இது ஆதியில் பறவை, முயல், பன்றி, மான் போன்ற சிறிய விலங்குகளை வேட்டையாடுவதற்காகவும்,



இது *Aerodynamics* எனப்படும் காற்றியக்கவியல் தொழிநுட்பம் கொண்டு இயங்குகிறது.

பிற்காலத்தில் சில மாற்றங்கள் செய்து போரில் எதிரிகளை வீழ்த்துவதற்காகவும் பயன்படுத்தப்பட்டது.



வீரர்கள் இதை மிக நேர்த்தியாக கையாள வேண்டும். இதை வீசியதும், காற்றின் விசையோடு சேர்ந்தே பறந்து சென்று இலக்கைத் தாக்குவதால்,

வளரியைப் பயன்படுத்திய தமிழக போர்குடிகள், இவ்வாயுதத்தின் மேல் மிகுந்த திறமை பெற்றிருந்தனர். மரத்தினால் செய்யப்பட்ட



வளரி வேட்டைக்குப் பயன்படுத்தப்பட்டது; இரும்பு வளரிகள் போருக்குப் பயன்படுத்தப்பட்டது. மேலும், மன்னர் குடும்பங்களில் திருமண வைபவங்களில் பரிமாறிக் கொள்வதற்காக வெள்ளி, யானைத்தந்தம் போன்ற பொருட்களாலும் இது செய்யப்பட்டு, வீரத்தின் அடையாளமாக மன்னர்களுக்குள் பரிசுகளாக கொடுக்கப்பட்டு வந்தது.

வீசிய பிறகும் திரும்பி, வீசிய வீரனின் கைகளுக்கே வரும் வளரி வேட்டையில் அதிகம் பயன்படுத்தப்பட்டது. குறுகிய தூரத்தில் உள்ள இலக்கை வீழ்த்துவதற்கு இது வசதியாக இருந்தது. அதே சமயம், போரில் பயன்படுத்தப்பட்ட இரும்பு வளரிகள் எடை அதிகம் என்பதால், நேரடியாக இலக்கை மட்டும் தாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டன.

தமிழர்களின் வளரி ஆஸ்திரேலிய பழங்குடிகளின் *Boomerang* உடன் ஒப்பிடப்பட்டது. எனினும், தமிழர் வளரிகள் அதன் வடிவத்தில் தனித்துவம் வாய்ந்ததாக விளங்கியது. வீரர்கள் இந்த வளரியை கையாள்வது எளிதானது அல்ல. குதிரையில் செல்லும் போதும், வேகமாக ஓடும் போதும், இலக்கை நோக்கி துல்லியமாக வீச, அதுவே திரும்பும்போது, நுட்பமாக கைகளை காயப்படுத்தாமல் பிடிப்பதற்கு தீவிரப் பயிற்சி மிக அவசியமாக இருந்தது. வளரியின் உபயோகத்தால் கைகளில் காயங்கள் ஏற்படும் அபாயம் அதிகம். இதற்குப் பயிற்சி பெறுவதற்காக பல தலைமுறையினர் கூட இதனை கற்று வந்தனர்.

இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை மன்னர்கள் வளரி படை வைத்திருந்ததாகவும், அவர்களின் படையினர் இந்த வளரியை ஆற்றலுடன் பயன்படுத்தியதாக வரலாற்று குறிப்புகள் தெரிவிக்கின்றன மேலும் திருநெல்வேலி பகுதியின் பிரதான ஆயுதமாக வல்லயம் இருந்த போதிலும் அங்கும் வளரியின் பயன்பாடு இருந்தது இதற்கு சான்றாக சில வளரிகள் அந்தந்த மாவட்ட அருங்காட்சியகத்தில் மக்கள் பார்வைக்க வைக்கப்பட்டுள்ளன . வளரியின் துல்லியமான, எதிர்பாராத தாக்குதல்கள் ஆங்கிலேயர்களை வியப்படைய செய்தது. வளரியை பயன்படுத்தும் போர்குடிகளின் எதிர்ப்பை சமாளிக்க முடியாத ஆங்கிலேயர்கள், வளரியின் பயனையும் அதன் ஆபத்தையும் தாமதமாகவே உணர்ந்தனர். நவீன ஆயுதங்கள் இருந்த போதிலும் இதன் பயன்பாட்டைத் தடை செய்வதாக அறிவித்தனர். பல்வேறு சூழ்ச்சிகளைச் செய்து, கிட்டத்தட்ட பதினைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட வளரிகளை



பலரிடமிருந்தும் பறிமுதல் செய்து தீயிட்டு அழித்தனர். அதே சமயம், கைப்பற்றப்பட்ட சில வளரிகள் இன்றும் அருங்காட்சியகங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

திருமணங்களில் வளரி மாற்றிக் கொள்ளும் பழக்கம் பாண்டிய நாட்டில் உண்டு. மணமகனுக்கு பதில் அவ்வீரனின் வளரியை அளித்து மணமகளை அழைத்து வரும் வழக்கம் அப்போது இருந்தது. இன்று, இந்த பாரம்பரியத்தை மீட்டுத் திருமணங்களில் வளரியை பரிசாகக் கொடுக்கும் வழக்கம் இருக்கிறது. இவ்வளரிகள், அதை வீசும் கலை முற்றிலும் அழிந்து விடவில்லை. இன்றும் சிலர் இந்தப் பழமையான போர் கலைகளைத் தொடர்ந்து கற்றுத் தருகிறார்கள். பல கோயில்களில் காவல் தெய்வங்கள், குல தெய்வங்கள் கைகளில் இன்றும் வளரிகளைப் பார்க்க முடிகிறது. இது தென்பாண்டி நாட்டின் போர்குடி சமூக வரலாற்று பாரம்பரியத்தை, வீரத்தையும், தமிழர் அறிவியல் திறனையும் வெளிப்படுத்துகிறது.

வளரி, நம் வீரத்தை பிரதிபலிக்கும் தனித்துவம் வாய்ந்த ஆயுதமாக விளங்கியது. போரும் வேட்டையும் ஒருசேர தமிழரின் வாழ்வியலின் முக்கிய கூறாக இருந்த வளரி, உலகின் மிகத் தொன்மையான ஆயுதங்களில் ஒன்றாக விளங்குகிறது. இதன் வரலாற்றுப் பின்னணி, இரத்த சரித்திரமாக போர்குடிகளின் வீரத்தை பிரதிபலிக்கும் சின்னமாக இன்று இருக்கிறது. இன்றைய தலைமுறையினர், வளரியின் பெருமையை உணர்ந்து அதன் பாரம்பரியத்தை கற்க அதிக ஆர்வம் காட்ட வேண்டும் என்பது காலத்தின் அவசியமாகும்.



# மறைந்து வரும் வைக்கோல் போர் தலை கூட்டும் பழந்தமிழர் தொழில்நுட்பம்




இராமமூர்த்தி நாகராஜன்
வீரமரசன் பேட்டை
தஞ்சாவூர் மாவட்டம்.























நெல் அதிகம் விளையும் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் ஒருவரின் வைக்கோல் போரின் அளவைப் பொறுத்து அவரின் செல்வச் செழிப்பு அறியப்பட்ட காலம் இருந்தது.

வீடுதோறும் மாடுகள் இருந்தவரை வைக்கோல் மிகவும் பாதுகாக்கப்பட வேண்டிய பொருளாக இருந்தது.

இப்போது போல் அறுவடை இயந்திரம் அறுத்த வைக்கோலை வயலிலேயே எரிப்பதோ அல்லது வைக்கோல் கட்டும் எந்திரம் மூலம் கட்டுக்களாகக் கட்டி அப்படியே அடுக்கி வைத்து மேலே தார்ப்பாய் போடும் பழக்கமோ இருந்ததில்லை.

கையாலோ அல்லது கதிர் அடிக்கும் எந்திரத்தாலோ நெல் நீக்கப்பட்ட வைக்கோல்கள், தற்காலிகமாக போராக குவித்து வைக்கப்படும்.



பின் சில நாட்கள் கழித்து வைக்கோல் போரைச் சுற்றி உள்ள வைக்கோல்கள் அருவப்பட்டு (பிடுங்கப்பட்டு) சிறுசிறு கட்டுக்களாக கட்டப்பட்டு மேலே ஏற்றப்படும். பின் அது கொஞ்சம் கொஞ்சமாக உதறப்படும்.

பிறகு நீண்ட கோலால் தட்டிவிடப்படும். அதன்மீது வைக்கோல் பறக்காமல் இருக்க வைக்கோல் பிரிகள் வரிசையாக போடப்படம்.

இறுதியாக நான்கு மூலைகளிலும் வேப்பிலை செருகப்படும். இதை செய்வதற்கென்றே தனியாக திறன் பெற்ற நபர்கள் இருப்பார்கள்.

இதே தொழில்நுட்பத்தில்தான் வைக்கோலால் கூரை வேய்தலும் செய்வார்கள்.

கால ஓட்டத்தில் இந்த வைக்கோல் போர் தலைகூட்டும் பழந்தமிழர் தொழில்நுட்பம் மறைந்தே போய் ஆங்காங்கே சில இடங்களில் மட்டுமே செய்யப்படுகிறது.

சமீபத்தில் எங்கள் வீட்டில் வைக்கோல் போர் தலை கூட்டப்பட்டது.

*நன்றி!*

***புகைப்படங்கள்..***

***இராமமூர்த்தி நாகராஜன்.***


# தொல்லியல் செய்திகள்

## கடையம் அருகே கல்திட்டை கண்டுபிடிப்பு

கடையம், செப். 12–

கடையத்திற்கு அருகே உள்ள கோதண்டராமபுரத்தில் பெருங்கற் கால கல் திட்டைக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

தென்காசி மாவட்டம், கடையம் அருகேயுள்ளது கோதண்டராமபுரம். நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை.,யில் படிக்கும் மாணவர் பாலசண்முகசுந்தரம், இந்த பகுதியை தன் தொல்லியல் முதுகலை பட்ட படிப்புக்காக கள ஆய்வு செய்து வருகிறார்.



■ கடையம் அருகேயுள்ள கோதண்டராமபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்திட்டை.

கடையத்திற்கு வடகிழக்கே 3 கி.மீ., தொலைவில் கோதண்டராமபுரம் என்ற சிற்றூர் உள்ளது. இங்கு தெற்கு மடத்தூருக்கு செல்லும் வழியில் வயல் வெளிகள் உள்ளன. இந்ச் சாலையின் இடது ஓரத்தில் உள்ள வயல்வெளி கரையில் ஒரு கல் திட்டையை, மாணவர் பாலசண்முகசுந்தரம் கண்டுபிடித்துள்ளார்.

திசைக்கு ஒன்று என மொத்தம் நான்கு ஐந்தடி உயர கருங்கற்கள் நடப்பட்டு இந்தக் கல்திட்டையை வடிவமைத்துள்ளனர்.

இந்த நான்கு கற்துாண்கள் மேல் தட்டையான ஒரு பெரிய கல்லை கூரை போல் படுக்க வைக்கப் பட்டுள்ளது. இந்த கட்திட்டை 6 அடி நீளமும் 5 அடி அகலமும் கொண்டது. இந்த கூரைக்கு கீழே தரையில் ஐந்து சிறு கற்கள் நடப்பட்டுள்ளன.

இவற்றை பல்கலை., உதவி பேராசிரியர் முருகன் மற்றும் மதிவாணன் ஆய்வு செய்தனர்.

இந்தக் கல் திட்டை பெருங்கற் காலத்தை சேர்ந்தது. சுமார் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது எனவும், பண்டைய தமிழர்கள் இறந்தவர்களை புதைத்த இடங்களை நினைவில் கொள்ள இப்படி கல் திட்டைகளை அமைப்பது வழக்கம் என தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் கருப்பு மற்றும் சிவப்பு வண்ண பானை ஓடுகள் காணப்படுகின்றன. மேலும் ஒரே ஓட்டில் கருப்பு, சிவப்பு ஆகிய இரு நிறங்களுள்ள பானை ஓடுகளும் இங்கே கிடைக்கின்றன. இவற்றின் காலம் சுமார் 2200 ஆண்டுகள் முற்பட்டது எனவும் பேராசிரியர்கள் தெரிவித்தனர்.

இந்த ஆய்வில் ஈடுபட்ட மாணவனையும், பேராசிரியர்களையும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக தொல்லியல் துறை தலைவர் (பொ) சுதாகர் அனைத்து பேராசிரியர்கள் மற்றும் துணைவேந்தர் சந்திரசேகர் ஆகியோர் பாராட்டினர்.

---

8



கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே அவியனூர் என்ற கிராமத்தில் முதலாம் குலோத்துங்கச் சோழன் காலத்து கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## பண்ருட்டி அருகே முதலாம் குலோத்துங்கச் சோழனின் கல்வெட்டு கண்டுபிடிப்பு!

பண்ருட்டி, செப். 12

கடலூர்மாவட்டம், பண்ருட்டிவட்டம் அவியனூரில் உள்ள ஸ்ரீ அர்த்த மூர்த்திஸ்வரசுவாமி சிவன் கோயிலில்சுற்றுமதில்எழுப்புவதற்காக கோயில்வளாகத்தில் ஜே.சி.பி. இயந்திரம் மூலம் பள்ளம்எடுத்தபோது சுமார் மூன்றரை அடி ஆழத்தில் ஒரு பலகை கல் கிடைத்தது. கல்வெட்டு கிடைத்த தகவலை ஊர்பொதுமக்கள் விழுப்புரம்அறிஞர்அண்ணா அரசுகலைக்கல்லூரியின்வரலாற்றுத்துறை பேராசிரியர் கன்ரமேஷ், ரங்கநாதன் மற்றும் ஆய்வாளர் இம்மானுவேல் ஆகியோருக்குதகவல்தெரிவித்தனர், கல்வெட்டை ஆய்வுசெய்த அவர்கள் இங்கே கண்டறியப்பட்ட கல்வெட்டு முதலாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டு என தெரிவித்தனர்.

இதைக்குறித்து அவர்கள் கூறியதாவது:–

அவியனூரில் கண்டெடுத்த பலகை கல் 124 செ.மீ நீளமும், 46செ.மீஅகலமும் கொண்டது. இப்பலகை கல்லில் மொத்தம் எட்டு வரிகள் [illegible] ப 12, 2024, 19:19 [illegible] றது.

கல்வெட்டு" ஸ்வஸ்தஸ்ரீ திருமன்னி விளங்குமிருகுவடனையதன்தோளும்வாளுந் துணையெனக் கேளலர் " என்ற மெய்கீர்த்தியுடன் தொடங்குகிறது. இராசேந்திரசோழன் என்ற இயற்பெயர் உடைய முதலாம் குலோத்துங்கசோழனின்கல்வெட்டு காணப்படுகிறது, கல்வெட்டுபாதிஉடைந்தபகுதி மட்டுமேஇங்கேகாணப்படுவதால் இக்கோயிலின் சாமி பெயர் ஈஸ்வரமுடைய மகாதேவர் என்று பாதி மட்டுமே தெரிகிறது அதுமட்டும் அல்லாமல் இவனுடைய ஆட்சியாண்டை கண்டறியமுடியவில்லை.

இவ்வூரை சேர்ந்த பிராமணனின்மனைவி "பிராமணி பொன்னங்கைச் சானி " என்பவர்இக்கோயிலில்விளக்கு எரிக்க ஒன்பது காசுகள் கொடுத்துள்ளதாக கல்வெட்டு கூறுகிறது.

முதலாம்குலோத்துங்கன் 1070முதல்1120வரைஆட்சி புரிந்தார், அவியனூரில்கண்டெடுத்த கல்வெட்டில் காணப்படுகிற திருமன்னி விளங்கு என்ற மெய்கீர்த்தி முதலாம் குலோத்துங்க சோழனின் நான்காவது ஆட்சி ஆண்டு வரை உள்ளது. அதன் பிறகு ஆட்சி ஆண்டில்இருந்துபுகழ்மாது விளங்க செயமாது விரும்ப என்று காணப்படும்.

அவியனூரில் கண்டெடுத்தமுதலாம்குலோத்துங்க சோழனின் கல்வெட்டில் மெய்கீர்த்தி, சாமிபெயர்மற்றும் தானம் குறித்தான செய்திகள் காணப்படுகிறது.

பல்லவர் காலத்திலேயே பழமையானது என்று திருவதிகையில் உள்ள இரண்டாம் பரமேஸ்வரனின் கல்வெட்டில்இவ்வூரில்அகத்தீஸ்வரர் கோயில்இருந்துள்ளதுஎன்று குறிப்பிடுகிறது, இதன் மூலம் பல்லவர் காலத்தில் இருந்தேஅவியனூர்பழமையானவரலாற்றைகொண்டது என தெரியவருகிறது.

தற்போது அவியனூரில் கண்டறியப்பட்ட முதலாம் குலோத்துங்கசோழனின்கல்வெட்டுமூலம்சோழர்காலத்திலும் அவியனூரின் பழமையை தெரிந்துக்கொள்ள புதியஆதாரமாகஉள்ளதுஎன ஆய்வாளர்கள் கூறினார்கள்

---

## புது ஆறு நிகழ்த்திய புரட்சி!

[illegible]


-வி.என். ராகவன்











THE TIMES OF INDIA
04.09.2024 Chennai

# Hey, teacher, look what we found: A megalithic burial site



**ARCHAEOLOGY 101:** The students who discovered the burial sites along with their teacher Jeyalakshmi; (below) the slab is estimated to be 3,000 years old

Yazhiniyan@timesofindia.com

M Arun and S Chandru, both SSLC students at a govt high school at Kamanthotti in Krishnagiri district, may not consider themselves archaeological enthusiasts. However, the basic understanding of archaeology they gained through their school's heritage club helped them identify two ancient megalithic dolmenoid cists — prehistoric burial sites — in their native villages of Dinnur and Gopasandiram.



"We pass these stones every day. People in our village worship it as 'Gangamma' (a local deity). But it was only after our teacher Jeyalakshmi taught us about megalithic burial structures that we were able to identify them. When we told her about it, she immediately visited the spot and confirmed that these sites date back 3,000 years," says Arun.

The megalithic era in TN extended between 2,200BC and 600BC. It also coincided with the Iron Age in India.

The dolmenoid cists (box-shaped burial chambers) found in Krishnagiri have a menhir beneath a capstone with petroglyph (a type of rock art) on the side. "The dolmenoid cist is covered with slabs on all four sides and is two feet tall and four-and-a-half feet long. Two of the stones are leaning. In the middle of it is a two-foot-high menhir. There is a one-foot-tall capstone near it," says Jeyalakshmi, who has a degree in archaeology.

She adds that the capstone is significant. "We don't usually find capstones at megalithic burial sites. It is placed only for the leader of a clan. Since there is one here, this must be the burial site of a leader," says Jeyalakshmi, who heads the heritage club in the school.

Archaeologists say megalithic burials are widespread in Krishnagiri and Dharmapuri, and connect these findings to Mayiladumparai, an archaeological site in Krishnagiri where the Tamil Nadu archaeological department is conducting an excavation. "We have several megalithic burial structures in Mayiladumparai," says V Rajaguru, president of Ramanathapuram Archaeological Research Foundation. "Palaeolithic and neolithic artefacts were also found at the sites."

**Email your feedback with name and address to southpole.toi@timesofindia.com**

# 'பழையாறை பகுதிகளில் புத்தர் சிலைகள் அதிகம்'



தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் துணைவேந்தர் வி. திருவள்ளுவன் முன்னிலையில் நூலை வெளியிட்ட பௌத்த ஆய்வாளருமான பா. ஜம்புலிங்கம் (இடமிருந்து 4 ஆவது).

தஞ்சாவூர், செப். 12: கும்பகோணம் அருகேயுள்ள பழையாறை பகுதிகளில் புத்தர் சிலைகள் அதிகளவில் காணப்படுகின்றன என்றார் வரலாற்று அறிஞரும், பௌத்த ஆய்வாளருமான பா. ஜம்புலிங்கம்.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித் துறை சார்பில் வியாழக்கிழமை நடைபெற்ற வியாழ வட்ட ஆய்வரங்க கட்டுரைத் தொகுப்பான வாவி என்ற நூல் வெளியீட்டு விழாவில் அவர் பேசியது:

சோழ நாட்டில் பௌத்தம் பல்வேறு கால கட்டங்களில் பரவியிருந்ததை கள ஆய்வின் மூலம் காண முடிந்தது. ஒருங்கிணைந்த தஞ்சாவூர், திருச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய சோழ நாட்டில் நூற்றுக்கணக்கான ஊர்களுக்குச் சென்றபோது பல இடங்களில் புத்தர் சிலைகள் இருந்தன.

குறிப்பாக கும்பகோணம் அருகேயுள்ள பழையாறை மற்றும் சுற்றியுள்ள முழையூர், சோழன் மாளிகை, திருவலஞ்சுழி, பட்டீஸ்வரம் உள்ளிட்ட பகுதிகளில் புத்தர் சிலைகள் அதிகளவில் காணப்பட்டன. சில இடங்களில் விகாரையின் எச்சங்களும், இன்னும் சில இடங்களில் புத்தர் கோயில்களும் இருந்தன. இவை அனைத்தும் பௌத்தம் நல்ல நிலையில் இருந்ததை எடுத்துரைக்கும் சான்றுகளாகும். இதுவரை ஏறத்தாழ 80 புத்தர் சிலைகளைப் பார்த்துள்ளேன். சில சிலைகளில் தலை மட்டும்; சில தலையில்லாமலும் இருந்தன. வேறு இடங்களில் உடல் பாகங்கள் சேதப்படுத்தப்பட்ட நிலையில் கிடந்தன. ஒரு சில சிலைகள் அருங்காட்சியகங்களில் உள்ளன. இவற்றில் பெரும்பாலான சிலைகள் "தியானம்" செய்வது போன்றும், நின்ற கோலத்திலும் உள்ளன.

தஞ்சாவூரில்தான் 4 அருங்காட்சியகங்களில் 6 புத்தர் சிலைகள் உள்ளன. ஒரேயொரு செப்புத்திருமேனி மட்டும் அய்யம்பேட்டையில் கிடைத்தது. இதை முனீஸ்வரனாக அப்பகுதி மக்கள் வழிபடுகின்றனர். இச்சிலைகளை ஒரு காலகட்டத்தில் இங்கிருந்த புத்தர் விகாரைகளிலோ, புத்தர் கோயில்களிலோ வைத்து வழிபட்டிருக்க அதிக வாய்ப்புகள் உள்ளன என்றார் ஜம்புலிங்கம்.

விழாவுக்கு பல்கலைக்கழகத் துணைவேந்தர் வி. திருவள்ளுவன் தலைமை வகித்தார். அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித் துறைத் தலைவர் இரா. குறிஞ்சிவேந்தன் நோக்கவுரையாற்றினார். இலக்கியத் துறைத் தலைவர் ஜெ. தேவி, கலைப் புலத் தலைவர் பெ. இளையாப்பிள்ளை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இணைப் பேராசிரியர் ஞா. பழனிவேலு வரவேற்றார். இணைப் பேராசிரியர் தெ. வெற்றிச்செல்வன் நன்றி கூறினார்.

தினகரன்

கலசபாக்கம் அருகே தென்மாதிமங்கலம் கிராமத்தில்

# விஜயநகர பேரரசு காலத்து கல்வெட்டு, நடுகல் கண்டெடுப்பு

## திருவண்ணாமலை மலை படம் பொறித்த காட்சிகளால் வியப்பு





கலசபாக்கம் பகுதியில் கண்டறியப்பட்டுள்ள விஜயநகர பேரரசு காலத்து கல்வெட்டு மற்றும் நடுகல்.

திருவண்ணாமலை, செப்.26: கலசபாக்கம் அடுத்த தென்மாதிமங்கலம், தேவராயன்பாளையம், சீனந்தல் ஆகிய கிராமங்களில் விஜயநகர பேரரசு காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் மற்றும் நடுகற்கள் கண்டறிப்பட்டன.

திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் பகுதியில் பழமை வாய்ந்த நடுகற்கள் இருப்பதாக கேட்டவரம்பாளையம் கிராமத்தை சேர்ந்து தொல்லியல் ஆர்வலர் ஜெ.சிவா அளித்த தகவலின் அடிப்படையில், திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவத்தின் செயலாளர் ச.பாலமுருகன் மற்றும் சி.பழனிசாமி, விநாயகம், மு.ராஜா ஆகியோர் நேரடி ஆய்வு செய்தனர். அதன்படி, தென்மாதிமங்கலம் கிராமத்தில் பர்வதமலை கிரிவலப்பாதையில் உள்ள பலகைக்கல்லில் விஜயநகர பேரரசு காலத்தைச் சேர்ந்த கல்வெட்டு கண்டறியப்பட்டது.

இதுகுறித்து, திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவத்தின் செயலாளர் ச.பாலமுருகன் தெரிவித்ததாவது:

தென்மாதிமங்கலம் கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டில் சூரியன், சந்திரன், திருவண்ணாமலை மலையின் படம் ஆகியவை பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் நிலதானம் மற்றும் வரிகள் தொடர்பான தகவல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கார்த்திகை, சித்திரை நவரை காலங்களில் செய்யும் பயிருக்கு ஏற்றவாறு வரி விதிக்கப்பட்டுள்ளது. மேலும், இக்கல்வெட்டில் நல்லெருது, காணிக்கை உள்ளிட்ட பல்வேறு வரி விதித்தது குறித்தும் செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தேவராயன் பாளையம் அருகே உள்ள பெருமாள் பாளையத்தில் உள்ள பலகைக் கல்வெட்டில் கடந்த கி.பி.1,587ம் ஆண்டு தேவராயன் பாளையத்தில் நிலதானம் செய்த தகவல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த கல்வெட்டிலும், திருவண்ணாமலை மலையைக் குறிக்க முக்கோணம் போன்ற குறியீடு வெட்டப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் உள்ள கிராமங்களில் அடுத்தடுத்து, திருவண்ணாமலை மலையைக் குறிக்கும் கல்வெட்டுகள் தொடர்ந்து கிடைத்தபடி இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திருவண்ணாமலை நகரம் வரலாற்றுக் காலத்தில் சக்தி வாய்ந்த மையமாக இருந்ததை இந்த கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன. தேவராயன் பாளையம் அடுத்த பெருமாள் பாளையத்தில், பூமியில் புதையுண்டிருந்த நடுகல்லும், சீனந்தல் மற்றும் வேளாநந்தல் கிராமத்தில் அழிவின் நிலையில் இருந்த நடுகல்லும் உள்ளூர் மக்களின் உதவியுடன் மீட்டு எடுக்கப்பட்டு, அதே இடத்தில் மீண்டும் நிலைநிறுத்தப்பட்டன.

இதுவரை 6 நடுகற்களையும், 2 கல்வெட்டுகளையும் இப்பகுதியில் அழிவின் விளிம்பில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. வரலாற்று ஆய்வு நடுவம் மேற்கொண்ட இப்பணியில், அந்தப் பகுதியைச் சேர்ந்த சத்தியமூர்த்தி, விஜய், ஸ்ரீதர், விவசாயி சுப்ரமணி, சிவகுமார், லெனின், பழனி முருகன், குமரேசன், ராம்குமார், கோபிராஜ் ஆகியோர்களும் ஈடுபட்டனர்.

தொடர்ந்து கலசபாக்கம் பகுதியில் நடுகற்கள், கல்வெட்டுகள், செப்புப்பட்டயங்கள் ஆவணப்படுத்தும் பணி திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கிராமப் பகுதிகளில் உள்ள வரலாற்றுச் சின்னங்களை மீட்டெடுக்கவும் ஆவணப்படுத்தவும் தமிழ்நாடு தொல்லியல் துறை தொடர்ந்து ஈடுபட வேண்டும் என்பது வரலாற்று ஆர்வலர்கள் கோரிக்கையாக உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

16 • Dinakaran • Madurai • 10.9.2024 தினகரன் தணடுக்கல Postal Regn No. TN/ MA 03/2023-20

### இப்ப மட்டுமில்லை...

# ஆயிரம் வருடத்துக்கு முன்பே வணிகத்தில் விருதுநகர் 'டாப்'

ஆயிரத்து 100 ஆண்டுகளுக்கும் முன்பே விருதுநகர் மாவட்டம், வணிகத்தில் சிறந்திருந்ததை இங்கிருக்கும் கல்வெட்டுகள் காட்டுகின்றன. இதுகுறித்து ஆய்வுகள் மேற்கொண்ட புதுக்கோட்டை தொல்லியல் ஆய்வுக் கழக நிறுவனர் மங்கனூர் ஆ.மணிகண்டன் கூறியதாவது:



கிபி 13ம் நூற்றாண்டு துண்டுக் கல்வெட்டுகளில், முடுக்கன்குளம் அம்பலவாணசுவாமி கோயில் சாணாட்டு நாங்கூரில் இருந்த குணபஞ்சப் பெருந்தெருவும், கம்பிக்குடி சிவன் கோயில் கிபி 13ம் நூற்றாண்டு முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் துண்டு கல்வெட்டில், முடிகொண்ட சோழநல்லூரில் இருக்கும் வியாபாரி, பூண்டியுடையான் கொடுத்த நிலதானம் சொல்லப்படுகிறது. கிபி 11ம் நூற்றாண்டு சடையவர்மன் சுந்தரசோழபாண்டியன் காலத்தில், இருஞ்சோனாட்டு கூடற்குடி மகாதேவர் கோயிலுக்கு வானவன்மாதேவிபுரத்து வியாபாரி வெம்பன் பூவன், விளக்கெரிக்க 25 ஆடுகள் தானமளித்ததை குண்டலக்குத்து பாறைக் கல்வெட்டு தெரிவிக்கிறது.

மன்னார் கோட்டையில் கிபி 11ம் நூற்றாண்டில், வணிகர் கலியுகக் கண்டடி தன்மச் செட்டிக்கு வேண்டிக் கொண்டு, சூரங்குடி நாட்டு ஆதனூரான கையம் ஊர்க்கிழவன் தன் தலையை அரிந்து நற்பலி (நவகண்டம்) செய்து கொண்டுள்ளார். கிபி 1240ல் இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில், செங்குன்றாபுரம் திருமேற்கோயில் விக்கிரமபாண்டிய என்பெருமானுக்கு, திருப்படி மாற்றுள்ளிட்டு அமுதுபடி, சாத்துப்படி செலவினங்களுக்காக, இருவேலி நாற்பது மா நிலம் திருவிடையாட்டமாக அபிமானமேருபுரத்து நகரத்தார் அளித்துள்ளனர். கோயில் முன்புள்ள கிபி 13ம் நூற்றாண்டு கல்வெட்டில், செங்குடி நாட்டு அபிமானமேருபுரத்து செங்குடி வணிக நகரமானது, நாயனார் மணி தந்த பெருமான் என்பவரது பாதுகாப்பில் (ஆசிரியம்) இருந்ததாகத் தெரிவிக்கிறது.

வெண்பைக்குடிநாட்டு உத்தன்குடி அறுவை வாணியச்சேரி ஆச்சன், எதிர் கோட்டை சிவனுக்கு திருநந்தாவிளக்கு எரிக்க, 55 ஆடுகளை சோழன் தலை கொண்ட வீரபாண்டியன் காலத்தில் கிபி 965ல் அளித்துள்ளான். முதலாம் ராசராசசோழன் கால கல்வெட்டில், கூத்தங்குடி நகரத்தார் இறையிலியாக நிலம் கொடுத்ததும், சாலியன் கன்றாடைக் காவிதி பெயரும், திசையாயிரத்து என்ற சொல்லும் காணப்படுகிறது. சாலியர் துணி வணிகர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு திசையாயிரத்து ஐந்நூற்றுவர் வணிகக்குழு தங்கி வணிகம் செய்திருப்பதும் அறியப்படுகிறது.

த.மானகச்சேரி கிபி 13ம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில், மல்லிநாட்டு குலசேகரபுரத்து வணிக நகரத்தார் வெண்பு



▶ சோழபுரம் சிவன் கோயில்



▶ எதிர்க்கோட்டை திருமால் கோயில்

நாட்டார் கருநிலக்குடி நாட்டார் முதலான நாட்டார்களுக்கும், பெருமான் ஆட்கொண்டபிள்ளை மலைகாத்த கண்டருக்கும் ஆசிரியம் அளித்ததை தெரிவிக்கின்றன.

சோழபுரம் விக்கிரமபாண்டீச்சுவரமுடையார் கோயில் முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் கல்வெட்டுகளில், ஆண்மர் நாட்டு, முடிவழங்கு பாண்டியநல்லூர் நாற்பத்தெண்ணாயிரவன் பெருந்தெருவிலிருக்கும், தென்னிலங்கை வளஞ்சியரில் சொற்றங் கடந்தான், இக்கோயில் இறைவனுக்கு திருஆடல் திருப்பவனிக்கு வேண்டிய நித்தநிவந்தங்களுக்கு கொடுக்கப்பட்ட தானம் பற்றியும், இக்கோயில் திருப்பணிக்கு சோழபுரம், குன்றத்தூர், இருசொல்லாதான் சேதுராமக் குறிச்சி, சாமந்தகண்டன் வீரசிங்க நல்லூர், போன்ற பல ஊர் ஊராரும் காரணவரும் தாங்கள் விற்கின்ற புடவை ஒன்றுக்கு காணிப்பணம் குடுக்கச் சம்மதித்தது பற்றியும் சொல்லப்பட்டுள்ளது.

மங்கலம் சிவன் கோயில் கிபி 1195 முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் கல்வெட்டில், கலங்காத கண்டப் பெருந்தெருவில் இருக்கும் வியாபாரி மருந்தாருடையான் தேவன் பெயர் குறிப்பிடப்படுகிறது.

அருப்புக்கோட்டை மற்றும் சோழபுரத்தில் தென்னிலங்கை வளஞ்சியர், எதிர்க்கோட்டையில் திசையாயிரத்து ஐந்நூற்றுவர் ஆகிய வணிகக்குழுக்கள் இருந்துள்ளன. வணிகர்கள் தங்கியிருந்த தெரு பெருந்தெரு எனப்படும். அருப்புக்கோட்டையில் சீவல்லவன் பெருந்தெரு, வீரபாண்டியன் பெருந்தெரு, விக்கிரமபாண்டியன் பெருந்தெரு, பழிவிலங்கிப் பெருந்தெரு, முடுக்கன்குளத்தில் குணபஞ்சப்பெருந்தெரு, சோழபுரத்தில் நாற்பத்தெண்ணாயிரவன் பெருந்தெரு, மங்கலத்தில் கலங்காத கண்டப் பெருந்தெரு ஆகியன இருந்துள்ளன. இதில் 3 பெருந்தெருக்கள் பிற்காலப் பாண்டிய மன்னர்கள் பெயரைத் தாங்கியுள்ளன.

வணிகம் சார்ந்ததில் 1100 ஆண்டுகள் பழமையானது எதிர்கோட்டை சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் கல்வெட்டு. முதலாம் ராஜராஜசோழன், சடையவர்மன் சுந்தரசோழபாண்டியன் ஆகிய சோழ மன்னர்களைத் தொடர்ந்து முதலாம் சடையவர்மன் குலசேகரப் பாண்டியன், முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் உள்ளிட்ட பாண்டியர் காலத்திய வணிகர் கல்வெட்டுகள் இதன் தொடர்ச்சியாக வருகின்றன.

புறவியம், ஊராயம் ஆகிய வரிகளை வணிகர்களுக்கு ஊரவையினர் விதித்துள்ளனர். இந்தக் கல்வெட்டுகள் மூலம், ஆயிரத்து 100 வருடங்களுக்கு முன்பே விருதுநகரும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் வணிகத்தில் சிறந்து விளங்கியதை அறியமுடிகிறது.



**பழமை காப்போம்**

## பழமை வணிகர்களை தெரிஞ்சுக்குவோம்...

பலதரப்பட்ட வணிகர்களையும், வெவ்வேறு சொல்லாடல்களில் பழமைக் கல்வெட்டுகள் காட்டி நிற்கின்றன. இதோ வாசிப்பிற்காக...

* தென்னிலங்கை வளஞ்சியர்: வாணிகத்தால் நாட்டின் செல்வ வளத்தினைப் பெருக்கியவர்கள். இவர்கள் நானாதேசி வளஞ்சியர் என்று கூறப்பெறும் வணிகக் குழுவினராவர். சித்திரமேழி பெரியநாட்டார் குழுவிலும், பதினெண்பூமி திசையாயிரத்து ஐந்நூற்றுவர் வணிகக்குழுவிலும் இடம் பெற்றிருந்தனர். இலங்கையை மையமாகக் கொண்டவர்கள் தென்னிலங்கை வளஞ்சியர் எனப்பட்டனர்.

* திசையாயிரத்து ஐந்நூற்றுவர்: கி.பி. 813ம் ஆண்டில் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும், தென்னிந்தியாவிலும், தென்கிழக்காசியாவிலும் வணிகம் மேற்கொண்ட ஒரு வணிகக் குழுவினர் ஆவர். ஐயபொழில்புரத்து பரமேஸ்வரி புத்திரராக தங்களை குறிப்பிடும் இவர்களின் தலைமையிடம் கர்நாடக மாநிலம் ஐஹோளே என்ற ஊரில் இருந்தது.

* ஆசிரியம்: மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் ஊரவர், நாட்டவர், சிற்றரசர், படைப்பிரிவினர் ஆகியோர் அந்தந்தப் பகுதிகளில் படைகளை உருவாக்கி மக்களை பாதுகாத்து வந்துள்ளனர். மதுரையில் கி.பி 13-14ம் நூற்றாண்டுகளில் கிராமங்களில் இருந்த நிலச்சுவான்தாரர்கள் அவ்வூர் ஆட்சியாளர்களாகவும் செயல்பட்டு வந்துள்ளனர். இவர்கள் ஊர் பாதுகாப்புக்கென பாடிகாவல் நியமித்துக்கொள்ளும் வழக்கம் இருந்துள்ளது. பாடிகாவல் செய்வோர் குளம் வெட்டுதல், பாசனத்தை முறைப்படுத்தி வழங்குதல், கோவில் நிர்வாகம், பொது நிகழ்வுகளை முன்னெடுத்தல் ஆகிய உரிமைகளையும் பெற்றிருந்தனர்.

பாதுகாப்புத் தந்து காவல் செய்யும் பாடிகாவல் உரிமை எந்த ஊருக்கு யார் பெற்றுள்ளார்களோ அவர்கள் அதை உறுதிப்படுத்தி அறிவிப்பதை ஆசிரியம் கொடுத்தல் என்கிறார்கள். ஆசிரியம் என்ற சொல்லுக்கு பாதுகாப்பு தருதல், அடைக்கலம் தருதல் என்று பொருள். இச்சொல் ஆசிரயம், ஆச்சரயம், ஆரியம் என மாறுபட்ட உச்சரிப்புகளுடன் கல்வெட்டுகளில் காணப்படுகிறது. இதுவரை தமிழகத்தில் 75-க்கும் மேற்பட்ட ஆசிரியம் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டை மாவட்டத்தில் அதிகம் கிடைக்கும் இவ்வகை கல்வெட்டுகள் சிலவரிகள் கொண்டதாகவும், தனி பலகை கற்களில் பொறிக்கப்பட்டும் காணப்படுகின்றன. பாடிகாவல் முறையில், கிராமத்தை ஒரு குறிப்பிட்ட குழுவினர் காவல் காத்து வருவதை அனைவருக்கும் அறிவிக்கும் வகையில், கல்வெட்டை ஊரின் எல்லையிலோ, மையப்பகுதியிலோ, கோயில்களிலோ, நட்டு வைப்பது வழக்கம்.

**அருமை வாசகர்களே... பழமை ஆர்வலர்களே...**

நம்மூர்களில் காலம் கடந்து நிற்கிற அத்தனையும் அடையாளங்களே. செவ்வாய் தோறும் வெளிவரும் 'பழமை காப்போம்' பகுதிக்கு உங்கள் பகுதியின் தொன்மை அடையாளங்களின் வரலாற்று பெருமைகளை, அவற்றை காக்கும் அவசியத்தை சுருக்கமாக கவையாக உரிய தரமான படங்களுடன் அனுப்பி வையுங்கள்...

முகவரி:

**பழமை காப்போம்!**

தினகரன்,2/2, மேலூர் மெயின்ரோடு, உத்தங்குடி,மதுரை - 625 023

---

### செங்கல்பட்டு அருகே பாலாற்றில்

# கற்கால கைக்கோடரி கண்டெடுத்த அரசு பள்ளி மாணவர்

● செங்கல்பட்டு

காட்டாங் கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட வில்லியம்பாக்கம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 8-ம் வகுப்பு படித்து வரும் வினோத் என்கிற மாணவர் பாலாற்றில் விளையாடச் சென்றபோது கற்கால கைக்கோடரியை கண்டெடுத்துள்ளார்.

இதுகுறித்து மாணவர் வினோத் கூறியதாவது: எங்கள் பள்ளியில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு தமிழர் தொன்மம் வரலாற்று ஆய்வு நடுவத்தை சேர்ந்தவர்கள் தொல்லியல் கண்காட்சியை நடத்தினர். அப்போது இது போன்ற கற்கால கருவிகளைப் பார்த்தேன். மேலும் இது போன்ற கற்காலக் கருவிகள், பழமையான சின்னங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் அவர்கள் விளக்கம் அளித்தார்கள். இந்தக் கல்லும் கண்



↑ கற்கால கைக்கோடரியுடன் மாணவர் வினோத்

காட்சியில் கண்ட கல்லைப்போன்றே இருந்ததால் அதை எடுத்து வந்தேன் எனத் தெரிவித்தார்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் மாணவரும் தொல்லியல் ஆய்வாளருமான வெற்றித்தமிழன் கூறியதாவது: பாலாற்றங்கரை நாகரிகத்தை பறைசாற்றும் பல்வேறு வகையான தொல்லியல் எச்சங்கள் பலவும் இங்கு கிடைத்துள்ளன.மனிதர்கள் தனது நாடோடி வாழ்க்கையிலிருந்து அதன் அடுத்தகட்ட படிநிலையாக குழுமுறை அமைப்பில் விலங்குகள் வேட்டைக்கும் வேளாண்மை சார்ந்த தேவைகளுக்கும் இத்தகைய கருவிகளை உருவாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இந்த கல்லாயுதம் புதிய கற்காலத்தை சார்ந்த கைக்கோடரி. இது 6000 ஆண்டுகள் பழமையானதாக இருக்கலாம்.

இந்தியாவில் முதல்முதலாக தமிழ்நாட்டில்தான் கற்காலக் கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக நமது செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் பகுதியில் இந்திய தொல்லியல் தந்தை என கூறப்படும் ராபர்ட் புரூஸ் ஃபூட் என்ற நிலவியல் அறிஞர் 1863-ல் பல்லாவரம் பகுதியில் கற்கருவியை கண்டெடுத்துள்ளார். பாலாற்றங்கரையில் அமைந்துள்ள பல குன்றுகளிலும் அதை ஒட்டிய காட்டுப் பகுதிகளிலும் இதுபோன்ற பழமையான தொல்லியல் எச்சங்கள் பரவிக் காணப்படுகின்றன. இப்படியான கற்காலக் கருவிகளை பட்டை தீட்டுவதற்கான பாறைகளும் ஆற்றுப் படுகைகளில் காணப்படுவதாலும் பெருமழை வெள்ளம் போன்ற இயற்கை காரணிகளாலும் இப்படியான கற்கருவிகள் ஆற்றில் அடித்து வருவதற்கு வாய்ப்பு உள்ளது.

மேலும், இதுபோன்று தொல்லியல் எச்சங்களைப் பாதுகாப்பதற்காக மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகளை தமிழர் தொன்மம் வரலாற்று ஆய்வு நடுவத்தின் சார்பில் முன்னெடுத்து வருகிறோம் என்றார்.

இந்து தமிழ் திசை 6 சனி, செப்டம்பர் 21, 2024 ஊர்வலம்

**500 ஆண்டுகள் பழமையான**

# மருத்துவ ஓலைச்சுவடிகளை பாதுகாத்துவரும் சித்த மருத்துவர்



சித்த மருத்துவ ஓலைச்சுவடிகள்.

ஆர்.ஆதித்தன்

● கோவை

தமிழ் மொழியின் வேராக, ஊடக சாதனமாக இருந்த ஓலைச்சுவடிகளை கிராமம் தோறும் தேடித் தேடி கண்டுபிடித்து உ.வே.சாமிநாதய்யர், மீனாட்சி சுந்தரம் போன்ற அறிஞர்கள் தமிழ் இலக்கியங்களை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தனர். அந்தவகையில் ஓலைச்சுவடிகளை பொக்கிஷமாக பாதுகாக்க வேண்டியது அவசியமாகிறது. கல்வெட்டுகளை விட ஓலைச்சுவடிகளை பாதுகாப்பது சவாலானது.

ஆனால், கோவை மேற்கு தொடர்ச்சி மலைத் தொடரில் ஆலாந்துறை அருகில் நொய்யல் ஆற்றங்கரையை ஒட்டியுள்ள கள்ளிப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த 72 வயதான ஞானசௌந்திரம் சுமார் 500 ஆண்டுகள் பழமைவாய்ந்த ஓலைச்சுவடிகளை பாதுகாத்து பத்திரமாக சேமித்து வைத்துள்ளார்.

இவர் 7-வது தலைமுறையாக மருத்துவக் குறிப்புகள், மனையடி சாஸ்திரம், சிற்பக்கலை உள்ளிட்ட பல்வேறு குறிப்புகளை ஓலைச்சுவடிகளில் இருந்து படித்து சித்த மருத்துவம் செய்து வருகிறார்.

தமிழக சித்த மருத்துவ கவுன்சிலில் பதிவு பெற்றவரும், இம்காம்ப்ஸ் அமைப்பில் உறுப்பினருமான தி.ஞானசௌந்திரம் கூறியதாவது: எனது தந்தை திருமூர்த்தி சித்தர் ஆவார். அவரை குருவாக ஏற்றுக்கொண்டு ஓலைச்சுவடிகளை படித்து குறிப்பெடுத்தல், மருத்துவம், ஜோதிடம் உள்ளிட்ட பல கலைகளை கற்றுக்கொண்டேன். எனது தந்தையின் மறைவுக்குப் பிறகு முழுமையாக ஓலைச்சுவடிகளை பாதுகாத்தல், ஓலைச்சுவடிகளை படித்து குறிப்பெடுத்தல், கல்லூரிகளுக்கு சென்று ஓலைச்சுவடி எப்படி படிப்பது போன்ற விளக்கங்களை அளித்துள்ளேன்.

எனது தந்தை பாதுகாத்துவந்த 1512-ம் ஆண்டில் எழுதப்பட்ட, அதாவது சுமார் 500 ஆண்டுகள் பழமைவாய்ந்த ஓலைச்சுவடிகளை பாதுகாத்து வருகிறேன். இதில் புலிப்பாணி சித்தர், மச்சமுனி உட்பட பல்வேறு சித்தர்கள் அருளிய ஓலைச்சுவடி மருத்துவக் குறிப்புகள் அடங்கும். எங்கள் வீட்டில் பராமரித்துவந்த ஓலைச்சுவடிகள் குறித்து அறிந்த தொல்லியல் துறையினர் வீட்டுக்கு வந்து ஓலைச்சுவடிகளை மின் உருவாக்கம் செய்து தொகுத்துள்ளனர். மேலும் ஓலைச்சுவடிகள் அழிந்து விடாமல் பாதுகாக்கும் வகையில் புதுப்பித்து கொடுத்து சென்றனர். தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை உதவியுடன் தற்போது 350-க்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகளை பாதுகாத்து வைத்துள்ளேன்.



பாரம்பரிய சித்த மருத்துவர் தி.ஞானசௌந்திரத்தின் ஓலைச்சுவடிகளை ஆய்வு செய்த கோவை அருங்காட்சியகத்தின் காப்பாட்சியர் முருகவேல் உள்ளிட்டோர்.

ஓலைச்சுவடிகளில் உள்ள குறிப்புகள் அனைத்தையும் தமிழ் சமூகத்திற்கு கொண்டு செல்லும் வகையில் எளிய முறையில் குறிப்புகளாக பல ஆயிரம் பக்கங்களில் எழுதி வைத்துள்ளேன். தற்போது நேரம் கிடைக்கும் போது ஓலைச்சுவடிகளுக்கு தமிழ் விளக்க குறிப்புகளை எழுதி வருகிறேன்.

எனது சகோதரி அமராவதிக்கு ஓலைச்சுவடி குறிப்புகள் மனப்பாடமாகத் தெரியும். அவர் உதவியுடன் ஓலைச்சுவடி குறிப்புகளில் இருந்து மருந்துகள் தயாரித்து வருகிறேன். எனது மனைவி கலைச்செல்வி, மகன் சுரேஷ் ஆகியோரும் ஓலைச்சுவடி குறிப்புகளை எடுத்து தந்து உதவி வருகின்றனர்.

ஒருமுறை இலங்கையில் இருந்து ஓலைச்சுவடிகளை கொண்டு வந்து படித்து விளக்க குறிப்பு எழுதி தருமாறு கேட்டனர். அந்தப் பணி மிகவும் சவாலாக இருந்தது. கடினமான தமிழ் சொற்களுக்கு எளிமையாக விளக்கக் குறிப்புகளை எழுதி கொடுத்தேன். இதுபோல தமிழகம் முழுவதும் இருந்து ஓலைச்சுவடிகளுக்கு விளக்க குறிப்புகளை கேட்டு அணுகி வருகின்றனர்.

ஓலைச்சுவடிகளில் பல்வேறு நோய்களுக்கு சித்தர்கள் அருளிய மருத்துவக் குறிப்புகள் மூலம் மருந்து தயாரித்து கொடுத்து குணப்படுத்தி வருகிறேன். ரசவாத கலை, ரச கட்டுகள் போன்ற எண்ணற்ற மருத்துவக் குறிப்புகளும் உள்ளன.

அதேவேளையில், முன்பெல்லாம் வயல் வெளிகள், தோட்டங்களில் சாதாரணமாக கிடைத்துவந்த மூலிகைகள் இப்போது தேடி கண்டுபிடிக்கும் அளவுக்கு அரிதாகிவிட்டது. இதற்கு தோட்டத்தில் தெளிக்கும் களைக்கொல்லி போன்ற ரசாயனங்கள் முக்கியமாகும். களைக்கொல்லி ரசாயனங்களால் மூலிகைகளும் அழிந்து விடுகின்றன. பாரம்பரிய சித்த மருத்துவத்தில் ஈடுபடும் அனைவரும் ஏழ்மை நிலையில் உள்ளனர். இதனால் அவர்கள் பாரம்பரிய சித்த மருந்துகளை செய்ய அதிகம் செலவிடும் நிலை உள்ளது. மேலும் அரியவகை மூலிகைகள் கிடைப்பது இல்லை. எனவே, அரிய வகை மூலிகைகளை வளர்த்து பாரம்பரிய சித்த மருத்துவர்களுக்கு தமிழக அரசு நேரடியாக வழங்க வேண்டும். அப்போதுதான் அரிய வகை மூலிகைகளையும், பாரம்பரிய சித்த மருத்துவத்தையும் காப்பாற்ற முடியும்.

நான் வசிக்கும் அதே கிராமத்தில் தந்தை திருமூர்த்தி ஜீவசமாதியும் உள்ளது. மாமல்லபுரத்தில் இருந்து அவரின் முழு உருவ சிலையை வடித்து எடுத்து வைத்து வழிபட்டு வருகிறோம்.



சித்த மருத்துவ ஓலைச்சுவடிகளில் உள்ள பழமையான தமிழ் எழுத்துகள்.



சித்த மருத்துவ ஓலைச்சுவடிகளுக்கு எழுதப்பட்ட விளக்க குறிப்புகளின் புத்தக தொகுப்பு.

இவ்வாறு அவர் கூறினார்.

இதுகுறித்து, தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையின் தமிழ்நாடு ஓலைச்சுவடி பாதுகாப்பு குழுமத்தின் கோவை மண்டல ஒருங்கிணைப்பாளர் அருண்குமார் கூறும்போது, "தமிழகத்தில் ஆதீனங்கள், தனி நபர்களிடம் உள்ள ஓலைச்சுவடிகளை மின் உருவாக்கம் செய்து வருகிறோம். குறிப்பாக பேரூர் ஆதீனத்தில் உள்ள 80 ஆயிரம் பக்கங்களும், ஆலாந்துறையில் உள்ள பாரம்பரிய சித்த மருத்துவர் தி.ஞானசௌந்திரத்திடம் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்கங்களும் மின் உருவாக்கம் செய்யப்பட்டுள்ளன. ஓலைச்சுவடியின் இரு பக்கங்கள், வரிகள், தலைப்பு, நீளம், அகலம் என அனைத்தும் மின் உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து ஓலைச்சுவடிகளை தேடி சென்று மின் உருவாக்கம் செய்து வருகிறோம். அழியும் நிலையில் உள்ள ஓலைச்சுவடிகளை புதுப்பித்துக் கொடுத்து வருகிறோம்" என்றார்.

# செஞ்சி அருகே 700 ஆண்டு பழமையான கல்வெட்டு கண்டுபிடிப்பு

**செஞ்சி, செப். 9–**

செஞ்சி அருகே 700 ஆண்டு பழமையான கல்வெட்டை ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அடுத்த கருங்குழி கிராமத்தில் திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவத்தின் தலைவர் சுதாகர் தலைமையில், செஞ்சி அரசு கலைக்கல்லூரி தமிழ்துறை மாணவர்கள் கமலேஷ், கார்த்திக் ஆகியோர் கள ஆய்வு மேற்கொண்டனர். அதில் இரண்டு புதிய கல்வெட்டுக்கள் இருப்பதை கண்டு பிடித்துள்ளனர்.

இது குறித்து சுதாகர் கூறியதாவது:

கருங்குழி கிராமத்தில் உள்ள மலை பாறைகளுக்கு இடையே உள்ள குகை ஒன்றில் சம்புவராயர் கால எழுத்தமைதி கொண்ட நான்கு வரி கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டு 700 ஆண்டுகள் பழமையானது.

இந்த கல்வெட்டில், 'திருவாய்ப்பாடியில் இராசநாராயணக் களப்பாளர் விடுதி, இவ்விடுதியில் விடுமவ(ர்)கள் செய்யங்கநல்லூர் கல்லுவெட்டு' என்ற வாசகம் உள்ளது.





■ செஞ்சி அடுத்த கருங்குழி கிராம மலை குகையில் கண்டுபிடிக்கப்பட்ட 700 ஆண்டுகள் பழமையான கல்வெட்டுகள்.

இது இராசநாராயண சம்புவராயர் காலத்தில், இராசநாராயண களப்பாளர் விடுதியில் செய்யங்கநல்லூரைச் சேர்ந்தவர்கள் விடப்பட்டனர் அல்லது தங்க வைக்கப்பட்டனர் என்று பொருள்படும்.

இங்கு குறிப்பிடப்படும் இராசநாராயண களப்பாளர் என்பவர் இராசநாராயண சம்புவராயரின் அதிகாரி ஆவான். இவன் 'களப்பிரர்' அரச வம்சாவழியைச் சேர்ந்தவன் ஆகலாம்.

இதில் குறிப்பிடும் திருவாய்ப்பாடி என்பது திருமால்பாடி என்று தற்போது அழைக்கப்படுகிறது.

தேசூர் அருகே உள்ள இவ்வூரில் பள்ளி கொண்ட பெருமாள் கோவிலும், இராசநாராயண சம்புவராயர் கால கல்வெட்டுகளும் உள்ளன. திருமால்பாடிக்கும் கருங்குழிக்குமான தொடர்பை இந்த கல்வெட்டு குறிக்கிறது. செய்யங்கநல்லூர் என்பது எந்த ஊர் என்று அறிய இயலவில்லை.

எதற்காக விடுதி அமைத்தார்கள் என்ற விபரமும் அறிய முடியவில்லை. இருப்பினும் இக்கல்வெட்டில் இடம் பெறும் 'விடுதி என்பது தங்க இடமும், உணவும் வழங்கும் இடமாகும் என்பதை அறியமுடிகிறது.

இதுவரை கிடைத்த கல்வெட்டுகளில் விடுதியைப் பற்றிய செய்தியைக் கூறும் கல்வெட்டு இதுவரை தமிழ்நாட்டில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதே மலையில் மற்றொரு பகுதியில் உள்ள குகை போன்ற அமைப்பில் ஒரு பலகைக்கல்லில் சக்கரம் பொறிக்கப்பட்ட திருவாழிக்கல்லில் கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. இதன் காலம் 14ம் நூற்றாண்டாக இருக்கலாம்.

இக்கல்வெட்டில் பொன்னூர் பற்றைச் சார்ந்த கருங்குழை என்ற ஊரில் உள்ள பெருமாள் ஸ்ரீரங்கநாதருக்கு திருவிடையாட்டம் ஆக விடப்பட்ட தானம் குறித்து தவகல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருங்குழியில் கிடைத்த கல்வெட்டு இப்பகுதியில் தங்கும் இடம் பற்றிய செய்தியை சொல்லி இருப்பது சிறப்பானதும், அறிய செய்தியாகவும் உள்ளது. இதனை தமிழ்நாட்டு தொல்லியல் துறை ஆவணப்படுத்தி பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு சுதாகர் கூறினார்.

### கீழடி, சிந்துவெளி, துருக்கி குறியீடுகளை போல

# ஆட்டுக்காரன்பட்டியில் பாறை ஓவியக் குறியீடுகள்



▶ திருச்சியிலிருந்து புதுக்கோட்டை செல்லும் வழியில் மாத்தூர் அருகே உள்ள ஆட்டுக்காரன்பட்டியில் பாறையில் தென்படும் ஓவியக் குறியீடுகள்.

**திருச்சி, செப்.24:** கீழடியில் பானை ஓடுகளில் கிடைத்த குறியீட்டையும், சிந்துவெளி குறியீட்டையும், துருக்கியில் உள்ள கோபெக்லி டெப் (Gobekli Tepe) குறியீட்டையும் ஒத்த பாறை ஓவியங்கள் திருச்சி, புதுக்கோட்டை மாவட்ட எல்லையில் பாறையொன்றில் வரையப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆய்வு மேற்கொண்ட பாறை ஓவியங்கள் ஆய்வாளர் பாலபாரதி கூறுகையில்,

திருச்சியிலிருந்து புதுக்கோட்டை செல்லும்போது மாத்தூரிலிருந்து வலப்புறம் திரும்பி முள்ளிப்பட்டி வழியாக ஆட்டுக்காரன்பட்டிக்கு செல்லலாம். இவ்வூருக்கு தென்கிழக்கே 'காரக்காட்டுப் பாறை' என்ற இடத்தில் சிறு குன்றுப்பகுதி உள்ளது. இங்குள்ள பாறைப் பகுதியில் சிவப்புநிறத்தில் நிறைய ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. ஓவியங்கள் வரைவதற்கு ஏற்றவாறு பாறையின் மேற்பகுதியில் வரம்பு வெட்டப்பட்டுள்ளது. இவ்வாறு வெட்டப்பட்டுள்ள வரம்பினால் மழைநீர் பக்கவாட்டில் வடிந்து ஓவியங்கள் பாதுகாக்கப்படுகின்றன. நடுவில் சிவப்பு நிறத்தில் வரையப்பட்ட ஓவியங்கள் சிதைந்து வருகின்றன. ஆனால் வலப்புறத்தின் மேல் மூலையில் சில குறியீடுகள் தெளிவாக உள்ளன.

சிந்துவெளிக் குறியீடுகளுடன் ஒப்புமையுடைய சில குறியீடுகள் இங்கே காட்டப்பட்டுள்ளன. அதில் ஒரு குறியீடு கீழடி முதல்கட்ட ஆய்வில் எடுக்கப்பட்ட பானை ஓடுகளில் காணப்பட்ட குறியீடாகும். இதே குறியீடு துருக்கியிலும் காணப்படுவது ஆய்வுக்குரியது. கோபெக்லி டெப் (Gbekli Tepe) துருக்கியில் உள்ள மிகப்பழமையான பெருங்கற்கால நினைவுச் சின்னங்களை கொண்ட தொல்லியல் பகுதி ஆகும். ஆட்டுக்காரன்பட்டியில் காணப்படும் இக்குறியீடுகள் உலகின் பலபகுதிகளில் கிடைக்கும் பொதுக்குறியீடுகள் ஆகும். எனினும், அழிந்திருக்கும் ஓவியங்களை தற்காலத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திப் படிக்க வாய்ப்புள்ளது. அவ்வாறு படித்தால் பழங்காலத்தில் நிகழ்ந்த மனித பரவல்களுக்கான விளக்கங்கள் மேம்படும்.

தமிழரைத் தேடி நூலாசிரியர் தங்கவேல் இவ்வோவியங்கள் குறித்து கூறுகையில்,

துருக்கியின் கோபெக்லி நினைவுச் சின்னங்கள் 11500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை மானாவாரி விவசாயத்தை மேற்கொண்டிருந்த குடிகள் அமைத்திருக்கலாம். வழிபாட்டுக்காகப் பயன்படுத்தியிருக்கலாம் எனக் கருதப்படும் கோபெக்லி சின்னங்களை உலகில் உருவான முதல் பெருங்கல் சின்னங்கள் எனலாம். கோபெக்லி சின்னங்களை உருவாக்கிய மக்கள் குழுக்கள் தங்கள் பண்பாட்டு வளர்ச்சிப் போக்கில் பண்டமாற்று வணிகத்தைத் தோற்றுவித்தனர். பிற்காலத்தில் உலகம் முழுவதும் பரவிய பெருங்கல் சின்னங்களுக்குரிய வணிகக் குழுக்களுக்கு முன்னோடியாக கோபெக்லி மக்களைக் கூறலாம். தமிழகப் பாறை ஓவியங்களுள் சில பெருங்கற்கல்லறைப் பண்பாட்டுக்குரிய வணிக்குழுக்களுடன் தொடர்புடையவை ஆகும். அந்த வகையில் கோபெக்லியில் காணப்படும் சின்னங்கள் தமிழக பாறை ஓவியங்களிலும் காணப்படுவது இயல்பானதாகும்.

இவ்வோவியத்தைக் 20 ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடித்த குறியீட்டு ஆய்வாளர் சுபாஷ் சந்திரபோஸ் கூறும்போது, இங்குக் காணப்படும் ஓவியங்களில் பெரும்பகுதி அழிந்துவிட்டாலும், மேற்பகுதியில் காணப்படும் குறியீடுகள் அழியாமல் உள்ளது மகிழ்ச்சியளிக்கிறது. மேலும், இதைப் பாதுகாக்க தொல்லியல் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

www.aatrupadai.com




E- MAGAZINE